# உதயன்

வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.20
கொழும்பு : ரூபா.30

UTHAYAN - A Lively National Tamil Daily

பக்கம் 28 | சுடர்: 28 | கதிர்: 280 | வள்ளுவர் ஆண்டு: 2044 | ஆவணி 17, திங்கள் 02.09.2013





தியாகராஜா
துவாரகேஸ்வரன்
வடமாகாண சபை
முதலமைச்சர் வேட்பாளரும்
முதன்மை வேட்பாளரும்

X 5



தண்டிக்கும் கடமை உண்டு 05

இலங்கைக்குரிய கச்சதீவுக்கு இரு நாட்டு ஒப்பந்தம் எதற்கு? 06

சம்பியனானது யங்ஸ்ரார் 22

சிதறியது சிம்பாப்வே தொடர் பாக். வசம் 23


# நவிப்பிள்ளையின் கருத்து உண்மைக்குப் புறம்பானது

## அரச தரப்பு தெரிவிப்பு

கொழும்பு, செப்ரெம்பர் 2

இலங்கை எதேச்சதிகாரப் பாதையில் பயணிக்கின்றது என்று ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை கருத்து வெளியிட்டுள்ளார். ஆனால் உண்மையில் இங்கு அப்படி எந்தவொரு எதேச்சதிகார நடவடிக்கைகளும் இடம்பெறவேயில்லை. ஆனால், நவநீதம்பிள்ளை இப்படித் தான் சொல்வார் என்று எமக்கு முன்னரே தெரியும் - என்று தெரிவித்துள்ளார் அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல.

இலங்கை தொடர்பான நவநீதம்பிள்ளை வெளியிட்ட கருத்துகள் பற்றி அமைச்சர் கெஹலிய தெரி வித்துள்ளதாவது:

"ஐ.நா. மனித உரிமைகள் ஆணையர் நவநீதம்பிள்ளை வெளிப்படுத்தியுள்ள இந்தக் கருத்து ஏற்கனவே எதிர்பார்க்கப்பட்டதுதான். அவர் கூறியது போன்று இலங்கை யில் எதேச் சதிகாரம் நடைமுறையில் இல்லை.

எதேச்சாதிகார பாதையில் இலங்கை செல்வதாக நவநீதம்பிள்ளை கருத்துக் கூறியிருக்கிறார். இதைவிட வேறு வகையான அவரது நிலைப்பாட்டை நாம் எதிர்பார்க்கவில்லை.

ஐ.நா, மனித உரிமைகள் ஆணையாளரின் கருத்து. ஏற்கனவே திட்டமிடப்பட்ட மறைமுக நிகழ்ச்சிநிரல் ஒன்றின் வெளிப்பாடு தான்.



பயங்கரவாதத்தின் மூலம் இலங் கையின் உறுதித்தன்மையை சீர்குலைக்க எடுக்கப்பட்ட முயற்சிகள் தோல்வியடைந்து விட்டன. ஆனாலும் அவற்றை அனைத்துலக மட்டத்தில் தொடர்ந்தும் முன்னெடுக்கப் பார்க்கிறார்கள்.

விடுதலைப் புலிகள் இராணுவ ரீதியில் தோற்கடிக்கப்பட்டாலும், அவர்களின் கருத்துகளை இன்னும் முன்னெடுத்துச் செல்லும் திட்டமிட்ட நிகழ்ச்சி நிரல்கள் முன்னெடுக்கப்படுகின்றன என்பது தெளிவாகத் தெரிகிறது.

இலங்கைப் போரின் போது. அனைத்துலக அழுத்தங்களை எவ்வாறு எதிர்கொண்டதோ, அது போலவே இப்போதும் இலங்கையின் பதில் நடவடிக்கைகள் இருக்கும். விடுதலைப் புலிகளுடனான போரின்போது அனைத்துலக அமைப் புகள் கடுமையான அழுத்தங்களை கொடுத்தன.

முப்படைகளின் தளபதி என்ற வகையில் ஜனாதிபதி, மக்களின் ஆணைபெற்ற கட்சியின் அரசு என்ற வகையில் திடமான முடிவுகளை எடுக்காமல் அனைத்துலக மட்டத் தில் உள்ள சிலரை மகிழ்ச்சிப் படுத்தும் வகையில் செயற் பட்டிருந்தால் இன்றும் போர் முடிந்திருக்காது. இனிவரும் சவால்களையும் அதே போலவே எதிர்கொள்வோம்" என் றும் கெஹலிய ரம்புக்வெல தெரி வித் துள்ளார்.

(ங-சி)

# காணாமற்போனவர் மீட்கப்பட்டார் சடலமாக

வலி.வடக்கு செப். 2

நேற்றுமுன்தினம் காணாமற்போனதாக தேடப்பட்ட குடும்பஸ்தர் நேற்று மாலை தோட்ட வெளி ஒன்றில் சடலமாக மீட்கப்பட்டார்.

உயர் பாதுகாப்பு வலயமான தையிட்டியில் இருந்து இடம்பெயர்ந்து கோண்டாவிலில் வசித்து வந்த கணபதிப்பிள்ளை சீனிவாசகம் (வயது -50) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவ ராவார்.

குறித்த சடலம் தோட்ட வெளியில் இருப்பது குறித்து தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து கோப்பாய் பொலிஸார் அங்கு சென்று சடலத்தை பார்வையிட்டனர்.

குறிப்பிட்ட சடலத்தின் கால்களில் பெரிய காயங்கள் காணப்படுகின்றன. குறித்த நபர் இறந்த பின்னர் அவரது சடலத்தை நாய்கள் கடித்துக் குதறியதாலேயே இந்தக் காயங்கள் ஏற்பட்டிருக்கலாம் என்று தொவிக்கப்படுகின்றது. (ங-86)

# சர்வதேசப் போர்க்குற்ற விசாரணை இலங்கை சந்தித்தேயாக வேண்டும்

### நவிப்பிள்ளையின் வருகையால் நம்பிக்கை – கூட்டமைப்பு

கொழும்பு, செப். 2

"இலங்கை அரசு எம்படியும் சர்வதேசப் போர்க்குற்ற விசாரணையை எதிர்கொண்டே தீரும். இந்த நம்பிக்கையை நவநீதம்பிள்ளையின் வருகை அதிகப்படுத்தியுள்ளது. நவநீதம்பிள்ளையை இலங்கைக்கு அழைத்த அரசு, அவரை அநாகரிகமான முறையில் நடத்தியமையால் நாட்டுக்குப் பெரும் அவமானம் ஏற்பட்டுள்ளது" என்று தெரிவித்துள்ளது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு .

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் இலங்கைப் பயணம் குறித்து கருத்துத் தெரிவிக்கும் போதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கோத்தபாயவின் சகோதரரும், ஜனாதிபதியுமான இலங்கை மஹிந்த ராஜபக்ஷ நியமித்த நல்லிணக்க ஆணைக் குழு வடக்கு, கிழக்குக்குச் சென்று மக்களைச் சந்தித்து தரவுகளைப் பெற்றிருந்தது. இதன்போது பல்லாயிரக் கணக்கானோர் போர் காலத்தில் காணாமல்போயுள்ளனர் என்று காணாமற்போனவர்களின் உறவினர்கள் நேரடியாகத் தெரிவித்துள்ளனர்.

இதனை அறிக்கையூடாக நல்லிணக்க ஆணைக்குழு வெளியிட்டுள்ளது. அதேவேளை, ஐ.நாவிலும் வடக்கு. கிழக்கில்

தொடர்ச்சி: பக்கம் 21

# இராணுவத்தை அகற்ற நவிக்கு என்ன அதிகாரம்?

### தேசப்பற்று இயக்கம் கேள்வி

கொழும்பு, செப்.2

நந்திக்கடலில் பிரபாகரனுக்கு அஞ்சலி செலுத்த முயற்சித்த நவநீதம்பிள்ளைக்கு வடக்கிலுள்ள இராணுவம் தொடர்பில் கருத்து வெளியிடுவதற்கு எவ்வித அதிகாரமுமில்லை என்று தெரிவித் துள்ளது தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம்.

இது குறித்து தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் கலாநிதி குணதாச அமரசேகர தெரிவித்ததாவது:

"வடக்கு, கிழக்கில் இராணுவப் பிரசன்னம் குறைக்கப்பட வேண்டும் என்று பரிந்துரை முன் வைப்பதற்கு நவநீதம்பிள்ளைக்கு எவ்வித அதிகாரமும் கிடையாது. தேசிய பாதுகாப்புத் தொடர்பில் ஆட்சியிலிருக்கும் தரப்பே முடிவெடுக்க வேண்டும்.

வன்னி பயணத்தின்போது நந்திக்கடலில் பிரபாகரனுக்கு மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்து வதற்கு நவநீதம்பிள்ளை முயற்சித்துள்ளார். எனினும், அதற்கு அரசு கடும் எதிர்ப்பை வெளியிட்டதால் திட்டம் கைவிடப்பட்டுள்ளது.

சர்வதேச ரீதியில் இலங்கையின் செயற்பாடுகளைக் கடுமையாக விமர்சிக்கும் நவநீதம்பிள்ளையின் செயற்பாடுகள் என்றுமே அரசுக்கு எதிராகவே இருக்கும்" என்றார்.

தொடர்ச்சி: பக்கம் 21

# வடமாகாணத்தில் இதுவரை 43 தேர்தல் முறைப்பாடுகள்

யாழ்ப்பாணம், செப். 2

தேர்தல் விதிமுறைமீறல் மற்றும் வன்முறைகள் தொடர்பான 251 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. அவற்றில் வடமாகாணத்தில் 43 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன. இதேவேளை தேர்தல் நடவடிக்கைகளில் படையினரின் தலையீடு தொடர்பாக 7 முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று 'கபே' அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கோன் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரச சொத்துக்கள் துஷ்பிரயோகம், அரச ஊழியர்களை தேர்தல் பிரசாரங்களுக்குப் பயன்படுத்துதல், தேர்தல் காலமான தற்போது அரச ஊழியர் இடமாற்றம் மற்றும் நியமனம் தொடர்பில் மூன்று மாகாணங்களிலிருந்தும் 90 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன.

வடக்கில் தேர்தல் விதிமுறை மீறல்கள் தொடர்பாக 37 முறைப்பாடுகளும் வன்முறைகள் தொடர்பில் 6 முறைப்பாடுகளும் பதிவாகியுள்ளன.

இவற்றுள் விதிமுறை மீறல்கள் தொடர்பில் யாழ்ப்பாணம் -18 , கிளிநொச்சி -3 , முல்லைத்தீவு - 4, வவுனியா - 4, மன்னார் - 2 முறைப்பாடுகளும் பதிவாகியுள்ளன. வன்முறைகள் தொடர்பில் யாழ்ப்பாணம் - 5 , வவுனியா - 1 முறைப்பாடும் கிடைத்துள்ளன.

இதேவேளை, தேர்தல் நடவடிக்கைகளை படையினரின் தலையீடுகள் தொடர்பாக இதுவரை 7 முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன-என்றார். (ங-4)

# சூடு பிடிக்கும் தேர்தல் களம் வடக்கில் பிரசாரம் தீவிரம்

### கூட்டமைப்பின் விஞ்ஞாபனம் நாளைமறுதினம் வெளியீடு

கொழும்பு, செப்.2

வடக்கு மாகாணசபைத் தேர்தல் களத்தில் பிரசார நடவடிக்கைகள் சூடுபிடிக்கத் தொடங்கியுள்ளன. தேர்தலில் போட்டியிடும் கட்சிகள் போட்டி போட்டுக்கொண்டு மக்களின் வாக்குகளைப் பெறுவதற்கான நடவடிக்கைகளில் முனைப்புக் காட்டத் தொடங்கியுள்ளன. இந்த நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தன்னுடைய தேர்தல் விஞ்ஞாபனத்தை நாளை மறுதினம் வெளியிடவுள்ளது.

செப்ரெம்பர் 21 ஆம் திகதி மூன்று மாகாணசபைக ளுக்குத் தேர்தல் நடைபெற்றாலும் வடக்கு, வடமேல் மாகாணங்க ளில் கட்சிகளி டையே கடும் போட்டிநிலவுகின்றது. வடக்கை மையமாகக் கொண்டு தேர்தல் பிரசார நடவடிக்கைகளை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியும், ஐ.தே.கவும், கூட்டமைப்பும் முடுக்கியுள்ளன. ஏனைய மாகாணங்களில் நடைபெற்ற தேர்தல்களில் வெற்றி ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வடமாகாணத்தையும் கைப்பற்றும் நோக்கோடு செயற்பட்டு வருகிறது.

இதேவேளை, நாட்டின் பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.கவும் குறிப்பிடக்கூடிய ஆசனங்களை வடமாகாணத் தில் பெற்றுவிட திட்டமிட்டுள்ளது.

வடபகுதியில் நடைபெற்ற தேர்தல்களின் தொடர்ந்து வாகை சூடிவரும் தமிழ்த்

தொடர்ச்சி: பக்கம் 21

# வடக்கில் இந்திய புலனாய்வாளர்கள்

### கண்காணிப்பு தீவிரம் என்கிறார் வன்னித் தளபதி

யாழ்ப்பாணம்.செப்.02



வர்த்தகர்கள் என்ற பெயரில் இந்தியாவிலிருந்து வரும் புலனாய்வு அதிகாரிகள், வடக்கின் நிலவரங்களை புலனாய்வு செய்து வருகின்றனர் என்ற சந்தேகம் எழுந்துள்ளது- இவ்வாறு வன்னி கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் பொனிபஸ் பெரேரா தெரி வித்துள்ளார்.

ஓமந்தைச் சோதனைச் சாவடி ஊடான போக்குவரத்து சோதனை தளர்வு குறித்து கருத்து வெளியிடும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதன்போ்து அவர் மேலும் தெரிவித்தமை வருமாறு.

வெளிநாட்டு கடவுச் சீட்டுக்களைக் கொண்டுள்ள வெளிநாட்டுப் பிரஜைகள் பலர் அன்றாடம் ஓமந்தை சோதனைச் சாவடி

தொடர்ச்சி: பக்கம் 21

# நவநீதம்பிள்ளையின் கருத்துக்களில் ஐ.நா. கவனம் செலுத்த வேண்டும்

## சர்வதேச மன்னிப்புச் சபை கோரிக்கை

கொழும்பு.செப்.02
ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் கருத்துக்கள் குறித்து ஐக்கிய நாடுகள் சபை கவனம் செலுத்த வேண்டுமென சர்வதேச மன்னிப்புச் சபை வலியுறுத்தியுள்ளது.
இதுகுறித்து மன்னிப்பு சபை விடுத்துள்ள அறிக்கையில்,
இலங்கைக்கான பயணத்தை முடித்துக் கொண்டு நாடு திரும்பும் தருணத்தில் நவநீதம்பிள்ளை, மாற்றுக் கருத்துக்களை வெளியிடும் தரப்பினர் ஒடுக்குமுறைக்கு உட்படுத்தப்படுவதாகவும் தம்மை சந்தித்த சிலருக்கு அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டு வருவதாகவும் கருத்துக்களை வெளியிட்டிருந்தார்.
இவை குறித்து ஐக்கிய நாடுகள் அமைப்பும், பொதுநலவாய நாடுகள் அமைப்பும் கவனம் செலுத்த வேண்டும்.
பாதிக்கப்பட்டவர்களை நவநீதம்பிள்ளை சந்தித்தமை மகிழ்ச்சி அளிக்கிறது. ஆனால் அந்த மக்கள் மீது அடக்குமுறைகள் பிரயோகிக்கப்படுவதை ஏற்றுக் கொள்ள முடியாது.
கடந்த காலக் குற்றச் செயல்கள் தொடர்பிலான பிரச்சினைகளுக்கு உரிய பதிலளிக்க வேண்டுமென்ற முனைப்பு இலங்கை அரசிடம்கிடையாது. எனவே சர்வதேசமே இதில் அக்கறை செலுத்த வேண்டும் - என சர்வதேச மன்னிப்புச் சபை சுட்டிக்காட்டியுள்ளது. (ஐ)



சுடர் ஒளி பத்திரிகையின் ஆதரவுடன் மூளாய் ஹரிகர புத்திர ஐயனார் ஆலயம் மற்றும் காயத்திரி அம்மன் ஆலயம் என்பவற்றின் கட்டட நிதி திரட்டலுக்காக பொன்னாலை மான்பாய்ந்த வெளித்திடலில் மாபெரும் மாட்டு வண்டிச் சவாரி நேற்று இடம்பெற்றது. இதில் வெற்றியீட்டிய ஒருவருக்கு நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் பரிசு வழங்குகிறார். (ங)

# ரிஷானா அறக்கட்டளை உருவானது



கொழும்பு.செப்.02
சவுதியில் மரணதண்டனை விதிக்கப்பட்ட மூதூரைச் சேர்ந்த ரிஷானா நஃபிக்கின் பெயரில், வறிய பெண்களுக்கு உதவும் பொருட்டு அறக்கட்டளை ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. இதன் ஆரம்ப வைபவம் மூதூரில் நேற்று நடைபெற்றது.
சவுதியில் மருத்துவராகப் பணிபுரியும், ஹிஃபாயா இஃதிகர் தலைமையில் இந்த அறக்கட்டளை நிதியம் உருவாக்கப்பட்டுள்ளது.
நேற்று நடைபெற்ற ஆரம்ப நிகழ்வில் கலந்துகொண்ட சவுதி மருத்துவர் ஹிஃபாயா இஃதிகர் கருத்து தெரிவிக் கையில்.
வறுமை போன்ற நிலைமைகளே ரிஷானா போன்ற பெண்களை வாழ்க்கையின் மிகவும் சிக்கலான நிலைமைக்கு தள்ளுகிறது.
இலங்கையில் இப்படியான நிலைமை ஏனைய பெண்களுக்கு ஏற்படாமல் தடுப்பதற்கான முயற்சியே இந்த அறக்கட்டளையின் நோக்கம்.
வெளிநாடுகளுக்கு வேலைக்குச் செல்லும் அனைத்துப் பெண்களையும் தம்மால் தடுக்க முடியாவிட்டாலும், வயது குறைந்தவர்கள், பயிற்சி இல்லாதவர்கள் ஆகியவர்களையாவது இதன் மூலம் தடுக்க முயற்சிப்போம்- என்றார். (ஐ)

# 7 இரகசிய அறிக்கைகள் நவநீதம்பிள்ளையிடம்

## தொண்டு அமைப்புக்கள் சமர்ப்பித்தன

கொழும்பு.செப்.02
ஐ.நா.மனிதஉரிமைகள்ஆணையாளர் நவநீதம்பிள்ளை இலங்கையில் இருந்து புறப்பட்டுச் செல்லும் முன்னர் புலிகளின் ஆதரவாளர்கள், அரசசார்பற்ற நிறுவனங்களின் செயற்பாட்டாளர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினர் ஏழு இரகசிய அறிக்கைகளை வழங்கியுள்ளதாக கொழும்பு சிங்களப்பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.
இந்த ரகசிய அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்களை, எதிர்வரும் 2014 ஆம் ஆண்டு மார்ச் மாதம் நடைபெறவுள்ள மனித உரிமைகள் சபைக் கூட்டத்தில் நவிப்பிள்ளை சமர்ப்பிக்கும் அறிக்கையில் சேர்த்துக்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அந்த பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.
இதில்.புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல்துறை பொறுப்பாளர் எழிலனின் மனைவி ஆனந்தி, போரின் இறுதிக்கட்டத்தில் தான் நேரில் கண்டவைகளை உள்ளடக்கித் தயாரித்துள்ள அறிக்கை, கிழக்கில் நடந்ததாகக் கூறும் சம்பவங்கள் தொடர்பான திருகோணமலையை சேர்ந்த அரசசார்பற்ற நிறுவனத்தின் இரண்டு அறிக்கைகள் என்பனவும் இதில் அடங்கும் என தெரிய வந்துள்ளது.
அறிக்கைகளை கையளித்துள்ள ஏழு அரசசார்பற்ற நிறுவனங்களில் ஒரு நிறுவனம், தமிழ்நெற் இணையத்தளத்தை பார்வையிட முடியாதவாறு இலங்கை அரசு தடை செய்துள்ளதாக நவநீதம்பிள்ளையிடம் கூறியுள்ளது- எனவும் அந்த பத்திரிகை செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)



சுனாமியால் சேதமடைந்த வாகரை புனித பீற்றர் தேவா லயம், மீள்நிர்மாணிக்கப்பட்ட நிலையில், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் நேற்று திறந்துவைக்கப் பட்டது. (ஐ)

# அரசில் நம்பிக்கை இல்லை ஐ.நாவிடம் முறையிட்டோம்

## வெலிவேரிய விகாராதிபதி தெரிவிப்பு

கொழும்பு, செப்.2
"நிறைவேற்று அதிகாரத்தைத் தக்க வைக்க ஆட்சி நடத்தும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ ஆகியோர் வெலிவேரிய மக்களின் குடிதண்ணீர் பிரச்சினைக்குத் தீர்வு வழங்கமாட்டார்கள். அதனால் தான் நாம் ஐ.நாவிடம் முறையிட் டோம்."
இவ்வாறு ரத்துபஸ்வெல விகாராதிபதி வண. தெரியே சிங்தம்ம தேரர் 'உதயனி'டம் தெரிவித்தார்.
வெலிவேரிய சம்பவம் தொடர்பில் அரசு மேற்கொண்டுவரும் நடவடிக்கைக்குக் கடும் எதிர்ப்பு வெளியிட்ட அவர், தொழிற்சாலை குறித்த பக்கச் சார்பற்ற விசாரணை நடத்தி உண்மைகள் வெளிக்கொணரப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.
இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

### இடமளியோம்

ரத்துபஸ்வெல தொழிற் சாலையின் பணிகள் மிக இரகசியமான முறையில் ஆரம்பிக்கப்பட்டன. இதனை எதிர்த்து தான் நான் மறுபடியும் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டேன். இருப்பினும், கொழும்பு மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் அநுர சேனநாயக்க என்னிடம் வழங்கிய உறுதிமொழிக்கு அமையவே போராட்டத்தைக் கைவிட்டேன்.
தொழிற்சாலை மறுபடியும் திறக்கப்பட்டால், தொழிற் சாலையை முற்றுகையிட்டு அங்கிருக்கும் அதிகாரிகளை பணயக் கைதிகளாக சிறைபிடிப்போம்.
குடிதண்ணீர் பிரச்சினைக்குத் தீர்வு வழங்கவே அரசு ஒரு மாதமாக இழுத்தடித்துக் கொண்டிருக்கின்றதெனில், வேறு ஏதாவது கேட்டால் என்ன நடக்கும்? எவ்வளவு காலம் எடுக்கும்?

### அரசு மீது திருப்தி இல்லை

எமது மக்களின் குடிதண்ணீர்ப் பிரச்சினைக்குத் தற்காலிகத் தீர்வு வழங்கும் வகையில் குழாய்கள் மூலமாக அரசு குடிதண்ணீரை வழங்குகிறது.
இது எமக்குப் போதவே போதாது. அதனால் இம்மாதம் முடிவதற்குள் எமக்கு சுத்தமான குடிதண்ணீரைப் பெற்றுத் தருவதற்கு அரசு முதற்கட்ட நடவடிக்கையையாவது ஆரம்பிக்க வேண்டும்.

### நவநீதம்பிள்ளைக்கு நன்றி

நிறைவேற்று அதிகாரத்தைத் தக்க வைத்துக் கொள்வதற்காகச் செயற்படும் ராஜபக்ஷ குடும்பத்தால் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியாது. தீர்வு காணவும் மாட்டார்கள். அதனால்தான் நாம் ஐ.நாவிடம் முறையிட்டோம்.
இதனைக் கருத்திற்கொண்டு அரசுக்கு ஐ.நா. அழுத்தம் கொடுக்க வேண்டும். மேலும் வெலிவேரிய சம்பவம் தொடர்பில் அவதானம் செலுத் திய ஐ.நா. மனித உரிமைகள் ஆணை யாளர் நவநீதம் பிள்ளைக்கு நன்றி தெரிவிக்கிறோம்" என்றார். (ஐ-சி

# இலங்கையில் விடுதலைப் புலிகள் இன விடுதலைக்காகப் போராடினர்

## நேபாள மாவோயிஸ்ட் தலைவர் கருத்து

நேபாள், செப்.2
விடுதலைப் புலிகள், இன விடுதலைக்காக போராடியவர்கள். அந்த அமைப்பு ஒரு துணிச்சல் மிக்க அமைப்பு. நேபாளத்தில் நடந்த தசாப்த கால ஆயுத மோதல்களின் போது, தமது கட்சிக்கும் , இலங்கை யின் விடுதலைப் புலிகளுக்கும் தொடர்பு இருந்தது. இவ்வாறு தெரிவித்துள்ளார் நேபாள மாவோயிஸ்ட் தலைவர்புஷ்பகமால் தாஹால்.
இந்த செய்தியை நேபாள் ரெலிகிராப் இணையத்தளம் வெளியிட்டுள்ளது. அந்த செய்தியில், நேபாள தலைநகர் காத்மண்டுவில் மாவோயிஸ்ட் கட்சியின் நிகழ்வொன்றில் உரையாற்றிய போதே அவர் இதனை கூறியுள்ளார்.
விடுதலைப் புலிகள், இன விடுதலைக்காக போராடியவர்கள். அவர்களது விடுதலைப் போராட்டம் போல் நேபாளத்தில் நடந்த கிளர்ச்சியும் தேசிய விடுதலைக்கான போராட்டமாகும்.
விடுதலைப் புலிகள் மாவோயிஸ்ட்களிடம் இருந்து உதவியை நாடினர். விடுதலைப் புலிகள் தற்போது செயலற்று இருந்தாலும் அந்த அமைப்பு ஒரு துணிச்சல் மிக்க அமைப்பு. விடுதலைப் புலிகள் அட்டூழியங்களுக்கு எதிராக போராடியவர்கள்.
விடுதலைப் புலிகளிடம் இருந்து மாவோயிஸ்ட் அமைப்பு உதவிகளை பெற்றது.
இந்த நிலையில் விடுதலைப் புலிகளை அடக்க சீனா இலங்கைக்கு உதவியது கவலையளிக்கிறது-எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.
மாவோயிஸ்ட் தலைவரான பிரச்சண்டா 2008 ஆம் ஆண்டில் நேபாளத்தின் பிரதமராக பதவியேற்றார். பின்னர் நேபாள ஜனாதிபதியுடன் ஏற்பட்ட முரண்பாட்டை அடுத்து பதவி விலகினார் என்பது குறிப்பிடத் தக்கதுஎன்று குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)

நல்லை முருகன் திருவிழாவை முன்னிட்டு
மலிவு விற்பனை
அண்ணா உற்பத்தி பொருள்கள் யாவும் மலிவு விலையில் விற்பனை செய்யப்படுகின்றன. அத்துடன் ரூபா 200/=செலுத்தி இனாம் பொருள்கள் அடங்கிய பையைப் பெற்றுக் கொள்ளலாம்.
அண்ணா விற்பனை நிலையம்,
பருத்தித்துறை வீதி, நல்லூர்.
(சி/11718)

அதிநவீன Pasteurized And Homogenized முறைப்படி தயாரிக்கப்பட்ட 100%
சுகாதாரமான ஊட்டச்சத்துக்கள் நிறைந்த ஐஸ்கிறீம் வகைகள் எமது அறிமுக விலையில்
நல்லூர் விற்பனை நிலையத்தில் சுவைத்து மகிழலாம்.
பெறுமதிமிக்க பரிசில்கள் உங்களுக்காகக் காத்திருக்கின்றன.
Rs.10
ஷைலோ ஐஸ்கிறீம்
No.231, Temple Road, Nallur, Jaffna.
T.P. : 021 492 6003

உள்ளூர் சேவையில் ஈடுபடும்

## தனியார் பஸ்களுக்கு போதிய இடவசதியில்லை



யாழ்ப்பாணம், செப்.2
யாழ். மின்சார நிலைய வீதியில் உள்ளூர் சேவையில் ஈடுபடும் தனியார் பஸ்களுக்கு போதிய இடவசதிகள் ஒதுக்கப்படாத காரணத்தால் அந்தப் பகுதி வீதியில் வாகன நெரிசல் ஏற்பட்டுள்ளது.

உள்ளூர் சேவையில் ஈடுபடும் காரைநகர், பருத்தித்துறை, கொடிகாமம், மாதகல், இளவாலை, குறிகாட்டுவான் ஆகிய இடங்களுக்கான தனியார் சேவைத் தரிப்பிடம் ஏற்கனவே யாழ்.மத்திய பஸ் தரிப்பிடத்துக்கு அருகில் உள்ள மின்சார நிலைய வீதியில் ஒதுக்கப்பட்டிருந்தது.

இதனால் குறித்த சேவைகள் இந்த வீதியில் இருந்தே ஈடுபட்டுவந்தன. எனினும்இலங்கை போக்குவரத்துச் சபையுடன் ஏற்பட்ட பிரச்சினை காரணமாக தனியார் பஸ்கள் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டு அதே இடத்தில் மீண்டும் தரிப்பிடத்தை பெற்றுக் கொண்டன. குறித்த பகுதியில் தற்போது 8 தனியார் பஸ்கள் குறுகிய இடத்துக்குள் வீதியின் சரிவாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

இதனால் பஸ்களை ஒன்றையொன்று திருப்புவதற்கு வாகனச் சாரதிகள் கஷ்டப்படுவதுடன் குறித்த வீதியில் வாகன நெரிசலும் அதிகமாக ஏற்பட்டுள்ளன.

நகரின் மத்திய பஸ்தரிப்பிடத்தில் இவ்வாறான வாகன நெரிசல் ஏற்பட்டுள்ளதால் வைத்தியசாலைக்கு நோயாளர்களைப் பார்வையிடச் செல் லும் பாதசாரிகள் உட்பட குறித்த வீதியால் பயணிக்கும் வாகனங்களும் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொண்டுள்ளன.

(வ-14)

## கைதிக்கு கொண்டு சென்ற உணவுப் பார்சலுக்குள் கைபேசி; பெண் கைது

யாழ்ப்பாணம், செப்.2
யாழ். சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதி ஒருவருக்கு உணவுப் பார்சலுக்குள் மறைத்து வைத்து கைத்தொலை பேசியைக் கொடுக்கச் சென்ற குற்றச்சாட்டில் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டு யாழ். நீதிமன்றில் முற்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதியின் தாயாரே இந்தக் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டவர் ஆவார்.

குறித்த கைதி குற்றச்சாட்டு தொடர்பில் யாழ்.சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

கைதிக்கு அவரது தாயார் மதிய உணவு கொண்டு சென்றுள்ளார். சிறைச்சாலைக் காவலாளிகள் வழமை போன்று உணவுப் பார்சல்களைப் பரிசோதித்தனர். அதன் போதே உணவுடன் கொண்டு சென்ற கறியினுள் கைத்தொலைபேசி ஒன்று இருந்தமை கண்டறியப்பட்டது.

அதனை மீட்ட பாதுகாப்பு ஊழியர்கள் அந்த உணவுப் பொதியைக் கொண்டு சென்ற பெண்ணைப் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

(வ-4)

## ரயில்பாதை புனரமைப்பின்போது மூடப்படும் வீதிகளுக்கு மாற்றுப்பாதை

ரயில்பாதை புனரமைப்பு திட்ட முகாமையாளர் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், செப். 2
வடபகுதிக்கான ரயில் பாதை அமைக்கப்படும் போது ரயில் வீதிக் கடவை மூடப்பட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டால் மாற்றுப் பாதைகளை அமைத்துக் கொடுப்பதற்கு ரயில்வே திணைக்களம் நடவடிக்கை எடுக்கும் என்று பளை- காங்கேசன் துறைக்கான ரயில் பாதைப் புனரமைப்பு திட்ட முகாமையாளர் கே.பிறேம்குமார் தெரிவித்தார்.

சாவகச்சேரி பிரதேச சபைக்கு உட்பட்ட ரயில் பாதைப் புனரமைப்பின் போது வீதிக் கடவைகள் சில மூடப்பட்டு வருவதால் அந்தப் பகுதி மக்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ள நிலையில் அது தொடர்பான கலந்துரையாடல் கடந்த 29 ஆம் திகதி சாவகச்சேரி பிரதேச சபை மண்டபத்தில் இடம்பெற்றது.

இதன்போது கலந்து கொண்ட பிரதேச மக்கள் கொடிகாமம், மிருசுவில் வீதிக் கடவை மூடப்படுவது தொடர்பாக கேள்வி எழுப்பிய போது அதற்கு பதில் அளிக்கும் வகையில் அவர் இதனைத் தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

ரயில் பாதைப் புனரமைப்பின் போது வீதிக் கடவைகள் மூடப்பட வேண்டிய தேவை ஏற்பட்டால் அதற்கான மாற்றுப் பாதைகள் அமைக்கப்படும். தற்போது அமைக்கப்பட்டு வரும் ரயில் பாதைகள் சுமார் ஒரு மீற்றர் உயரத்துக்கு உயர்த்தி அமைக்கப்பட வேண்டி இருப்பதுடன் கடவைகளும் அமைக்கப்பட வேண்டியுள்ளன.

இந்த நிலையில் கொடிகாமம், மிருசுவில் ஆகியவற்றின் ரயில் வீதிக் கடவைகள் மூடப்படும்போது, இரு ரயில் நிலையங்களுக்கும் ஓரமாக மாற்றுப் பாதைகள் அமைக்கப்படும்-என்றார்.

சாவகச்சேரி பிரதேச சபைத் தலைவர் சி.துரைராசா தலைமையில் நடைபெற்ற மேற்படி கலந்துரையாடலில் ரயில் திணைக்களப் பொறியியலாளர் றொகான் அமரசிங்க மற்றும் பிரதேச மக்களும் கலந்து கொண்டனர்.

(வ-14,122)

> **கொடிகாமம், மிருசுவில் ஆகியவற்றின் ரயில் வீதிக் கடவைகள் மூடப் படும் போது, இரு ரயில் நிலையங்க்ளுக்கும் ஓரமாக மாற் றுப் பாதைகள் அமைக் கப்படும்**

TNA
Tamil National Alliance
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு
தேர்தல் பரப்புரை

பிரசாரக் கூட்டமும் வேட்பாளர் அறிமுகமும்

இடம் : வழக்கம்பரை முத்துமாரியம்மன் திறந்தவெளி அரங்கு
காலம் : 03.09.2013 செவ்வாய்க்கிழமை மாலை 5.00 மணி

தலைவர் : திருமதி நா. ஐங்கரன் (தவிசாளர் வலி.தெற்கு பிரதேச சபை)

சிறப்புரைகள் :
கௌரவ இரா. சம்பந்தன் (நாடாளுமன்ற உறுப்பினர்)
கௌரவ மாவை.சேனாதிராஜா (நாடாளுமன்ற உறுப்பினர்)
கௌரவ க.வி. விக்னேஸ்வரன் (முதலமைச்சர் வேட்பாளர்)
கௌரவ சுரேஷ் பிரேமச்சந்திரன் (நாடாளுமன்ற உறுப்பினர்)
கௌரவ ஈ. சரவணபவன் (நாடாளுமன்ற உறுப்பினர்)
கௌரவ எம்.ஏ. சுமந்திரன் (நாடாளுமன்ற உறுப்பினர்)
கௌரவ தர்மலிங்கம் சித்தார்த்தன் (முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்)
கௌரவ வீ. ஆனந்தசங்கரி (முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்)
[illegible]ளரவ எம்.கே. சிவாஜிலிங்க[illegible]னாள் நாடாளுமன்ற உறுப்பினர்)



இன்னிசை நிகழ்ச்சி: சாந்தன் இசைக்குழுவினர்
அன்புடன் அழைக்கின்றோம்.

TNA தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு TNA தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு TNA தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு TNA தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு TNA தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

# இலங்கையின் கோர முகத்தை அம்பலப்படுத்தினார் நவி

## பா.ம.க. நிறுவுநர் ராமதாஸ் தெரிவிப்பு



சென்னை, செப்.2
இலங்கையின் கோர முகத்தை அம்பலமாக்கியுள்ளார் ஐ.நா. மனித உரிமை ஆணைய தலைவர் நவநீதம்பிள்ளை. இதன் மூலம், நிலைமை நன்றாக உள்ளதாகக் கூறிய மத்திய வெளியுறவுத் துறையின் பொய்யும் அம்பலமாகியுள்ளது என்று பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவுநர் மருத்துவர் ராமதாஸ் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இலங்கையில் நடந்த போர்க் குற்றங்கள் குறித்து கடந்த ஒரு வாரமாக அந்த நாட்டில் விசா ரணை நடத்திய ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் நவநீதம் பிள்ளை, அங்கு நிலவும் சூழல் குறித்து அதிர்ச்சி நிறைந்த உண்மைகளைக் கூறியுள்ளார். அதன் மூலம் இலங்கையின் கோர முகம் அம்பலமாகியுள்ளது. இலங் கையில் போர் வேண்டுமானால் முடிவடைந்திருக்கலாம். ஆனால் அங்கு ஜனநாயகம் தொடர்ந்து நசுக்கப்படுகிறது; சட்டத்தின் ஆட்சி அழிந்து வருகிறது என்று நவநீதம்பிள்ளை கூறியுள்ளார்.

இலங்கை சர்வாதிகார ஆட்சி முறையை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது; இலங்கையின் நிலை குறித்து என்னிடம் புகார் கூறிய மனித உரிமை ஆர்வலர்களும், பொதுமக்களும் இராணுவத்தினரால் மிரட்டப்பட்டிருக்கிறார்கள்; இலங்கையில் நான் இருக்கும்போதே இந்த அளவுக்கு மனித உரிமை மீறல்கள் நடந்திருப்பது கண்டிக்கத்தக்கது என் றும் அவர் குற்றப்பத்திரிகை வாசித்திருக்கிறார்.

இலங்கைப் போரின்போது அப்பாவி மக்கள் படுகொலை செய் யப்பட்டது, விடுதலைப் புலிகளுக்கும், அவர்களின் ஆதரவாளர்களுக்கும் விசாரணையின்றி மரண தண்டனை அளிக்கப்பட்டது, வெள்ளை வானில் ஆள்கள் கடத் தப்பட்டது, இராணுவமயமாக் கலால் தமிழ் பெண்களுக்கு ஏற்பட்ட பாதிப்பு, பத்திரிகையாளர்களுக்கு எதிரான அடக்குமுறை ஆகிய மனித உரிமை மீறல்கள் குறித்து நம்பகமான விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும் நவநீதம்பிள்ளை வலியுறுத்தியுள்ளார்.

இலங்கையில் போர் முடிவடைந்து 4 ஆண்டுகள் ஆகிவிட்ட நிலை யில், அங்கு நிலைமை சீரடை வதற்கு மாறாக சீரழிந்து வருகிறது என்பது நவநீதம்பிள்ளையின் அறிக்கையின் மூலமாக உறுதியாகியிருக்கிறது. இலங்கையில் நிலவும் மிக மோசமான மனித உரிமைச் சூழல் குறித்து சான்றளிக்க ஐ.நா. மனித உரிமை ஆணை யரை விட சிறந்த ஒருவர் இருக்க முடியாது. போருக்குப் பின்னர் இலங்கையில் நிலைமை மேம்பட்டு வருவதாக கூறி வந்த இந்திய வெளியுறவுத் துறையினரின் முக மூடி இதன் மூலம் கிழிக்கப்பட்டிருக்கிறது.

கொழும்பில் செய்தியாளர்களிடம் பேசும்போது நவநீதம்பிள்ளை முன்வைத்த குற்றப்பத்திரிக்கையில் இடம்பெற்றுள்ள குற்றச் சாட்டுகள் மிகவும் கடுமையானவை. இதற்கான ஆதாரங்கள் தெளிவாக இருப்பதாகவும் அவர் கூறியிருக்கிறார். இலங்கை மீது சர்வதேச போர்க்குற்ற விசாரணை நடத்துவதற்கு இவற்றை விட வலிமையான ஆதாரங்கள் தேவையில்லை. இலங்கையில் நடைபெற்ற போர்க் குற்றங்கள் குறித்து அந்த நாட்டு அரசே விசாரணை நடத்தி தவறு செய்த வர்கள் மீது நடவடிக்கை எடுக்க ஐ.நா. மனித உரிமை ஆணையத்தின் மூலம் இரண்டு ஆண்டுகள் காலக்கெடு கொடுத்த பிறகும் ராஜபக்ஷே அரசு இன்று வரை ஆக்கபூர்வமாக எதையும் மேற்கொள்ளவில்லை.

எனவே, இலங்கை அரசை காப்பாற்றும் முயற்சிகளில் ஈடுபடுவதை இந்தியா கைவிட வேண்டும். மாறாக, இலங்கை மீது பன்னாட்டு போர்க் குற்ற விசாரணை நடத்துவதற்கான தீர்மானத்தை அடுத்த ஆண்டு பெப்ரவரி- மார்ச் மாதங்களில் கூடும் ஐ.நா. மனித உரிமை ஆணையகக் கூட்டத்தில் இந்தியா கொண்டுவர வேண்டும். அதுமட்டுமின்றி, மனித உரிமை மீறல்களில் ஈடுபட்ட ராஜபக்ஷே அரசை கண்டிக்கும் வகையில் காமன்வெல்த் அமைப்பிலிருந்து இலங்கையை நீக்கவும், கொழும்பில் நடைபெறவுள்ள பொதுநலவாய மாநாட்டை வேறு நாட்டிற்கு மாற்றவும் இந்திய அரசு நடவ டிக்கை எடுக்க வேண்டும்- என்றுள்ளது.

(வ)

## மீன் பிடி தொடர்பில் புதிய ஒப்பந்தம்

# மஹிந்தவிடம் அழகிரி நேரடியாகக் கோரிக்கை



சென்னை, செப்.2
இந்திய மீனவர்கள் இலங்கை கடற்பரப்பில் மீன்பிடிக்கவும், இலங்கை மீன வர்கள் இந்திய கடற்பரப்பில் மீன்பிடிக்கவும் இரு நாடுகளுக்கிடையில் ஒப்பந் தம் ஏற்படுத்தப்பட வேண்டும் என காங் கிரஸ் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கே. எஸ். அழகிரி இலங்கை ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்திருக்கிறார்.

அவரது இந்த கோரிக்கையை இந்திய பிரதமர் வாயிலாக இலங்கை அரசுக்கு தெரியப்படுத்தும்படியும் தாமும் இது குறித்து இலங்கை அரசிலுள்ள மற்றவர் களிடமும் இலங்கை மீனவர்களிடமும் கலந்து பேசுவதாக மஹிந்த தம்மிடம் தெரிவித்ததாகவும் அழகிரி தெரிவித்தார்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கட்சியின் நிறுவுநர் சவுமியமூர்த்தி தொண்டமானின் நூற்றாண்டுவிழாவில் கலந்து கொள்வதற்காக இலங்கை அமைச்சர் ஆறுமுகன் தொண் டமானின் அழைப்பின்பேரில் இலங்கை சென்றிருப்பதாகத் தெரிவித்த அழகிரி, இந்த கொண் டாட்டங்களில் கலந்துகொள்ள வந்திருந்த மஹிந்த ராஜபக்ஷவை தாம் சந்தித்துப் பேசியபோது இந்த கோரிக்கையை வைத்ததாக கூறினார்.


இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

> மாதம் 15 நாள் இரு நாட்டு மீனவர்களும் பரஸ்பரம் அடுத்த நாட்டு கடற்பரப்பில் மீன் பிடிக்க வகை செய்யும் ஒப்பந்தம் ஏற்படுத்துவது சரியான தீர்வாக இருக் கும் என்று மஹிந்த விடம் தெரிவித்தேன்.

எல்லை தாண்டிவந்து மீன் பிடித்த குற்றச்சாட்டின்பேரில் தமிழக மீனவர்கள் இலங்கை சிறையிலும், இலங்கை மீனவர்கள் இந்திய சிறைகளிலும் வாடுவதைத் தடுக்க வேண்டுமானால், மாதம் 15 நாள் இரு நாட்டு மீனவர்களும் பரஸ்பரம் அடுத்த நாட்டு கடற் பரப்பில் மீன் பிடிக்க வகை செய்யும் ஒப்பந்தம் ஏற்படுத்துவது சரியான தீர்வாக இருக் கும் என்று மஹிந்தவிடம் தெரிவித்தேன்.

இலங்கை சிறையில் இருக்கும் தமிழக மீனவர்களை நேரில் சென்று சந்தித்த தாகத் தெரிவித்த அழகிரி, அவர்களின் விடுதலைக்கான சட்ட ரீதியிலான முன்னெடுப்புக்களையும் மேற்கொண்டேன்- என்றார். (வ)

## அமைக்கப்படும் 'காப்பெற்' வீதிகளில் வேட்பாளர் இலக்கங்கள் மெருகூட்டல்



யாழ்ப்பாணம், செப்.2
வடமாகாண சபைத் தேர்தலை முன்னிட்டு வேட் பாளர்களால் பிரசார நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் புதிதாக அமைக்கப்பட்ட காப்பெற் வீதிகளில் வேட்பாளர்களின் ஆதரவாளர்களால் வரையப்பட்ட வேட்பாளர்களின் அடையாள இலக்கங்கள் சில இடங்களில் அழிக்கப்படுவதுடன் சில இடங் களில் மேலும் மெருகூட்டப்படுகின்றன.

தேர்தல் விதிமுறைக்கு மீறியதாக வேட்பாளர்களின் ஆதரவாளர்களால் இவ்வாறு காப்பெற் வீதிகளில் வர்ணங்களால் அடையாள இலக்கங்கள் வரையப்படு வது தொடர்பில் பிரதேச மக்களாலும் தேர்தல் திணைக்களத்துக்கு முறைப்பாடு தெரிவித்தமைக்கு அமைவாக சில இடங்களில் அடையாள இலக்கங்கள் அழிக்கப்படுகின்றன. அத்துடன் சில இடங்களில் அவற்றை மேலும் மெருகூட்டும் நடவடிக்கைகளும் இடம்பெற்று வருகின்றன. (வ-14)

# போலி கடனட்டைகள் மோசடி இலங்கையர் இந்தியாவில் கைது



சென்னை, செப்.2
போலி கடனட்டை தயாரித்து மோசடியில் ஈடுபட்டு வந்த இலங் கையர் இருவர் இந்தியாவில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மஹேந்திர கருணாராஜ் மற்றும் அஸ்வின் குமார் ஆகிய இருவரே கைது செய்யப்பட்டுள்ளதாகவும் இவர்கள் பெங்களூர் மற்றும் மதுரையை வசிப்பிட மாகக் கொண்டவர்கள் எனவும் இந்திய பொலிஸார் தெரிவித் துள்ளனர்.

சந்தேகநபர்களிடமிருந்து 50 கடனட்டைகள், 2 மடிகணினிகள், பென் டிரைவ், மற்றும் தயாரிப் புக்கென உபயோகப் படுத்தப்பட்ட கருவிகளும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன. பிரான்சிலுள்ள நண்பர் ஒருவருக்கு கட்டணம் ஒன்றைச் செலுத்தி மின்னஞ்சல் மூலமாக கடனட்டை தரவுகளை கருணாராஜ் பெற்று வந்துள்ளதுடன் அதனை அஸ்வின் குமாருக்கு வழங்கியுள்ளதாகவும் அவர் போலி கடனட்டை தயாரிப்பில் ஈடுபட்டுள்ளதாகவும் பொலிஸார் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அஸ்வின் மலேசியாவில் இருந்து கொண்டுவரப்படும் பிஸாஸ்டிக்கைப் பயன்படுத்தி போலி கடனட்டை தயாரிப் பில் ஈடுபட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்ப டுகின்றது. ஆரம்பகட்ட விசாரணைக ளிலிருந்து அவர்கள் இருவரும் சுமார் 10 லட்சம் ரூபாயை போலி கடனட்டை களைப் பயன் படுத்தி மோசடி செய் துள்ளமை தெரிய வந்துள்ளது.

அவர்கள் போலி அட்டைகளைப் பயன் படுத்தி வணிக நிறுவனங்களில் இருந்து பொருள்களைக் கொள்வனவு செய்துள்ளனர். எனினும் கடனட்டையின் நிஜ உரிமையாளர்களுக்கு மட்டும் தெரிந்திருக்கும் இரகசிய இலக்கம் தெரியாத காரணத்தால் அவர்களால் இணை யத்தின் ஊடாக பொருள் கொள்வனவு எதிலும் ஈடுபடமுடியவில்லையெனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

(வ)

மங்கள கரமான திறப்பு விழா
பொம்பே ஸ்வீட் & கீறீம் ஹவுஸ்
இன்று (02.09,2013)
திங்கட்கிழமை
சுபநேர வேளையான
காலை 9.30 மணிக்கு
ஆரம்பிக்கப்படுகிறது
பொம்பே நெய் பூந்தி
பொம்பே நெய் மஸ்கட்
பொம்பே நெய் தொதல்
பொம்பே நெய் பருப்பி
பொம்பே நெய் பால்க்கோவா
ப(f)லூடா



சகல விதமான பொம்பே குளிர்பானங்களும் உண்டு
605A, K.K.S வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 3525,
077 6615973



சீனாவில் நேற்றுமுன்தினம் காலை ஏற்பட்ட நிலநடுக்கத்தில் 5 பேர் உயிரிழந்ததுடன், பல கட்டடங்கள் இடிந்து வீழ்ந்துள்ளன. சீனாவின் தென்மேற்கு பகுதியில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கம் ரிச்டர் அளவு கோலில் 5.9 ஆக பதிவாகியுள்ளது. நிலநடுக்கத்தின் மையம் ஷங்ரி - லா என்ற கிராமத்தில் அமைதிருந்தது என்று (ற)

## கணவரை கொன்று சமைத்த பெண்மணி

பீஜிங், செப்.2
சீனாவில் கொடுமைப்படுத்திய கணவரை பெண் ஒருவர் கொன்று சமைத்து உட்கொண்ட சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.
சீனாவின் ஆன்ஹூய் மாகாணத்தைச் சேர்ந்த பெண், இரண்டாவதாகத் திருமணம் செய்து கொண்டார். திருமணம் ஆன சில நாள்கள் மட்டுமே மகிழ்ச்சியாக வாழ்ந்தனர் கணவனும் மனைவியும். பின்னர் கணவர் மனைவியையும், மகளையும் கொடுமைப்படுத்த தொடங்கியுள்ளார்.
பொறுத்துப் பார்த்த அந்தப் பெண் தனது கணவருக்கு போதை மருந்து கொடுத்து மயக்கத்தில் வைத்ததுடன், தொடர்ந்து 3 நாள்களாக அறையில் அடைத்து வைத்து சாப்பாடு, தண்ணீர் எதுவும் கொடுக்காமல் வைத்துத் தாக்கியுள்ளார். நான்காவது நாள் மனைவியின் அடி, உதையில் கணவர் உயிரிழந்து விட்டார்.
செய்வதறியாது விழித்த மனைவி, கொலையை மறைப்பதற்காக அவரது உடலை துண்டு துண்டாக நறுக்கி சமைத்து சாப்பிட்டுவிட்டார். இந்தத் தகவல் ஏதோ ஒரு வழியில் பொலிஸாருக்குப் போய்ச் சேர்ந்தது. அதையடுத்து விரைந்து செயற்பட்ட பொலிஸார் தற்போது மனைவியைக் கைது செய்துள்ளனர். (ற)


## அமோனியா வாயுக் கசிவால் 15 பேர் சாவு

பீஜிங், செப்.2
சீன குளிர்பதன தொழிற்சாலையில் ஏற்பட்ட விபத்தில் அமோனியா வாயுக்கசிவு ஏற்பட்டு 15 பேர் உயிரிழந்துள்ள னர். இந்த விபத்து சீனாவின் போஷன் மாவட்டத்தில் நடந்துள்ளது.
விபத்து ஏற்பட்டதை அடுத்து அமோனியா வாயுக் கசிவு ஏற்பட்டது. அதையடுத்து அந்தப் பகுதியில் பணியில் ஈடுபட்டிருந்த 41 பேர் மயங்கினர். அவர்களின் 15 பேர் உயிரிழந்ததுடன், ஏனைய 26 பேரும் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (ற)

# தண்டிக்கும் கடமை உண்டு

## சிரிய விவகாரத்தில் அமெரிக்க ஜனாதிபதி திட்டவட்டம்

வோஷிங்டன், செப்.2
இரசாயன ஆயுதங்களைப் பயன்படுத்தித் தாக்குதல் நடத்திய சிரியாவைத் தண்டிக்கும் கடமை அமெரிக்காவுக்கு உண்டு என்று அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.
சிரிய உள்நாட்டுப் போரில் கடந்த மாத இறுதியில் சிரிய அரசு இரசாயனத் தாக்குதல்களை மேற்கொண்டது என்று அமெரிக்கா உட்பட மேற்குலக நாடுகள் குற்றஞ்சாட்டி வருகின்றன. அதையடுத்து அந்த நாட்டின் மீது இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ளும் முன்முயற்சிகளிலும் இறங்கியுள்ளன.
இந்தநிலையில் இந்த விவகாரம் குறித்து அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா செய்தியாளர்களுக்கு விளக்கமளித்தார். அதன்போதே அவர் இவ்வாறு திட்டவட்டமாகக் கருத்துத் தெரிவித்துள்ளார்.



"இரசாயன ஆயுதங்களைப் பயன்படுத்திய சிரியாவைத் தண்டிக்கும் கடமை அமெரிக்காவுக்கு உண்டு. சிரியா மீதான தாக்குதல் என்பது தரைப்படை மூலம் நடத்தப்படாது. விமானப்படை மூலமே நடத்தப்படும். எனினும் எந்தவிதமான நடவடிக்கை என்பது குறித்து நான் இன்னும் முடிவெடுக்கவில்லை. நாங்கள் எங்கள் தோழமை நாடுகளைக் கலந்து ஆலோசித்துள்ளோம். அமெரிக்க நாடாளுமன்றத்தின் கருத்தையும் கேட்டறிந்துள்ளோம்" என்று தெரிவித்தார்.
இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்த அமெரிக்க வெளியுறவுத் துறைச் செயலர் ஜோன் கெரி,
"சிரியா மீதான தாக்குதலுக்கு நாங்கள் ஐ.நா. பாதுகாப்புச் சபையின் ஒப்புதலை நாடப் போவதில்லை. நாம் எடுக்கும் எந்த நடவடிக்கைக்கும் ஐ.நா. பாதுகாப்புச் சபை மூலம் ரஷ்யா முட்டுக்கட்டை போட முயற்சிக்கிறது. அதற்காக உலகம் தான் விரும்பியபடி செயற்பட ஐ.நா. ஊக்கமளிக்க முடியாது. எனவே தோழமை நாடுகளுடனும், நாடாளுமன்றத்திலும் விவாதித்து நாங்கள் முடிவெடுப்போம். சிரியா மீதான நடவடிக்கை ஆப்கன், ஈராக், லிபியா போன்ற நாடுகளில் நாம் நடத்தியது போன்று இருக்காது. 10 ஆண்டுகளாக நடைபெற்ற போர் காரணமாக அமெரிக்க மக்கள் சோர்வுற்றுள்ளனர். அதற்காக நமது பொறுப்பைத் தட்டிக்கழிக்க முடியாது" என்று தெரிவித்தார். (ற)

## புற்றுநோயால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு தனித் தளம்

நியூயோர்க், செப்.2
மார்பக புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ள பெண்களுக்கான பிரத்தியேக இணையத்தளமொன்று அமெரிக்காவில் உருவாக்கப்பட்டுள்ளது.
நோயாளர்களின் அனுபவங்கள் மற்றும் அவர்களின் உணர்வுகளை இதில் பகிர்ந்து கொள்ளும் நோக்கில் இந்த இணையத்தளம்' உருவாக்கப்பட்டுள்ளது என்றும், அதன் மூலம் அவர்களின் மன அழுத்தத்தை குறைக்க முடியும் எனவும் அமெரிக்க உளவியல் நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.
இந்த இணையத்தளத்தை பயன்படுத்துவதன் மூலம் மார்பக புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்களின் அணுகுமுறையில் மாற்றங்கள் காணப்படுகின்றது என்றும், மனஅழுத்தங்களில் இருந்து அவர்கள் விடுபட்டு உள்ளனர் என்றும் அவர்கள் மேலும் சுட்டிக்காட்டியுள்ளனர்.
மார்பக புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்களில் 15 தொடக்கம் 25 வீதமானவர்கள் மன அழுத்தத்திற்கு உள்ளாகியுள்ளனர் என்று ஆய்வுகளின் மூலம் கண்டறியப்பட்டுள்ளதுடன், குடும்ப உறுப்பினர்களிடமும் , நண்பர்களிடமும் பகிர்வதற்கு தயங்கும் விடயங்களை இந்த இணையத்தளத்தின் ஊடாக பெண்கள் பகிர்ந்து கொள்கின்றனர் என்றும் கூறப்படுகின்றது. (ற)

## இன்னும் வீடு திரும்பவில்லை மண்டேலா

ஜொகன்னர்ஸ்பேர்க், செப்.2
தென்னாபிரிக்க முன்னாள் ஜனாதிபதி நெல்சன் மண்டேலா மருத்துவமனையில் இருந்து வீடு திரும்பியதாக வெளியான செய்திகளில் உண்மையில்லை என்று அந்நாட்டு ஜனாதிபதி மாளிகை தகவல் வெளியிட்டுள்ளது.
கடந்த வாரம் மண்டேலாவின் உடல்நிலை தொடர்ந்து கவலைக்கிடமாக இருந்தாலும் உயிருக்கு ஆபத்து இல்லை என்று ஜனாதிபதி மாளிகை அறிவிப்பு வெளியிட்டிருந்தது.
இந்நிலையில் மண்டேலா வீடு திரும்பிவிட்டதாகவும், வீட்டிலேயேஅவருக்குதொடர்ந்து சிகிச்சை அளிக்கப்படும் என்றும் தகவல்கள் வெளியாகியிருந்தமைகுறிப்பிடத்தக்கது (ற)

# சீனா - பாக். கூட்டுப் பயிற்சிகள் இரு நாடுகளையும் வலுவாக்கும்

## சீன துணை இராணுவத் தளபதி கருத்து

பீஜிங், செப்.2
சீனா - பாகிஸ்தான் இடையான கூட்டு விமானப்படை பயிற்சி மூலம் இரு நாட்டு இராணுவ உறவுகள் மேலும் வலுப்பெறும் என்று சீனா நம்பிக்கை தெரிவித்துள்ளது.
இருநாடுகளுக்கும் இடையிலான கூட்டு விமானப் படைப் பயிற்சிகள் இன்று தொடக்கம் எதிர்வரும் 22 ஆம் திகதிவரை நடைபெறவிருக்கின்றது. அதுகுறித்துக் கருத்துத் தெரிவிக்கும்போதே சீன மத்திய ராணுவ அமைப்பின் துணைத்தலைவர் ஹு" கீலிங் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
இதுகுறித்து அவர் மேலும் குறிப்பிடுகையில்,
"சீனாவும் பாகிஸ்தானும் அயல் நட்பு நாடுகள். நல்ல நண்பர்கள். இராணுவ நிலைகளில் பரஸ்பரம் ஒத்துழைப்பு



இருநாடுகளுக்கும் இடையிலான கூட்டு விமானப் படைப் பயிற்சிகள் இன்று தொடக்கம் எதிர்வரும் 22 ஆம் திகதிவரை நடைபெறவிருக்கின்றது.

காரணமாக இருநாடுகளும் பயன் பெறுவதோடு மட்டுமன்றி, இந்தப் பிராந்தியத்தில் பாதுகாப்பு மற்றும் நிலைத்தன்மையை உருவாக்க முடியும். இருநாடுகளுக்கும் இடையே நடைபெறவுள்ள இந்தக் கூட்டு விமானப் படைப் பயிற்சி மூலம் இரு நாடுகளிடையேயான இராணுவ உறவுகள் மேலும் வலுப்பெறும்" என்று தெரிவித்தார்.(ற)

## ஸ்நோடனுக்கு விருது



பெர்லின், செப்.2
அமெரிக்க அரசின் இரகசிய உளவுத் திட்டங்கள் தொடர்பாக தகவல்களைப் பகிரங்கப்படுத்திய எட்வேர்ட் ஸ்நோடனுக்கு 'ஊழலை அம்பலப்படுத்துபவருக்கான விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளது.
ஜேர்மனியைச் சேர்ந்த விஞ்ஞானிகள் சங்கமும், அணு ஆயுதங்களுக்கு எதிரான சர்வதேச வழக்குரைஞர் சங்கத்தின் ஜேர்மனிப் பிரிவும் இணைந்து ஊழலை அம்பலப்படுத்துபவருக்கான விருதை 1999ஆம் ஆண்டு உருவாக்கின.
இந்த ஆண்டுக்கான இந்த விருதுக்கு அமெரிக்க அரசின் இரகசிய ஆவணங்களை அம்பலப்படுத்திய ஸ்நோடன் தெரிவு செய்யப்பட்டதுடன், பெர்லினில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற விழாவில் விருதும் வழங்கப்பட்டது.
தற்போது ரஷ்யாவில் தஞ்சம் புகுந்துள்ள ஸ்நோடன் சார்பில் அவரது நண்பர் இப்பரிசைப் பெற்றுக் கொண்டார். ஜனநாயக சமூகங்களில் ஏற்றுக் கொள்ள முடியாத அமெரிக்காவின் கண்காணிப்புப் பணிகளை துணிச்சலாக அம்பலப்படுத்தியதற்காக ஸ்நோடனுக்கு இந்த விருத வழங்கப்படுகின்றது என்று விழாவில் தெரிவிக்கப்பட்டது.
இவ்விழாவில் பிரபல பத்திரிகையாளர் கிளென் கிரீன்வோல்ட்டும் கலந்து கொண்டார். கிரீன்வோல்ட் ஸ்நோடன் அனுப்பி வைத்த அமெரிக்க மற்றும் பிரிட்டன் உளவு அமைப்புகளின் மிகவும் ரகசியமான ஆவணங்களைக் கொண்டு பல்வேறு கட்டுரைகளை 'கார்டியன்' பத்திரிகையில் எழுதியுள்ளார். (ற)

## கழிவறையில் நிச்சயமாகும் திருமணம்

செஹோர், செப்.2
மத்திய பிரதேசத்தில் மாப்பிள்ளை வீட்டில் கழிவறை இருந்தால் மட்டுமே திருமணம் செய்யமுடியும் என்ற சட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது.

மண மகனின் வீட்டில் கட்டாயம் கழிவறை இருக்க வேண்டும். அதன் அருகில் நின்று புகைப் படம் எடுத்து அதை அதிகாரி களிடம் காட்டி ஒப்புதல் பெற்ற பின்னரே திருமணம் செய்து கொள்ள முடியும்.

அதை அதிகாரிகளிடம் காண்பிக்காவிட்டால் அவருக்கு திருமணத்திற்கான தகுதி இல்லை என்று அறிவிக்கப்படும். எப்போது கழிவறை உண்டு என்று நிரூபிக்கப்படுகின்றதோ அப்போது தான் திருமணம் செய்து கொள்ள முடியும் என்ற சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது.

செஹோர் மாவட்டத்தில் அனைத்து வீடுகளிலும் கழிவறைகள் கட்டாயம் இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்தவே இந்த புதிய சட்டம் கொண்டுவரப்பட்டுள்ளதாம். (ற)

# இலங்கைக்குரிய கச்சதீவுக்கு இரு நாட்டு ஒப்பந்தம் எதற்கு?

## இந்திய மத்திய அரசைக் கேட்கிறார் பாண்டியன்

சென்னை, செப்.2
கச்சதீவு இலங்கைக்கே சொந்தமானது என்று இந்திய மத்திய அரசு உயர்நீதிமன்றத்தில் தெரிவித்துள்ள கருத்துக்குக் கடும் கண்டனம் வெளியிட்டுள்ளார் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் தா.பாண்டியன்.

இந்த விடயம் தொடர்பாக அவர் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:-

"கச்சதீவு மீட்கப்பட வேண் டும் என்று தமிழகத்தில் உள்ள அனைத்து அரசியல் கட்சிகளும் கோரி வருகின்றன. இது தொடர்பில் தமிழ்நாடு சட்டப் பேரவையும் ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. இந்தக் கோரிக்கையை வலியுறுத்தி தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு தற்போது உயர்நீதிமன்றத்தில் விசாரணையில் உள்ளது.



இந்தநிலையில் இந்திய மத்திய அரசு கச்சதீவு இலங்கைக்குச் சொந்தமானது. அதைத் திருப்பி மீட்க முடியாது என்று தெரிவித்துள்ளது. உயர்நீதிமன்றத்தில் மத்திய அரசின் சார்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பிரமாண பத்திரத்தில், கச்சதீவு கேட்பாரற்று கிடந்தது என்றும், அது இலங்கை அரசின் கட்டுப்பாட்டில் இருந்தது. அதன் காரணமாக இலங்கைக்கு கச்சதீவு சொந்தமாகிவிட்டது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கச்சதீவு கேட்பாரற்றுக் கிடந்தது. அதனாலேயே இலங் கைக்குச் சொந்தமாகிவிட்டது என்றால் 1974 ஆம் ஆண்டு இரு நாடுகளுக்கும் இடையே ஒப்பந்தம் ஏற்பட வேண்டிய அவசியம் ஏன் ஏற்பட்டது என்பதை விளக்க வேண்டும்.

மத்திய அரசு இவ்வாறு கூறுவது கண்டனத்துக்குரியது. இது தமிழக மீனவர்களுக்கு துரோகம் செய்வதாகும். மத்திய அரசின் நயவஞ்சக செயலை வன்மையாகக் கண்டிப்பதுடன், கச்சதீவை மீட்பதற்கு தமிழக அரசு மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு தமிழகத்தின் அனைத்துப் பகுதி மக்களும் ஆதரவு அளிக்க வேண்டும்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

## குஜராத் கலவரம் துரதிர்ஷ்டமானது:

### பா.ஜ.க. தலைவர் ராஜ்நாத் சிங்

புதுடில்லி, செப்.2
2002 ஆம் ஆண்டு இடம் பெற்ற குஜராத் கலவரம் துரதிர்ஷ்டவசமானது என்று தெரிவித்துள்ளார் பாரதிய ஜனதாக் கட்சியின் தலைவர் ராஜ்நாத் சிங்.

புதுடில்லியில் நடைபெற்ற பாரதிய ஜனதாவின் சிறுபான்மையினர் தேசிய நிர்வாக கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது:-

"இந்தியாவில் எத்தனையோ மாநிலங்களில் கலவரங்கள் நடந்துள்ளன. அதில் குஜராத் கலவரமும் ஒன்று. 2002ஆம் ஆண்டு குஜராத் கலவரம் துரதிஷ்டவசமானது. அதற்காக முதலமைச்சர் நரேந்திர மோடியை குறை கூறுவது நியாயமற்றது. காங்கிரஸ் மற்றும் பிற கட்சிகள் மத வாரியாக மக்களை பிரிக்கின்றன. பா.ஜ.க. ஆளும் மாநிலங்களில் சிறுபான்மையினர் எவ்வகையிலும் புறக்கணிக்கப்படவில்லை" என்று தெரிவித்தார். (ற)

## தேர்தல் என்றதும் ஓடி வரும் தி.மு.க.

### மத்திய அமைச்சர் இளங்கோவன்

சென்னை, செப்.2
தேர்தலில் வெற்றி பெற வேண்டும் என்றால் தி.மு.க. தலைவர் கூட்டணி பற்றி பேசுவார். காங்கிரஸ் தயவை நாடுவார் என்று முன்னாள் மத்திய அமைச்சர் ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் தெரிவித்துள்ளார். காங்கிரஸ் நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் ஈரோட்டில் நடந்தது. கூட்டத்தில் கலந்து கொண்ட உரையுாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் கூறியதாவது:



"உணவு பாதுகாப்பு சட்டம் கொண்டுவந்ததால்தான் இந்தியாவின் பண மதிப்பு வீழ்ச்சி அடைந்து விட்டதாக எதிர்கட்சிகள் தவறான பிரச்சாரத்தை செய்து வருகின்றனர். ஊழலை பற்றி யார் பேசினாலும் அதற்கு தகுதி வேண்டும். இப்போதைய ரூபாய் மதிப்பு வீழ்ச்சி விரைவில் சரிசெய்யப்படும். தேர்தலில் வெற்றி பெற வேண்டும் என்றால் தி.மு.க. தலைவர் கூட்டணி பற்றி பேசுவார். காங்கிரஸ் தயவை நாடுவார். வெற்றி பெற்ற பின்னர் கூட்டணி இல்லை என்பார்.

இலங்கை தமிழர்களுக்கு எதிரான கட்சி காங்கிரஸ் என்று தவறான கருத்து பரப்பப்படுகிறது. தற்போது கூட இலங்கையில் தமிழர்கள் வாழும் பகுதியில் அடிப்படை வசதிகள் பணிக்காக ரூ. 48 ஆயிரம் கோடி நிதி ஒதுக்கி 50 ஆயிரம் வீடுகள் கட்டப்பட்டு வருகிறது" என்று தெரிவித்தார். (ற)

# கச்சதீவு குறித்த அரசின் கருத்து ஏற்றுக்கொள்ள முடியாதது

## தி.மு.க. தலைவர் கருணாநிதி கடும் கண்டனம்

சென்னை, செப்.2
கச்சதீவு தொடர்பாக இந்திய மத்திய அரசு நீதிமன்றத்தில் அளித்துள்ள வாக்குமூலம் கண்டனத்துக்குரியது என்று தெரிவித்துள்ளார் தி.மு.க. தலைவர் கருணாநிதி

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:-

"கச்சதீவு பற்றிய வழக்கில் மத்திய அரசின் சார்பில் உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பிரமாணப் பத்திரத்தில் 'கச்சதீவு எந்த நாட்டுக்கும் சொந்தமில்லாமல் இருந்தது. இந்திய-இலங்கைக் கடல் பகுதியில் சர்வதேச எல்லைக் கோட்டை நிர்ணயித்த போது கச்சதீவு இலங்கை வரம்புக்குள் சென்று விட்டது. அதன் பிறகு 1974ஆம் ஆண்டில் இந்தியா-இலங்கை இடையே கச்சதீவு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

1976ஆம் ஆண்டில் இரு நாடுகளிடையே மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்திலும் கச்சதீவு இலங்கையின் பகுதியில் இருப்பதை இந்தியா ஏற்றுக் கொண்டுள்ளது. இந்திய எல்லைக் கோட்டுக்குள் இருந்த கச்சதீவை இலங்கைக்கு தாரை வார்த்துக் கொடுத்ததாக மாயை ஏற்படுத்துவது தவறானது' என்று தெரிவித்திருப்பது தமிழ் மக்களிடையே மிகுந்த அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

கச்சதீவு இந்தியாவிற்குத் தான் சொந்தம் . அதனை 1974ஆம் ஆண்டு இந்திய அரசு, இலங்கைக்கு ஓர் ஒப்பந்தத்தின் வாயிலாகத் தாரை வார்த்து விட்டது. அந்த ஒப்பந்தம் நாடாளுமன்றத்தில் ஒப்புதல் பெறாத காரணத்தால் அது செல்லாது என்று தமிழகத்தின் சார்பில் முதலமைச்சர் உச்ச நீதிமன்றத்தில் முறையிட்டிருக்கிறார்.

டெசோ அமைப்பின் கூட்டத்திலும் 'கச்சதீவு இந்தியாவின் ஒரு பகுதியாகும். அது 1974ஆம் ஆண்டு ஒப்பந்தத்தின் படி இலங்கை அரசுக்கு இந்திய அரசால், சட்டமன்றத்திலும், நாடாளுமன்றத்திலும் நாம் தெரிவித்த எதிர்ப்புகளையெல்லாம் மீறி விட்டுக் கொடுக்கப்பட்டது. இந்தியாவின் எந்தவொரு பகுதியையும் வேறு ஒரு நாட்டிற்கு விட்டுக் கொடுப்பதென்றால், இந்திய அரசமைப்புச் சட்டம் 368ஆவது பிரிவின்படி நாடாளுமன்றத்தின் பரிசீலனைக்கு வைத்து சட்டம் இயற்றப்பட வேண்டும்.

கச்சதீவைப் பொறுத்தவரை அப்படி எந்தவொரு சட்டமும் இதுவரை நிறைவேற்றப்படாததால், கச்சதீவை இலங்கைக்கு ஒப்பந்தத்தின் மூலம் விட்டுக் கொடுத்தது அரசியல் சட்ட ரீதியாகச் செல்லுபடி ஆகாது' என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்த ஆவணங்களையும், அடிப்படை ஆதாரங்களையும் இந்திய அரசியல் சட்ட நெறிமுறைகளையும் ஆழமாகப் பரிசீலனை செய்து உச்ச நீதிமன்றம் நல்ல தீர்ப்பு வழங்கும் என்று நாம் நம்பிக்கை யுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்த வேளையில், 'கச்சத்தீவு இலங்கை வரம்புக்குள் உள்ளது' என்று மத்திய அரசு பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்திருப்பது இந்தப் பிரச்சினையில் பெரும் பின்னடைவை ஏற்படுத்திடக் கூடியது. மத்திய அரசின் இந்த முடிவு கடும் கண்டனத்திற்குரியதாகும்."- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

## மரண அறிவித்தல்

### கந்தையா நாகமுத்து



கச்சாயைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட கந்தையா நாகமுத்து 30.08.2013 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற அன்னலட்சுமி மற்றும் தெய்வானைப்பிள்ளை, இரத்தினம், திலகவதி, பரமேஸ்வரி, தில்லையம்பலம், இராமநாதன், பரமநாதன், நாகேஸ்வரி, துஸ்யந்தினி ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்றவர்களான இராசதுரை, மகாலிங்கம் மற்றும் கனகாம்பிகை, இராசகோபால், குகதாஸ், கௌரி அம்பாள், நாகேஸ்வரி, திலகவதி, அன்பழகன், புஸ்பநேசன் ஆகியோரின் மாமியாரும். யசோதரன், கிரிசாந்தி, சிறிதரன், யசிந்தா, சுமணி, நகுலகுமார், தேசிகா, கஜீபன், சந்திரிக்கா, சர்மிதா, தேனுகா, குகனிகா, இதயராஜ், மோகனராஜ், ஜெயப்பிரியா, மதுமதி, அபிராம், சாளினி, சயந்தினி, நிஷாந்தினி, நிறோயினி, கஜேந்திரன், அனுசாயினி, அபிசாயினி, சுஜிந்தன், ஜீவிதா, பவிதன் ஆகியோரின் பேர்த்தியும் கிரிசாந், துசிகரன், லக்சிகா, லதீசன் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (02.09.2013) திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கச்சாய் துறைமுக எறியாப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பேரப்பிள்ளைகள்
யசோதரன் (லண்டன்), சீலன் (லண்டன்)


கச்சாய்.




புதுடில்லியில் மருத்துவ மாணவி ஒருவர் ஓடும் பஸ்ஸில் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டு, சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். அந்த வழக்குத் தொடர்பில் கைது செய்யப்பட்டிருந்த நால்வரில் 17 வயதுடைய சிறார் குற்றவாளி ஒருவருக்கு நேற்றுமுன்தினம் 3 வருடங்கள் சிறைத்தண்டனை வழங்கித் தீர்ப்பு வழங்கப்பட்டது. குற்றவாளிக்கு தூக்குத் தண்டனை வழங்க வேண்டும் என்று நீதிமன்றத்தில் முன்னால் பெருந்திரளான மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். அவர்களைக் கட்டுப்படுத்த முடியாது பொலிஸார் திணறினர். குற்றவாளிகளுக்கு தூக்குத்தண்டனை வழங்க வேண்டும் என்று கோரி நடத்தப்படும் போராட்டங்கள் புதுடில்லியில் தீவிரம் பெற்றுவருகின்றன. (ற)

# வடமாகாண விவசாயக் கண்காட்சி வட்டக்கச்சியில் இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், செப்.2
வடமாகாணத்துக்கான 2013 ஆம் ஆண்டுக்கான விவசாயக் கண்காட்சி 'சூழலுடன் நட்புறவான புதுயுகம் நோக்கி' எனும் தொனிப்பொருள் இன்று திங்கட் கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து 5 தினங்கள் 6 ஆம் திகதி வரை கிளிநொச்சி வட்டக்கட்சியில் இடம்பெறவுள்ளது.



இந்தக் கண்காட்சியில் மத்திய விவசாயத் திணைக்களம், மாகாண கால்நடை உற்பத்தி சுகாதாரத்திணைக்களம், மாகாண நீர்பாசனத் திணைக்களம், மாகாண காணித் திணைக்களம், மாகாண நன்னீர் மீன்பிடி திணைக்களம், மாகாண சுதேச மருத்துவத் திணைக்களம், மாகாண கமநல அபிவிருத்தித் திணைக்களம், வானிலை அவதான நிலையம், தென்னைப் பயிர்ச்செய்கைச் சபை, தென்னை அபிவிருத்தி அதிகாரசபை, பனைவள அபிவிருத்திச் சபை, மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனம், வங்கிகள், தனியார் நிறுவனங்கள் ஆகியன பங்குபற்றவுள்ளன. விவசாயிகள் மற்றும் உள்ளூர் உற்பத்தியாளர்களின் நன்மை கருதி ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்தக் கண்காட்சி தினமும் காலை 8.30 மணி தொடக்கம்இரவு8மணிவரைநடைபெறும்.

இந்தக் கண்காட்சியில் விவசாய உற்பத்திப் புள்ளி விவரங்களும், தகவல்களும், உள்நாட்டு மரக்கறிகள், மேல்நாட்டு மரக்கறிகள், கிழங்குப் பயிர்கள், இலை மரக்கறிகள், தானியங்கள், அவரைப் பயிர்கள், எண்ணெய் பயிர்கள், பழப் பயிர்கள் ஆகியவற்றின் உற்பத்தித் திறனை மேம்படுத்தல், இலங்கை மண் வளம், மண் சம்பந்தமான பிரச்சினைக்குரிய தீர்வுகள்.

அறுவடைக்குப் பின்னரான இழப்புக்களைக் குறைத்தலும், தரத்தை மேம்படுத்தலும், உற்பத்திப் பொருள்களின் பெறுமானத்தை அதிகரித்தல், விவசாய அடிப்படையிலான கைத்தொழில் முயற்சிகள், விவசாய ஆராய்ச்சிச் செயற்பாடுகள், பண்ணை இயந்திரங்களை மேம்படுத்தல், காளான் செய்கை, சிறு ஏற்றுமதி பயிர்கள், நீர்முகாமைத்துவமும், நிலத்தடி நீர் சேமிப்பும் விலங்கு வேளாண்மை, நன்னீர் மீன்வளர்ப்பு, மூலிகைத் தாவர விருத்தியும் பயன்பாடும், தென்னை அபிவிருத்தி, பனைவள அபிவிருத்தி, மரமுந்திரிகை அபிவிருத்தி உட்பட பல தொழில்நுட்ப விடயங்கள் இடம்பெறவுள்ளன. (வ-14-7-402)

## சிறுநீரக நோய்க்கு நிவாரணமாக கொடுப்பனவு

அச்சுவேலி, செப்.2
வலி கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் 10 பேருக்கு சிறுநீரக நோய்கள் நிவாரணக் கொடுப்பனவு கிடைக்கப்பெற்றுள்ளது. சிறுநீரக நோய் தாக்கத்துக்கு உள்ளாகி இருப்போர் மற்றும் உள்ளாகி வருவோர் சிறுநீரக நோய் வைத்திய நிபு ணரின் வைத்திய அத்தாட்சிப் பத்திரத்துடன் விண்ணப்பிக்கலாம் என்று அறிவிக்கப் பட்டுள்ளது.

சிறுநீரக நோய்க்கான நிவாரணக் கொடுப்பனவாக மாதாந்தம் 500 ரூபா வழங்கப்படுகின்றது. வைத்திய அதிகாரி நோய்த் தாக்கம் எந்தக் காலப் பகுதியில் ஆரம்பமாகியது என பரிந்துரை செய்கின்றாரோ அந்த மாதத்தில் இருந்து கொடுப்பனவு நிலுவை வழங்கப்படுகின்றது.

நோய்த் தாக்கத்துக்கு உள் ளாகி இருப்போர் தமது பகுதி கிராம அலுவலர் மூலம் வலி. கிழக்குப் பிரதேச செயலர் சமூக சேவை அலுவலகத்தில் விண்ணப்பத்தைப் பெற்று குறித்த வைத்திய நிபுணரின் பரிந்துரையுடன் விண்ணப்பிக்குமாறு வலி.கிழக்கு பிரதேச செயலர் எம்.பிரதீபன் அறிவித்துள்ளார். (ஓ-11)

# 8 மாதங்களில் 400 பேர் காயம்

### வீதி விபத்து தாக்குதல் சம்பவங்களால் சாவகச்சேரி ஆஸ்பத்திரி புள்ளிவிவரத்தின்படி

தென்மராட்சி, செப்.2
சாவகச்சேரி ஆதார வைத்திய சாலைகளில் கடந்த எட்டு மாதங்களில் (ஜனவரி- ஓகஸ்ட்) நானூறுக்கும் மேற்பட்டோர் வீதி விபத்துக்கள் மற்றும் தாக்குதல் சம்பவங்களால் காயமடைந்த நிலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டனர் என்று வைத்தியசாலை செய்திக் குறிப்பில் புள்ளி விவரங்களுடன் குறிப்பிடப்பட்டுள்ளது.

பலத்த காயங்களுக்கு இலக்கான நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு யாழ். போதனா வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டவர்களின் விவரங்கள் அதில் இணைக்கப்படவில்லை எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

விபத்து மற்றும் தாக்குதல் சம்பவங்களால் சிகிச்சை பெறு வோரின்மருத்துவ சட்ட அறிக்கை பொலிஸாரிடம் சமர்ப்பிக்க வேண்டும் என்பதால் கடந்த எட்டு மாதங்களில் பொலிஸாரிடம் கையளிக்கப்பட்ட விவரங்களே செய்திக் குறிப்பில் உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. மருத்துவ சட்ட அறிக்கைப் பிரகாரம் பொலிஸார் நீதிமன் றில் 'பி' அறிக்கை தயாரித்து வழங்கவேண்டும்.

அவ்வாறு அறிக்கை தயாரிக் கும் போது சம்பவத்தின் பின்புலங்கள் விசாரிக்கப்பட்டு விவரங்கள் குறிப்பிடப்படும்.

உதாரணமாக வீதி விபத்து இடம் பெறும் போது அதனைச் செலுத்துபவர் தொடர்பான (சாரதிய அனுமதிப்பத்திரம், மதுபோதை போன்றவை) விவரங்கள் பெறப்பட்டு 'பி' அறிக்கையில் குறிப்பிடப்படுகிறது. (ஓ-9)

# அறுவடைக்குத் தயாரான நிலையில் உண்மை விதை வெங்காயம்

### விவசாயத் திணைக்களத்தினர் பார்வையிடவில்லை என உற்பத்தியாளர் விசனம்

தென்மராட்சி, செப். 2
சாவகச்சேரி கல்வயல் கமக்கார அமைப்புக்கு உட்பட்ட பகுதியில் விளைவிக்கப்பட்ட விதை மூலம் உற்பத்தி செய்யப்பட்ட உண்மை வெங்காயம் அறுவ டைக்குத் தயாரான நிலைக்கு வந்த போதிலும் இன்னமும் விவசாயத் திணைக்கள உத்தியோகத்தர்கள் எவரும் வந்து பார்வையிடவில்லையென வெங்காய உற்பத்தியாளர்கள் விசனம் தெரிவித்தனர்.



குறித்த பகுதியில் முதன்முறையாக விதை மூலம் வெங்காயம் பயிரிடப்படவுள்ளதால் தமது உத்தியோகத்தர்கள் அதிகமாக வருகை தந்து பார்வையிடுவதுடன் தகுந்த ஆலோசனைகளையும் வழங்குவர் எனத் தெரிவிக்கப்பட்டது. எனினும் பயிரிட்டு 60 நாள்களாகி வெங்காயம் அறுவடைக்குத் தயாரான நிலைக்கு வந்துள்ளதாகவும் இருப்பினும் அதிகாரிகள் வரும்வரை அறுவடை செய்யப் படாமல் வைத்திருப்பதாகவும் தெரிவித்தனர். (வ-9)

# கழிவுநீர் வாய்க்காலில் வளர்ந்து நிற்கும் மரம்

யாழ்ப்பாணம், செப் 2
யாழ்.நகரை அண்டியுள்ள ஆஸ்பத்திரி வீதியிலுள்ள கழிவுநீர் ஓடும் வாய்க்கால்களில் மரங்கள், செடிகள் வளர்ந்து வருவதால் கழிவுநீர் ஓடிச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

குறித்த வீதி "காப்பெற்" வீதியாக புனரமைக்கப்பட்ட வேளை இரு மருங்கிலுள்ள கழிவுநீர் ஓடும் வாய்க்கால்களும் சிமெந்து போடப்பட்டு புதிதாக உருவாக்கப்பட்டபோதும் இங்குள்ள கழிவுகளை உரிய முறையில் யாழ்.மாநகரசபை அகற்றாத காரணத்தாலேயே இங்கு விழும் விதைகள் கழிவுநீரின் உதவியுடன் மரங்களாக வளர்ந்து வருகின்றன. குறித்த மரங்களின் வளர்ச்சியால் கழிவு வாய்க்காலின் கட்டுக்கள் உடைவதுடன் கழிவுநீரும் ஓடமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே இந்த விடயத்தில் மாநகர முதல்வர் கரிசனை எடுத்து இவற்றை சீர் செய்ய வேண்டும் எனவும் பலராலும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (வ-288)





நேற்றைய இருபத்தோராம் திருவிழாவின்போது நல்லைக்கந்தன் வேல்விமானத்தில் வள்ளி-தெய்வானை சமேதரராக வெளி வீதியுலா வந்து காட்சிதந்த வேளை....

## வேண்டும் வரங்கள் தந்திடுவான்

ஆறுமுகத்தானை கரம் கூப்பினால்
வேண்டும் வரங்கள் தந்திடுவான்
அலங்காரக் கந்தனென்று நாமம்-ஆனால்
கூசாமல் அள்ளிக் கொடுப்போன் வரங்கள்
சூரனை கடும் போரில் வென்ற திறலோன்
தொந்தி வயிற்றுக் கணபதிக்கோ இளையவன்
வள்ளி, தெய்வானையுடன்
நல்லையம்பதியில் உறைபவன்
வெகு விரைவில் நாட்டு மக்கள் துயர் தீர்த்திடுவான்

க.கனகசபை, சண்டிலிப்பாய்

## வனப்புடனே வா முருகா

அண்ணாவைத் துணை கொண்டு
அழகு வள்ளியை அடைந்தவனே
மண்ணை உண்டு மண்டலத்தை காட்டிய
மாலவன் மருகா மயில்வாகனா
எண்ணத்தில் எழும் எங்கள் நல்லூர்
எழில் அலங்காரக் கடம்பா...
வண்ண மயில் மீது வலம் வந்து
வனப்புடனே அருள் தருவாய் முருகா!

செ.சிவபாதசுந்தரம்,
மீசாலை

## என்றென்றும் அருளிடு வேலவனே!

நல்லையம்பதியில் உறைகின்ற நாயகனே!
நாற்றிசையும் மக்களை கவர்ந்திழுப்பவனே!
போற்றிடும் புனிதரின் புண்ணிய வேலவனே!
தூக்குகிறோம் இருகரங்கள் உந்தனது அருள் வேண்டி!
திருவுலா பவனியில் திருமுக தரிசனம்
அலங்கார பவனியில் ஆறுமுகனின் அருள் முகம்
என்றென்றும் அருளிடு வேலவனே! நீ

நகுலா-சிவநாதன்,
ஜேர்மனி



# அமைதி காக்கும் பணிகளுக்கு இலங்கை கூடுதல் பங்களிப்பு

## வழங்கும் என்கிறார் இராணுவத் தளபதி

கொழும்பு,செப்.2
ஐக்கிய நாடுகள் அமைதி காக்கும் பணிகளில் இலங்கை எதிர்வரும் காலங்களில் கூடுதல் பங்களிப்பு வழங்கும் என்று இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் தயாரட் நாயக்க தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அமைதி காக்கும் பணிகளில் 5000 படையினரை ஈடுபடுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

தொழில்சார் இராணுவம் என்ற ரீதியில் அமைதி காக்கும் பணிகளில் இலங்கை இராணுவம் கூடுதல் பங்களிப்பு வழங்க உத்தேசித்துள்ளது.

அதிகளவான படையினரை அமைதி காக்கும் பணிகளில் ஈடுபடுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஹெய்ட்டி மற்றும் லெபனான் ஆகிய நாடுகளில் அமைதி காக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பயங்கரவாதத்தை இல்லாதொழிப்பது எவ்வாறு என்ற மிகப் பெரிய பாடத்தை இலங்கை இராணுவம் உலகுக்கு உணர்த்தியுள்ளது.

மூன்று தசாப்த காலமாக நீடித்த போரை இல்லாதொழித்து நல்லிணக்கத்தை ஏற்படுத்த உலக அளவில் இலங்கை இராணுவம் சரித்திரம் படைத்துள்ளது.-என்றார்.

இலங்கையைச் சேர்ந்த 900 படையினர் ஐக்கிய நாடுகள் அமைப்பின் அமைதி காக்கும் பணிகளில் தற்போது ஈடுபட்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச)

# காரைதீவிலிருந்து மனித எச்சங்கள்

அம்பாறை,செப்.2
அம்பாறை,காரைதீவு,8ஆம் பிரிவில் கடற்கரையை அண்டிய வளவொன்றிலிருந்து நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை குப்பையைப் புதைப்பதற்கு குழி வெட்டியபோது மனித எச்சங்கள் மீட்கப்பட்டன.

2004 ஆம் ஆண்டு இடம் பெற்ற சுனாமி பேரலையின் பின்னர், கரையொதுங்கிய பெரும்பாலான சடலங்கள் பரவலாக இந்தப் பகுதிகளில் புதைக்கப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனவே இது சுனாமியின் போது உயிரிழந்த ஒருவரின் உடலாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது. இந்தச் சம்பவம் தொடர்பில் காரைதீவு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

# மின்னல் தாக்கிப் பெண் உயிரிழப்பு

மட்டக்களப்பு,செப்.2
மட்டக்களப்பு, கிரான் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட மயிலந்தனை வயல் வெளியில் மின்னல் தாக்கி குடும்பப் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார். ஆலங்குளம் கிராமத்தைச் சேர்ந்த 6 பிள்ளைகளின் தாயான கந்தசாமி குவேந்தினி (வயது 47) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

மயிலந்தன்னை வயல் வெளியில் வயல் வேலையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த போதே சனிக் கிழமை மாலை அவர் மின்னல் தாக்கத்துக்கு உள்ளாகி உயிரிழக்க நேரிட்டது. (ச)

## தென்மராட்சி மேற்கு பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் (வ-து)

### கைதடி

**எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு தார் வீதி அமைத்தலுக்கான கூறுவிலை கோரல்**

எமது சங்கத்தினால் A 9 கண்டி வீதியில் நடத்தப்படும் எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு முன்பாக தார் வீதி அமைப்பதற்கு பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து கூறுவிலை கோரப்படுகின்றது.

* கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி: 02.09.2013 - 12.09.2013
* கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி :17.09.2013 பிற்பகல் 3 மணிவரை
* கேள்விப்பத்திரம் பரிசீலிக்கப்படும் திகதி: 17.09.2013 பிற்பகல் 3 மணிக்கு
* மீளளிக்கப்படாத வைப்புப்பணமாக ரூபா 1000.00 செலுத்துதல் வேண்டும்.
* மீளளிக்கப்படும் வைப்புப்பணமாக ரூபா 25000,00 செலுத்துதல் வேண்டும்.
* சரியாக நிரப்பப்படாத தெளிவற்ற கேள்விப் பத்திரங்களை ஏற்கவோ, மறுக்கவோ பணிப்பாளர் சபைக்கு அதிகாரம் உண்டு.
* தெரிவு செய்யப்படும் கேள்விதாரர் எரிபொருள் நிலைய செயற்பாட்டை பாதிக்கா வண்ணம் ஒப்பந்தம் கைச்சாத்திடும் திகதியில் இருந்து குறுகிய சில தினங்களுக்குள் பூர்த்தி செய்து கையளிக்க வேண்டும். குறித்த தினங்களுக்குள் உரிய வேலைத்திட்டத்தினை பூர்த்தி செய்து தரப்படாத பட்சத்தில் அறவிடப்படும் கட்டண விவரம் ஒப்பந்தத்தில் குறித்துரைக்கப்படும்.

கேள்வி விண்ணப்பப்படிவத்தினை உரிய வைப்புப் பணத்தைச் செலுத்தி தலைமைப் பணிமனையில் கடமை நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திரத்தினை ஒப்பந்தகாரர்கள் "**தலைவர், தென்மராட்சி மேற்கு பல நோக்கு கூட்டுறவுச் சங்கம், மானிப்பாய் வீதி, கைதடி**" எனும் பெயருக்கு முகவரியிட்டு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "எரிபொருள் நிரப்பு நிலைய தார் வீதி அமைப்பதற்கான கூறுவிலை" என எழுதி தலைமைப்பணிமனையில் உள்ள கேள்விப்பத்திர பெட்டியில் இடும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றேன்.

தென்மராட்சி மேற்கு, ப.நோ.கூ.சங்கம். மானிப்பாய் வீதி, கைதடி. தலைவர்

(சி/11723) (46.6.3)

Mega
ஸ்கொலர்ஷிப்
கொம்ப்யூட்டர் தொழிற்கல்விக்கான புலமைப்பரிசில்

கொம்ப்யூட்டர் புலமைப்பரிசில்

* பரீட்சை அனுமதி முற்றிலும் இலவசம்.
* பரீட்சையை தமிழ் அல்லது ஆங்கிலத்தில் எழுதலாம்.
* 15 வயதிற்கு மேற்பட்ட அனைவரும் பங்குபற்றலாம்.
* இலகுவான 25 (MCQ) பொது அறிவு வினாக்கள்
* பரீட்சை 30 நிமிடங்கள் மட்டுமே.
* 75% வரையான ஸ்கொலர்ஷிப் (கட்டணக்கழிவு).
* இலவச பாடநூல்கள் (இந்தியா & இலங்கை).
* தவணைமுறை கட்டண வசதி.
* சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்கள்.

Win 75%

Sept. 8th ஞாயிறு

விரையுங்கள், வெற்றிபெறுங்கள்



CSC-ASIAN
COMPUTER EDUCATION
AN ISO 9001 : 2008 CERTIFIED TRAINING INSTITUTION

யாழ்ப்பாணம்
2G ஸ்ரான்லி வீதி, 021 2225677

நெல்லியடி
கொடிகாமம் வீதி, 021 2262399

சாவகச்சேரி
கட்டுக்காணி வீதி, 021 2270267

கிளிநொச்சி.
A9 வீதி, ஆனந்தபுரம், 021 2283625

வவுனியா 192, குருமண்காடு சந்தி, மன்னார் வீதி, 024 2226050

உயர்தரத்தின் பின்னர் சர்வதேச அங்கீகாரமுள்ள
ஒரே ஒரு IT DIPLOMA கற்கைநெறி



DiTEC INTERNATIONAL
Diploma in Information Technology

DiE
Diploma in English

பாட உள்ளடக்கங்கள்
* IT Fundamentals
* Microsoft Office
* PC Hardware
* Networking Essentials
* Internet & Email
* Web Designing - HTML
* Graphics and Animation
* Software Engineering
* C#.net
* Java
* Web Applications
* ASP.net
* Project

யாருக்குப் பொருத்தமானது ?
* A/L பரீட்சைக்குத்தோற்றிய மாணவர்களுக்கு
* IT துறைக்கான உயர்கல்வி வெற்றிக்கான ஆரம்ப அடித்தளத்தை எதிர்நோக்குவோருக்கு
* பல்கலைக்கழக மாணவர்களுக்கு
* வேலைவாய்ப்பு ஒன்றினை எதிர்நோக்குவோருக்கு

கற்கைநெறியின் சிறப்பம்சங்கள்
* 10 பாட டிப்ளோமாக்கள் உள்ளடங்கியது
* பாடப்புத்தகங்கள் இலவசம்
* அனுபவமிக்க விரிவுரையாளர்கள்
* ஒரு வருடம் 20,000 மாணவர்கள் பெற்றுக்கொண்ட தகமை
* ESOFT இன் 10 பாட டிப்ளோமாக்கள் சான்றிதழுடன் Edexcel UK, BCS-UK போன்ற பிரித்தானிய சான்றிதழ்களையும் பெறமுடியும்.

FREE Pendrive

பாடநெறிகள் தொடர்பாக மேலதிக தகவல்களை தெரிந்துகொள்வதற்கு உங்கள் பெயர் மற்றும் பாடநெறியினை கீழுள்ள இலக்கத்திற்கு SMS செய்யுங்கள்
077 990 56 11

சர்வதேச தரம்வாய்ந்த மேலும் 3 டிப்ளோமாக்கள் முற்றிலும் இலவசம்

புதிய பிரிவுகள்
2013.09.06 காலை 9:00 மணி
2013.09.07 காலை 9:00 மணி

ESOFT METRO CAMPUS - JAFFNA
No.137, K.K.S Road, Jaffna | 021 222 4142

ESOFT COMPUTER STUDIES - KILINOCHCHI
No.01, Kanagapuram Road, Kilinochchi | 021 228 5444

ESOFT
Shaping Lives, Creating Futures.
ESOFT METRO CAMPUS
Sri Lanka's Largest IT Education Network

HOTLINE : 077 309 9 308 (சி/11722) (3.6) www.esoft.lk 50 நாடளாவிய கிளைகள்

## பாடசாலைகள் இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், செப். 2
நாட்டிலுள்ள தமிழ், சிங்களப் பாடசாலைகள் அனைத்தும் மூன்றாம் தவணைக்குரிய கற்றல் செயற்பாடுகளுக்காக இன்று திங்கட்கிழமை முதல் ஆரம்பமாகின்றது. (ஒ-400-422)

## நிதி மோசடி; பெண்கள் இருவர் கைது

யாழ்ப்பாணம், செப். 2
21 பேரிடம் நிதி மோசடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் வடமராட்சியைச் சேர்ந்த இரண்டு பெண்களைக் கைது செய்துள்ளதாக கொடிகாமம் பொலிஸார் தெரிவித்தனர்.
21 பேரிடமும் தலா 13 ஆயிரம் ரூபா வீதம் 2 லட்சத்து 73 ஆயிரம் ரூபா பணத்தைப் பெற்று இவர்கள் மோசடி செய்துள்ளதாக முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றதன் அடிப்படையில் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.
நிதி நிறுவனம் ஒன்றில் பணிபுரியும் யுவதி ஒருவரும், திருமணம் முடித்த பெண் ஒருவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் உடுப்பிட்டி மற்றும் நெல்லியடியைச் சேர்ந்தவர்கள் .
நேற்று முன்தினம் பிற்பகல் கைது செய்யப்பட்ட இவர்களிடம் தாம் விசாரணை மேற்கொண்டு வருவதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (து-4)

## சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் 'கிளினிக்' விவரம்



தென்மராட்சி,செப்.2
சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் மாதம் ஒரு தடவை நடத்தப்படும் கிளினிக் திகதிகள் அறிவிக்கப்பட்டுள்ளன.
செப்ரெம்பர் 9 ஆம் திகதி திங்கட்கிழமை ஸ்கானிங் கிளினிக்கும், மறுநாள் செவ்வாய்க்கிழமை மூட்டுவாதக் கிளினிக்கும் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.
யாழ்.போதனா வைத்தியசாலை துறைசார் வைத்திய நிபுணர்களால் கிளினிக் நடத்தப்பட்டு வருவதும் குறித்த கிளினிக்குகளுக்கு தென்மராட்சி, பளை, வடமராட்சி கிழக்கு, கரைச்சி பூநகரி போன்ற பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் கலந்து கொள்வதும் குறிப்பிடத்தக்கது. (வ-9)

## நாயும் மோட்டார் சைக்கிளும் மோதி விபத்து

தென்மராட்சி, செப். 2
வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் வீதியின் குறுக்கே ஓடிய நாயுடன் மோதி தூக்கி வீசியதில் மோட்டார் சைக்கிளோட்டி காயமடைந்தார்.
இந்தச் சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை வரணியில் இடம்பெற்றது.
வரணி வடக்கைச் சேர்ந்த குணபாலசிங்கம் காந்தரூபன்(வயது-27) என்பவர் காயங்களுக்கு இலக்கான நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். (ஒ-9)

## நாவற்குழி பாலத்தில் மீண்டும் வேகத் தடை



நாவற்குழி பாலத்தின் இருமருங்கிலும் வீதியில் வேகத்தடைகள் அமைக்கப்பட்டுள்ளன. முன்னர் இந்த வீதித் தடை இருந்து அகற்றப்பட்டிருந்தது. நேற்றுமுன்தினம் மீண்டும் வீதித் தடை அமைக்கப்பட்டது. (வ-51)

# காலபோக நெற்செய்கை அதிகரிக்க நடவடிக்கை



தென்மராட்சி, செப். 2
இந்த வருட காலபோக நெற்செய்கையை அனைத்து நெல் வயல்களிலும் மேற்கொள்ள கமநல சேவைகள் திணைக்களத்தினர் ஏற்பாடு செய்துள்ளனர்.
நெற் செய்கைக்கான விதை நெல், மானிய உரவகைகள் போன்றவை வழங்கப்படுகின்ற போதிலும் வயல் உரிமையாளர்கள் சிலர் கடந்த வருடங்களில் நெற்செய்கை மேற்கொள்ளப்படாதமை அவதானிக்கப்பட்டுள்ளது.
எனவே இந்த வருட காலபோக நெற் செய்கையை அனைத்து வயல்களிலும் மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் அந்தந்த கமநல சேவைகள் நிலையத்தால் எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.
இந்த வருடம் நெற்செய்கை மேற்கொள்ளப்படாத வயல்களை கமநல சேவ்வைகள் நிலையத்தினர் பொறுப்பேற்று நெற் செய்கை மேற்கொள்ளப்படவுள்ளது.
தமது வயல்களில்நெற் செய்கை மேற்கொள்ள முடியாதவர்கள் தத்தமது பிரிவு கமநல சேவைகள் நிலையத்தில் வயல்களின் உறுதியைச் சமர்ப்பித்து அனைத்து வயல்களிலும் காலபோக நெற்செய்கையை மேற்கொள்ள ஒத்துழைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளதாக கமக்கார அமைப்புக்கள் தெரிவித்தன. (வ-9)

## பலாலி வீதியில் பெரியளவில் வீதி திருத்தப் பணிகள்


### நல்லூருக்குக் காவடிகள் வருவதில் சிரமம்

வலி. வடக்கு, செப்.2
யாழ்ப்பாணம் பலாலி வீதியில் யாழ்ப்பாணம் பல்கலைக் கழகச் சந்திக்கும் கந்தர்மடம் சந்திக்கும் இடைப்பட்ட பகுதியில் பெரியளவில் வீதி திருத்தப்பணிகள் இடம்பெற்று வருகின்றன.
வீதியின் இருமருங்கிலும் கிடங்குகள் வெட்டப்பட்டு வெள்ள வடிகால்கள் அமைக்கப்பட்டு வருவதால் போக்குவரத்து செய்வதில் சிரமங்கள் ஏற்படுகின்றன.
நாளை மறுதினம் நல்லூர் கந்தனின் தேர்த்திருவிழா வையொட்டி ஆயிரக்கணக்கான அடியவர்கள் இந்த வீதியைப் பயன்படுத்தவுள்ளதுடன் அதிக எண்ணிக்கையான வாகனங்கள் மற்றும் காவடிகள், தூக்குக் காவடிகளும் இந்த வீதி வழியாக நல்லூர் ஆலயத்தை சென்றடையவுள்ளன.
வீதியோரங்களில் காணப்படும் கற்கள், மணல்கள் போன்றவற்றை தேர், தீர்த்தம் மற்றும் பூங்காவனத் திருவிழா நடைபெறும் தினங்களில் அகற்றி அடியவர்கள் போக்குவரத்து செய்வதற்கு வசதி செய்து கொடுக்கப்படுவதுடன் போக்குவரத்துப் பொலிஸாரும் வீதி ஒழுங்கு நடவடிக்கையை இந்தப் பகுதியில் மேற்கொள்ள வேண்டியதும் அவசியமாகும் எனவும் அடியவர்கள் தெரிவிக்கின்றனர். (வ-86)

வீதியின் இரு மருங்கிலும் கிடங்குகள் வெட்டப்பட்டு வெள்ள வடிகால்கள் அமைக்கப்பட்டு வருவதால் போக்குவரத்து செய்வதில் சிரமங்கள் ஏற்படுகின்றன.

## யாழ்.பொதுநூலகத்தின் இணையத்தளம் 'அவுட்'

யாழ்ப்பாணம், செப்.2
யாழ்.பொது நூலகத்தின் இணையத்தளம் இயங்காதிருப்பதால் அதற்கென தனியார் ஒருவர் வழங்கி வந்த நிதியை நிறுத்தி விட்டதாக யாழ்.மாநகர ஆணையாளர் எஸ்.பிரணவநாதன் தெரிவித்தார்.
யாழ்.மாநகர சபையின் ஜீலை மாதக் கூட்டத்தில், யாழ். பொது நூலகத்தின் இணையத்தளம் தற்சமயம் செயலிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.



இது தொடர்பாக நூலகர் விளக்கமளிக்கையில்,
இந்த இணையத்தளத்தைப் பராமரிப்பது தனியார் நிறுவனமாகும்.
நாங்கள் வழங்கும் தகவல்களை அந்த இணையத் தளமே எமது நூலகத்தின் இணையத்தளத்தில் வெளியிடுகின்றது.
எமது இணையத்தளம் தற்போது செயலிழந்துள்ளது குறித்து குறிப்பிட்ட நிறுவனத்துக்குத் தெரியப்படுத்தியபோதும் அவர்கள் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை எனத் தெரிவித்தார்.
இந்த இணையத்தளத்துக்கென ஆண்டுதோறும் ரூபா ஐந்து லட்சம் நிதியை செலவு செய்து வந்ததாகவும் ஆணையாளர் தெரிவித்தார். (து-7)

புனரமைப்புச் செய்யப்பட்டும்

## காப்பெற் வீதியின் நடுவே பள்ளம்



குருநகர், செப்.2
யாழ்ப்பாணம் கன்னாதிட்டி வீதி புனரமைப்புச் செய்யப்பட்டுள்ள போதிலும் இவ்வீதியின் மத்தியில் காணப்படும் பள்ளம் காரணமாக பயணிப்போர் மிகுந்த சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.
குறித்த வீதியின் இருமருங்கிலும் காணப்படும் வடிகால் இந்த வீதியூடாக நீர் செல்ல அமைக்கப்பட்டுள்ளது.
இதன்போதும் பள்ளம் நிரவப்பட்டு உயர்த்தப்படாததாலேயே இந்த வீதியின் மத்தியில் பள்ளம் காணப்படுகிறது.
இதனை செப்பனிட நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியம் என இந்த வீதியூடாகப் பயணிப்போர் தெரிவித்தனர். (வ-51)

எழுதுமட்டுவாழ் நெற் செய்கையாளர்

## மீசாலை கமநல நிலையத்தில் வரி செலுத்த முடியும்

தென்மராட்சி, செப். 2
தென்மராட்சி கிழக்கு எழுதுமட்டுவாழ் தெற்கு கமக்கார அமைப்புக்கு உட்பட்ட நெற்செய்கையாளர்கள் இந்த வருட காலபோக நெற்செய்கை மேற்கொள்ளும் வயல்களுக்கான வரியை மீசாலை புத்தூர் சந்தியில் உள்ள கமநல சேவைகள் நிலையத்தில் செலுத்துமாறு அமைப்பின் செயலாளர் இ.தெய்வேந்திரம்பிள்ளை அறிவித்துள்ளார்.
நெற் செய்கை மேற்கொள்ளப்படும் வயல்களின் உறுதிகளையும் குத்தகைக்கு நெற்செய்கை மேற்கொள்வோர் வயல் உரிமையாளர்களால் வழங்கப்பட்ட குத்தகைப் பத்திரத்தை அமைப்பின் பரிந்துரையுடனும் கமநல சேவைகள் நிலையத்தில் சமர்ப்பித்து பரப்புக்கு ஒரு ரூபா 50 சதம் வீதம் வரியைச் செலுத்துமாறும் அறிவித்துள்ளார்.
வரி செலுத்தப்பட்டமைக்கான பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்து இந்த வருட காலபோக நெற்செய்கைக்கான உரமானியத்துக்கான படிவத்தைப் பெற்று விண்ணப்பிக்குமாறும் அறிவித்துள்ளார்.
எதிர்வரும் 8 ஆம் திகதிக்கு முன்னர் வரியைச் செலுத்துமாறும் கேட்டுள்ளார். (வ-9)

எதிர்வரும் 8 ஆம் திகதிக்கு முன்னர் வரியைச் செலுத்துமாறும் கேட்டுள்ளார்.



## தென்மராட்சியில் இருவருக்கு டெங்கு

தென்மராட்சி,செப்.2
தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த இருவருக்கு டெங்கு ஏற்பட்டுள்ளதாக ஆரம்பப் பரிசோதனைகளில் தெரிய வந்துள்ளது.
சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளின்போது டெங்கு ஏற்பட்டமைக்கான அறிகுறிகள் காணப்பட்டதால் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.
கொழும்பிலிருந்து மீசாலையில் உள்ள உறவினர் வீட்டுக்கு வருகை தந்திருந்த மகாலிங்கம் கரிகரன் (வயது-13) மிருசுவில் தவசிக் குளத்தைச் சேர்ந்த சின்னத்துரை தங்கமயில் (வயது-31) ஆகிய இருவருமே டெங்கால் பீடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக் கப்பட்டது. (வ-9)



# கொழும்பில் இருக்கிறது என் தந்தையின் துப்பாக்கி

## அங்கஜன் விளக்கம்

எனது தந்தையின் கைத்துப்பாக்கி கொழும்பில் இருக்கி றது. இதுவேஉண்மை. இந்தநிலையில் அவர் யாழ்ப்பாணத்தில் எவ்வாறு துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொண்டிருக்க முடியும்? இவ்வாறு கேள்விஎழுப்புகிறார்ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வடமாகாண சபையின் வேட்பாளர் அங்கஜன் இராமநாதன்.

யாழ்ப்பாணத்திலுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அலுவலகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கேள்வி எழுப்பினார்.

அங்கு, அவர் தொடர்ந்து கூறியதாவது:-

எனது தந்தையாராகிய இராமநாதனிடம் அனுமதிபத்திரம் பெற்ற கைதுப்பாக்கி இருக்கின்றது. அந்த துப்பாக்கியை அவர் கடந்த 22 ஆம் திகதி வியாழக்கிழமை கொழும்பில் பொலிஸாரிடம் கையளித்துள்ளார்.



இந்த நிலையில் சாவகச்சேரி இடம்பெற்ற சம்பவத்தில் எனது தந்தை எவ்வாறு துப்பாக்கிப் பிரயோகத்தைச் செய்திருக்க முடியும்?.

எனது தந்தையாருக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள பொய்க் குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் அவர் கைது செய்யப்பட்டுள்ளார். அவருக்கு ஏற்பட்டுள்ள உடல் நலக்குறைவால் அவர் தற்போது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இவை அனைத்துமே தேர்தல் காலங்களில் என்னை முடக்கிப் போடுவதற்காக மேற்கொள்ளப்படுகின்ற திட்டமிட்ட செயற்பாடுகள். எனக்கு மக்களின் ஆதரவு என்றுமே உள்ளது. எனது பயணத்தை நான் கைவிடமாட்டேன் -என்று அவர் தெரிவித்தார். (ஐ)

## ஐ.தே.கட்சி ஆதரவாளர் மீது புத்தளத்தில் தாக்குதல்

வட மேல் மாகாண சபை தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் போட்டியிடும் வேட்பாளர் ஒருவரின் ஆதரவாளர் மீது இனந்தெரியாத நபர்கள் கூரிய ஆயுதங்களால் தாக்குதல் நடத்தியுள்ளதாகத் தெரியவருகிறது.

நேற்றுமுன்தினம் இரவு புத்தளம், ஆரச்சிக்கட்டு பிரதேசத்தில் தேர்தல் சுவரொட்டிகளை ஒட்டிக் கொண்டிருந்த வேளையில் மோட் டார் ஸ்சைக்கிளில் வந்த குழுவினர் இவர்மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக தெரிவிக் கப்பட்டுள்ளது.

காயமடைந்தவர் சிலாபம் வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர். (ஐ)































## வேட்பாளர் பாலச்சந்திரனின் அலுவலகம் மீது மீண்டும் தாக்குதல்

யாழ்ப்பாணம், செப்.2
ஐக்கிய தேசிய கட்சியின் மாகாண சபை வேட்பாளர் க.பாலச்சந்திரனின் காரை நகர், வலந்தலையில் உள்ள அலுவலகம் மீதும் அங்கு காட்சிப்படுத்தப்பட்ட சுவரொட்டிகள் மீதும் இரண்டாவது தடவையாக கழிவு ஒயில் வீசி தாக்குதல் நடத்தப் பட்டுள்ளது.
இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் சனிக் கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.
ஐக்கிய தேசியக் கட்சியின் மாகாண சபை வேட்பாளரும் காரைநகர் பிரதேச சபை உறுப்பினருமான க.பாலச்சந்திரனின் அலுவலகம் கடந்த வாரம் ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் டி.எம்.சுவாமிநாதன், ரவி கருணாநாயக்க ஆகியோரால் திறந்து வைக் கப்பட்டது.
அன்றைய தினம் இரவு குறித்த அலுவலகம் மீது கல் வீசி சேதப்படுத்தப்பட்டது.
அதனைத் தொடர்ந்து நேற்று முன்தினம் அலுவலகம், அலுவலகத்தில் பொருத்தப் பட்ட கட்டவுட்டுக்கள் என்பவற்றில் கழிவு ஒயில் வீசி தாக்கப்பட்டுள்ளது.
இந்தச் சம்பவம் தொடர்பாக ஊர்காவற்றுறை பொலிஸாரிடமும் ஐக்கிய தேசிய கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் ரவிகருணாநாயக்க, சுவாமிநாதன் ஆகியோரிடமும் தாம் முறையிட் டுள்ளதாக வேட்பாளர் க.பாலச்சந்திரன் தெரிவித் துள்ளார். (வ-60)



## அடக்கப்பட்ட மக்களுக்காக குரல்கொடுப்பதே நோக்கம்

### யூனியன்குளம் பரப்புரைக் கூட்டத்தில் அரியரட்ணம்

அக்கராயன், செப். 2
பேச்சு சுதந்திரம், நடமாடும் சுதந்திரம் மறுக்கப்பட்ட நிலையில் உள்ள மக்களின் குரலாக ஒலிப் பேன் என வட மாகாண சபைத் தேர்தலின் கிளிநொச்சி மாவட்ட வேட்பாளர் முன்னாள் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.அரியரட்ணம் தெரிவித்துள்ளார்.
கிளிநொச்சி கோணாவில் யூனியன்குளம் கிராமத்தில் அண்மையில் நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் இதனைத்தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,
இந்தியா, அமெரிக்கா போன்ற உலக நாடுகளின் அழுத்தம் காரணமாக தற்போது வட மாகாணத் தேர்தலை நடத்த அரசு முன்வந்துள்ளது.
அரசு ஏற்படுத்தியதாக சொல்லப்படும் அமைதிச் சூழலில் எமக்கான பேச்சு சுதந்திரம் அற்றுப் போய்விட்டது. எழுத்துச் சுதந்திரம் இல்லாமல் போய்விட்டது. நாம் நினைத்த மாத்திரம் நடந்துசெல்லும் உரிமைகூட அற்றுப் போய்விட்டது.
இவை எல்லாவற்றுக்கும் எங்கோ ஓர் இடத்தில் குரல் கொடுக்க முடியும் என்ற நேரத்தில்தான், வடமாகாண சபைத் தேர்தல் வந்துள்ளது.
கல்வித்துறையிலும் கூட்டுறவுத்துறையிலும் நீண்ட அனுபவம் எனக்கு இருப்பதன் காரணமாக இந்தத் துறைகளின் அபிவிருத்தியை நோக்காகக் கொண்டே தேர்தலில் போட்டியிடுகிறேன்.
நிச்சயமாக வடக்கு தேர்தலில் கூட்டமைப்பு வெல்லும். இந்த நம்பிக்கை மக்களிடத்தில் உள்ளது. அதற்கு நாம் துணைநிற்போம்-என்றார். (ஐ-18)

## ஐ.ம.சு.மு. வேட்பாளருக்கு எதிராக முறைப்பாடு

### யாழ்.வாக்காளர் ஒருவர்

யாழ்ப்பாணம், செப்.02
யாழ்ப்பாணம் பிரதான வீதிகளில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வேட்பாளர் மு.றெமீடியஸ் தனது பெயர், மற்றும் கட்சி இலச் சினை என்பவற்றை பொறித்துள்ளமை தொடர்பில் வாக்காளர் ஒருவர் குறித்த வேட்பாளருக்கு எதிராக தேர்தல் ஆணையாளரிடம் ம்றைப் பாடு செய்துள்ளார்.
இது குறித்து அவர் வீதி அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் தேர்தல்கள் திணைக் களம், யாழ்.மாநகர சபை முதல்வர்ஆகியோருக்குதனது முறைப்பாட்டை அனுப்பி வைத்துள்ளார்.

வீதி அபி விருத்தி
அதிகாரசபை
மற் றும்
தேர்தல்கள்
திணைக் களம்,
யாழ்.மாநகர
சபை முதல்வர்
ஆகியோருக்கு
முறைப்பாடு

அந்த முறைப்பாட்டுக் கடிதத்தில் குறிப்பிப்பட்டிருந்ததாவது
வடமாகாண சபைத் தேர்தலில் யாழ்.மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் போட்டியிடும் மு.றெமீடியஸ் என்பவர் வீதிகளில் தனது பெயரையும் கட்சிச் சின்னத்தையும் பொறித்துள்ளார். சில இடங்களில் எழுதப்பட்டவற்றைப் பொலிஸார் தார்பூசி அழித்தாலும் பெரும்பாலான இடங்களில் இப்போதும் காணப் படுகின்றன.
குறிப்பாக ஏ-9 வீதி, கொழும்புத்துறை, சுண்டுக்குளி, யாழ்.பிரதானவீதி; முதலாம், இரண்டாம், மூன்றாம், நான்காம் குறுக்குத் தெருக்கள், வேம்படி வீதி, குருநகர் மற்றும் பரிசுத்த கொஞ் சேஞ்சி மாதா பேராலய சுற்றுவட்டம் ஆகிய இடங்களிலும் இவை இன்னமும் காணப்படுகின்றன.
இது விடயத்தில் தேர்தல் ஆணையாளர் கவனம் எடுத்து தேர்தல் சட்டவிதிகளுக்கு அமைய உரிய ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறு கேட்கிறேன்-என்று அந்த முறைப்பாட்டில் தெரி விக்கப்பட்டுள்ளது. (ஐ)

பல்லாயிரக்காணக்கான மாணவர்கள் மக்கள் பலத்துடன்
வட மாகாணசபைத் தேர்தலில் வவுனியா மண்ணில் ...
எம்.எம்.ரதன் ஆசிரியர்
(தலைவர். இலங்கைத் தமிழரசுக் கட்சி இளைஞர் அணி)
வவுனியா மாவட்டம்
X 8
தமிழ்த் தேசிய கூட்டமைப்பு
எங்கள் வாக்கு
எம்.எம்.ரதன்
ஆசிரியருக்கே



ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின்
ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வேட்பாளர்
சுந்தரம் டிவகலாலா
முன்னாள் செயலாளர், கல்வி,பண்பாட்டு,விளையாட்டுத்துறை அமைச்சு,
வடக்கு கிழக்கு மாகாணம்.
அவர்களை ஆதரிப்போம்
X 19
(#/11220)
கல்வியின் ஊடாக அரசியல், சமூக பொருளாதார மேம்பாடு



வடமாகாண சபைத் தேர்தல் 2013
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு
கிளிநொச்சி மாவட்டத்தின்
ஒரேயொரு பிரதான பெண் வேட்பாளர்
வடக்கில் உள்ள
ஒவ்வொரு பெண்ணுக்கும்
உரிமைக்கும் சலுகைக்கும்
வித்தியாசம் தெரியும்.
பெண் தலைமைத்துவ
மேம்பாட்டுக்காக எனது குரல்
தொடர்ந்து ஓங்கி
ஒலித்துக் கொண்டிருக்கும்
X 4
கே. வினுபானந்தகுமாரி (ஆசிரியை)
(இலங்கைத் தமிழரசுக் கட்சி)



வடமாகாண சபைத் தேர்தல் 2013
யாழ்ப்பாண மாவட்டம்
பைந்தமிழ் மண்ணில்
தன்னலமற்ற தமிழன்
தமிழரசுக் கட்சி வேட்பாளர்
தமிழ் தேசிய கூட்டமைப்பு
வடமராட்சியின் மைந்தன்
X 14
(C/11230)
சந்திரலிங்கம் சுகிர்தன் (B.Com)



வடக்கு மாகாண சபைத் தேர்தல் - 2013
யாழ்ப்பாண மாவட்டம்
தமிழர் தாயகத்தில் சமஸ்டி அடிப்படையிலான
பூரண சுயாட்சித் தமிழ் அரசை நிறுவுவோம்!
இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைமையிலான ஐந்து கட்சிகளின் கூட்டணியான
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை வெற்றி பெறச் செய்வோம்
எம்.கே.சிவாஜிலிங்கம்
[முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்]
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர்.
9
X
இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | |




வடமாகாண சபைத்தேர்தல் 2013
யாழ்.மாவட்டம்
எங்களதும், உங்களதும்
காணாமல் போன
உறவுகளுக்காக....
விடுதலையின்றி
சிறைகளில் அடைத்து
வைக்கப்பட்டிருக்கும்
அரசியல் கைதிகளுக்காக
குரல் எழுப்பி வரும்
திருமதி அனந்தி
சசிதரனை ஆதரியுங்கள்.
X 1
திருமதி அனந்தி சசிதரன்
(எழிலன்)



உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## நேரில் வந்ததால் உண்மைகளை கண்டறிந்து செல்கிறார் நவி

இலங்கையின் மனித உரிமைகள் நிலைமை குறித்தும் முன்னேற்றகரமான, உருப்படியான ஏற்றுக் கொள்ளக்கூடிய செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றனவா என்பது குறித்தும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கண்காணிப்பகம் பூதக்கண்ணாடி கொண்டு அவதானிக்கும். அப்போது இந்நாட்டு அரசுக்கு நல்கக் கூடிய அது சார்ந்த உதவிகளை வழங்குவோம்.

கடந்த ஒரு வாரமாக இலங்கையில் தங்கியிருந்து, தாம் கண்டும், கேட்டும் பெற்ற மனித உரிமை நிலைமைகள் குறித்து, நேற்றுமுன்தினம் ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கையிலேயே ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை மேற்கண்டவாறு கூறினார்.

★ இந்த நாட்டில் நடைபெற்ற போர் முடிவுற்றிருக்கலாம். ஆனால் இங்கு ஜனநாயகத்துக்குக் குழி பறிக்கப்பட்டு வருகின்றது; சட்ட ஆட்சியும் அரிக்கப்பட்டு வருகிறது.

★ இந்தநாட்டில் போர்க் குற்றங்கள் இழைக்கப்பட்டதான குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக இங்கு நம்பத் தகுந்த விசாரணைகள் நடத்தப்பட வேண்டும்.

- அதில் ஈடுபாடு காட்டாவிடில் அனைத்துலக விசாரணை தேவை என்ற குரல்கள் பல்கிப் பெருகும்.

★ கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு முழுமையான விசாரணைகளை நடத்துவதற்கென உருவாக்கப்படவில்லை. அதேவேளை இராணுவத்தினரின் விசாரணைக்குழுவிடம் வெளிப்படைத் தன்மையும் சுயாதீனமும் இருக்கவில்லை.

★ மனித உரிமைகளை மக்கள் உரிய அளவில் அனுபவிப்பது தொடர்பில், இந்த நாட்டில் முன்னேற்றங்கள் இடம்பெறுகின்றனவா என்பதனை நாம் மிக உன்னிப்பாக, கண்ணாடி அணிந்து கூர்மையாக அவதானிப்போம். எங்களால் இயன்றளவு அதற்கு உதவுவோம்.

அவர் கரிசனை காட்டி வெளிப்படுத்திய ஏனைய முக்கிய அம்சங்களாக பின்வருவனவற்றையும் கொள்ளலாம்:

- போரின் முடிவு கொடுத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, இலங்கையை எல்லோரையும் அரவணைத்துச் செல்லும் நாடாகக் கட்டியெழுப்புவதற்குப் பதிலாக, சர்வாதிகாரப் போக்கை நோக்கிய நிலையில் இட்டுச் செல்வது ஆழ்ந்த கவலை தருகிறது.
- காணாமற்போனோர் தொடர்பாக விசாரிக்க அரசினால் நியமிக்கப்பட்ட ஆணைக்குழு வடக்கு, கிழக்குத் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் விசாரணை நடத்தமாட்டாது என்பது தெரியவந்தபோது அதிர்ச்சியடைந்தேன்.
- இலங்கையில் ஊடக சுதந்திரம், கருத்துச் சுதந்திரம் என்பன கேள்விக் குறிகளாகவே நீண்டு, உயர்ந்து நிற்கின்றன. அது தொடர்ந்தும் அச்சுறுத்தலாகவே உள்ளது.
- யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவரும் 'உதயன்' பத்திரிகைபல தடவைகள் தாக்கப்பட்டுள்ளது. அது வருத்தம் அளிப்பதாகும்.
- அதனால் தாக்குதல்களுக்கு அஞ்சி பல பத்திரிகைகள் சுயதணிக்கையைக் கையாள்கின்றன.
- 2005 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை 30 ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டும், காணாமற்போயுமுள்ளனர். இவற்றிலிருந்து இலங்கையில் கருத்துச் சுதந்திரம் எந்தளவிற்கு அச்சுறுத்தலாகி உள்ளது என்பது தெளிவாகின்றது- என்றார்.

அவர் தமது இலங்கை விஜயத்துக்கு முன்னதாக இந்நாடு குறித்து எத்தகைய கருத்தை, நிலைப்பாட்டைக் கொண்டிருந்தாரோ அதே நிலையிலேயே இங்கிருந்து செல்கிறார்.

இப்போதைய விஜயம் அவரது நிலைப்பாட்டை மாற்றியதாகத் தெரியவில்லை. அவரது அனைத்துலக விசாரணைக் கோரிக்கையிலும் மாற்றமில்லை. ஆகவே அனைத்துலகம் ஏற்கக் கூடிய விதத்தில் எமது நாட்டு அரசு தனது அணுகுமுறைகளை மாற்ற வேண்டிய நேரம் வந்துவிட்டது எனலாம்.

ஐ.நா. தீர்மானங்கள் மூலம் அனைத்துலகப் பொறிக்குள் அரசு சிக்கிக்கொண்டுவிட்டது. அதிலிருந்து விடுபடுவதற்கு ஐ.நா. தீர்மானங்களின் பரிந்துரைகளை விரைவாகச் செயற்படுத்துவது அவசியம். தவறுமானால் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் மேலும் பல தீர்மானங்களை இலங்கை எதிர்நோக்கவேண்டி வரலாம்.

# மேர்வின் தெரிவித்த கருத்தால் நவிப்பிள்ளைக்கு ஏற்பட்ட கோபம்

## மூன்று அமைச்சர்களின் அவதூறு பற்றியும் எடுத்துரைப்பு

*சண்டேரைம்ஸ் கட்டுரையிலிருந்து*

**கோகுலன்**

கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையை கௌரவிப்பதற்காக அமைச்சர் சிறிபால டி சில்வா நடத்திய சிறு விருந்தின் போது தெரிவு செய்யப்பட்ட அரசியல்வாதிகள், ராஜதந்திரிகள் மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டிருந்தார்கள்.

இந்த வைபவத்தின் போது அமைச்சரவையின் கௌரவத்தையும் , கண்ணியத்தையும் காப்பாற்றிக் கொள்ளும் விதத்தில் -அந்த பொறுப்பை ஏற்றுக் கொண்டிருந்த அமைச்சர் சில்வா , அம்மையாரைப் பார்த்து "அம்மணி , எங்கள் அமைச்சர் மேர்வின் சில்வா வெளியிட்டிருந்த கருத்தை பெரிதாக எடுத்துக்கொள்ளாதீர்கள்" என்று கேட்டுக் கொண்டார். பிள்ளை, உடனடியாக அதற்குப் பதிலளித்தார். "அதனைப் பெரிதாக எடுத்துக்கொள்ள வேண்டியவர் நானல்ல. நீங்கள் தான் பெரிதாக எடுத்துக் கொள்ள வேண்டும்" என்றார். அம்மையார் இதைக் கூறிய போது வழக்கமாக அவர் முகத்தில் காணப்படும் புன்சிரிப்பு மறைந்துவிட்டது. அவர் கோபத்துடன் இருப்பது தெரிந்தது.

அமைச்சர் சில்வாவுக்கு அந்தத் தாக்கத்தில் இருந்து மீள்வதற்குச் சற்று நேரம் பிடித்தது. அதை ஏனையவர்கள் செய்வதறியாது பார்த்துக் கொண்டிருந்தார்கள். அவர்களில் டியூ குணசேகர, டக்ளஸ் தேவானந்தா, ரவூப் ஹக்கீம், தூதுவர் ரவிநாத் ஆரிய சிங்க, வெளியுறவு அமைச்சின் மேல திக செயலாளர் சேனுக்கா செனவி ரட்ண, கொழும்பு பல்கலைக்கழக துணை வேந்தர் டாக்டர் குமார இம்புருகம மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ஜே.சிறிரங்கா ஆகியோர் இருந்தார்கள்.

மக்கள் தொடர்புகள் மற்றும் பொது விவகாரங்களுக்கான அமைச்சர் மேர்வின் சில்வா நவிப்பிள்ளையைக் குறித்து வெளியிட்டதாக பத்திரிகைகளில் பெரிதாக முன்பக்க செய்திகளாக வெளியிடப்பட்டிருந்த செய்தித் தொடர்பாகவே அமைச்சர் சிறிபால டி சில்வா குறிப்பிட்டிருந்தார்.

நவிப்பிள்ளையை திருமணம் முடித்துக் கொள்ள தாம் சம்மதிப்பதாக மேர்வின் சில்வா தெரிவித்தார் என்று அந்தச் செய்தியில் குறிப்பிட்டிருந்தது.

"நாடு முழுவதற்குமான ஒரு பயணம் மேற்கொள்வதற்கு அவர் முன்வர வேண்டும். இலங்கையின் வரலாற்றை அவருக்கு நான் படிப்பிப்பேன். மகா ராவணன் பற்றியும் அவருக்கு விவரிப்பேன்" என்று மேர்வின் கூறியிருந்தார்.

அந்த அம்மையாரை முன்பின் கூட பார்த்திராத ஓர் அமைச்சரவை உறுப்பினர் பகிரங்கமாக மணமுடிப்பதற்கான விருப்பத்தை வெளியிடுவதென்பது வழக்கத்துக்கு மாறான ஒரு செயல். அம்மையாரை சீற்றமுறச் செய்திருந்ததில் ஆச்சரியமில்லை. அதுவும் பொது மக்கள் தொடர்புகளுக்கு பொறுப்பானதொரு அமைச்சரிடமிருந்து இவ்வாறான கருத்து வெளியாகியிருந்தது.

இந்த வாரம் அமைச்சர்கள் மத்தியில் அதிகமாகப் பேசப்பட்ட விடயம் இதுவாகும். மேர்வின் சில்வா என்ன செய்தாலும், தங்களை உலகின் கண்களில் முட்டாள்களாக தென்படச் செய்தாலும் அவர் தப்பி கொண்டுவிடுகிறார் என்று சிலர் குறைபட்டுக் கொண்டார்கள்.

அதிகாரபூர்வமாக நாட்டுக்கு வரும் பெண் பிரமுகர்களை இலங்கை அமைச்சர்கள் மனைவிகள் ஆக்கிக்கொள்ள பார்த்திருக்கிறார்கள் என்ற வகையில் உலகின் பார்வையில் நன்றாகத் தோன்றமாட்டாது என்று அவர்கள் தெரிவித்துக் கொண்டார்கள். எனவே தான் தவறுகளை திருத்திக் கொள்ளும் செயலில் ஈடுபட்டிருப்பவரான நிமால் சிறிபால டி சில்வாவுக்கு நவிப்பிள்ளையிடமிருந்து கிடைத்த உடனடி ஒருவரிப் பதிலானது அவருக்கு மட்டும் விடுக்கப்பட்ட செய்தியன்று. முழு அமைச்சரவைக்குமான செய்தியாகும்.

அமைச்சர் மேர்வின் சில்வாவின் கோமாளித்தனமான திருமணம் முடிப்பதான கருத்தினால் ஏற்படக்கூடிய ஆழமான விளைவுகள் பற்றி அரச தரப்பு பாரதூரமாக கவனம் செலுத்த வேண்டும் என்பதே அம்மையாரின் நோக்கமாக இருந்திருக்கும்.

### அவதூறான குற்றச்சாட்டுக்கள்

அம்மையார் தம்து பயணத்தை முடித்துக் கொண்டு புறப்படும்போது விடுத்த அறிக்கையில் , தாம் நாட்டில் இருந்த சமயத்தில் மூன்று அமைச்சர்கள் தம்மை தமிழீழப் புலிகளின் அனுதாபி என்று மிகவும் தவறானதும் மிகவும் அவதூறானதுமான குற்றச்சாட்டுக்களை வெளியிட்டிருந்தார்கள் என்று தெரிவித்திருந்தார்.

பூரணத்துவமான ஒரு சட்டவாதியும், பஸ் நடத்துநர் ஒருவரின் புத்திரியுமான நவிப்பிள்ளை ஹாவார்ட் சட்டக்கல்லூரியிலிருந்து கலாநிதிப் பட்டம் பெற்ற முதல் ஆபிரிக்கரும் ஆவார். ரொப்பன் தீவுகளில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நெல்சன் மண்டேலா உட்பட தென்னாபிரிக்க அரசியல் கைதிகளை சட்ட நிபுணர்கள் சென்று பார்வையிடுவதற்கான உரிமையை வென்றெடுத்தவர் ஆவார். ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் பதவிக்கு வந்ததன் பின்னர் தென்னாபிரிக்க உயர் நீதிமன்றத்தின் முதலாவது வெள்ளையர் அல்லாத பெண் நீதிபதியாக நெல்சன் மண்டேலாவால் நியமிக்கப்பட்டிருந்தார். ருவாண்டாவுக்கான சர்வதேச குற்றவியல் விசாரணை மன்றத்தின் ஓர் உறுப்பினராக எட்டு ஆண்டுகள் பணிபுரிந்தார். அரைவாசிக்காலம் அதன் தலைவராக இருந்து ஐ.நாவில் பதவி ஏற்பதற்காக விலகினார்.

இலங்கை அரசு சார்பாக பேசியவர்களதும் சிவில் சமூகங்களின் சார்பில் பேசியவர்களதும் நிலைப்பாடுகளில் பெரிய அளவிலான இடைவெளி காணப்படுவதை தாம்கொழும்பில்நடத்திய கலந்துரையாடல்களின்போது அவதானித்ததாக நவிப்பிள்ளை தெரிவித்தார். எவ்வெந்த அம்சங்களில் முன்னேற்றம் காணப்படுகின்றது. எவ்வெந்த விடயங்களில் குறைபாடுகள் காணப்படுகின்றன என்பதைத் தம்மால் உறுதியாக இனம் கண்டுகொள்ள முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். இப்போதுள்ள மனோநிலையில் காரியங்கள் நகருமானால் அது சுலபமான விடயமாக அமையாது. அவர் கண்டிப்பாக இருக்கிறார். மனதில் கிடப்பதை வெளியிடுவார் என்று பெயர் குறிப்பிட விரும்பாத ராஜதந்திரி ஒருவர் தெரிவித்துள்ளார். 2014 ஆம் ஆண்டு நடைபெறவிருக்கும் மனித உரிமை சபைக்கான 8,500 சொற்கள் அடங்கிய அறிக்கையொன்றை அவர் தயாரித்து வருகிறார். புதிதாகக் கிளம்பியுள்ள சில விடயங்களையும் தமது அறிக்கையில் சேர்த்துக் கொள்வார் என்று கருதப்படுகின்றது. வெலிவேரிய சூட்டுச் சம்பவம் கிராண்ட்பாஸ் பள்ளிவாசல் தாக்குதல் இரண்டும் நிச்சயம் குறிப்பிடப்படலாம்.

### ஜனாதிபதியுடனான 20 நிமிட சந்திப்பு

ஜனாதிபதி ராஜபக்ஷவுடன் பத்து நிமிட சந்திப்பொன்றுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும் 20 நிமிடங்கள் சந்திப்பு இடம்பெற்றது.

பேச்சுக்கள் முடிந்து பிள்ளை வெளியில் செல்லும்போது ஜனாதிபதி அவரிடம் கூறினார்; "எனக்குத் தெரியும் நீங்கள் ஏற்கனவே உங்கள் அறிக்கையை எழுதி விட்டீர்கள் என்று" உடனடியாக அம்மையாரிடமிருந்து பதில் வந்தது. "இல்லை இல்லை கௌரவ ஜனாதிபதி அவர்களே அப்படிப்பட்டதல்ல நிலைமை" என்று. பின்னர் ஜனாதிபதி காரியாலயத்திலிருந்து வெளியான ஓர் அறிக்கை யில்; ஐ.நா. சபை அதன் செயற்பாடுகளில் நாடுகளைப் பொறுத்து பாகுபாடாக நடந்து கொள்வதாக இலங்கை மக்கள் ம்த்தியில் ஒரு கருத்து நிலை நிலவுகின்றது என திருமதி பிள்ளையிடம் ஜனாதிபதி ராஜபக்ஷ தெரிவித்தார். இந்தக் கருத்துக்களை தம்மிடம் தெரிவித்தவர்களை நவிப்பிள்ளை தாக்கல் செய்யப்போகும் அறிக்கையை அவ்வாறு முன்கூட்டியே தீர்மானிக்க வேண்டாம் என்று கேட்டுக் கொண்டதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது. என்றாலும் சிங்களத்தில் வெளியிடப்பட்டிருந்த அறிக்கையில் வேறு விதமாக தெரிவிக்கப்பட்டிருந்தது. ஐ.நா.சபையானது எதையும் நல்ல முறையில் பார்க்காத நிறுவனம் என்று இலங்கை மக்கள் கருதுகிறார்கள். அம்மையாரின் அறிக்கையானது முன்கூட்டிய தீர்மானிக்கப்பட்ட விடயங்களாகவே இருக்கும் என்று அவர்கள் நினைக்கிறார்கள் என்று தெரிவித்துள்ளதுடன் அமைச்சரவையில் பல தரப்பட்டவர்கள் இருந்த போதிலும் ஒரு பொதுக் குறிக்கோளை நோக்கி அவர்களை வழிநடத்திச் செல்வதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

பிள்ளையின் வருகையின்போது பல்வேறு தவறுகள் இழைக்கப்பட்டுவிட்டதாக வெளியுறவு அமைச்சரை ஜனாதிபதி கடிந்து கொண்டுள்ளார். திருமதி பிள்ளையின் வருகையின்போது அவரைச் சந்திப்பதற்கான பிரமுகர்கள் வரிசையில் நீதியமைச்சர் ரவூப் ஹக்கீமுக்கு முதல் சந்திப்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. பிள்ளையுடன் நடத்திய பேச்சின்போது ஹக்கீம் அதனைச் சரியாகப் பயன்படுத்தவில்லையென்றும் குறைப்பட்டிருக்கிறார். பொலிஸ் திணைக்களம் நீதியமைச்சரின் கீழ் இருக்க வேண்டும் என்று அம்மையார் குறிப்பிட்ட போது அமைச்சர் அதற்குச் சரியான வகையில் பதிலடி கொடுக்கத் தவறிவிட்டார் என்றும் ஜனாதிபதிக்கு கவலை என்று கூறப்படுகின்றது.

அமைச்சர் பீரிஸுடன் நடந்த பேச்சுக்களின் போது தாம் சில பத்திரிகைகளால் அவதூறு செய்யப்பட்டிருப்பதாக தெரிவித்துள்ளார். அது அந்தப் பத்திரிகைகள் அவர் வருகையை பார்த்த விதத்தை பொறுத்தது என்று பீரிஸ் கூறியதாகத் தெரிகின்றது.

கடந்த வெள்ளியன்று திருமதி பிள்ளை மகரகமவில் தேசிய இளைஞர் சபையின் இளைஞர் நாடாளுமன்றக் கூட்டத்தில் பேசியபோது உதிர்த்த சில கருத்துக்கள். இங்கே ஒன்று கூடியுள்ள இளைஞர்களைக் காணும்போதும் போரினால் பாதிக்கப்பட்ட புலம்பெயர்ந்த இளைஞர்களைக் காணும் போதும் நான் பலத்த ஆறுதல் அடைகின்றேன். மதங்கள் தவறாக பயன்படுத்தப்பட்டு ஒரு சமூகத்தின் மீது இன்னொரு சமூகம் தூண்டப்படும்போதும் கவலையடைகின்றேன். பல்கலைக்கழகங்களைப் பாதுகாக்கவும் பெண்களுக்கெதிரான பாரபட்சங்களை எதிர்த்துப் போராடவும் இளைஞர்கள் சமூகத் தடைகளை மீறி ஒன்று கூடுவதைக் காணும்போதும் பல்வேறு இனங்களைச் சேர்ந்த சமயங்களைச் சேர்ந்தவர்கள் வன்செயல்களை எதிர்க்க முன் வருவதைக் கண்டு மகிழ்ச்சியடைகின்றேன். இலங்கையில் போர் ஓய்ந்த நிலையில் இங்கு வரக் கிடைத்தமைக்கு மகிழ்ச்சியடைகின்றேன். இலங்கையின் புதிய சந்ததியானது தனது வேறுபாடுகளை விடுத்து பழைய அரசியல் குரோதங்களை விடுத்து புதிய சமுதாயம் ஒன்றைக் கட்டியெழுப்புவதில் இறங்க வேண்டிய காலம் இதுவாகும் என்று குறிப்பிட்டார்.

# மக்களின் மனங்களில் வாழும் 'தர்மர்'


**மானிப்பாய் தொகுதி முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அமரர் வி.தர்மலிங்கத்தின் 28 ஆவது சிராத்த தினம் இன்றாகும். அதனையொட்டி இந்த ஆக்கம் பிரசுரமாகிறது.**

ஆ.சி.கணேசவேல்

தமிழ் பேசும் மக்கள் மத்தியில் தமது தன்னலமற்ற சேவையாலும் இலட்சியப்பற்றாலும் நீங்காத இடத்தைப் பெற்ற முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான அமரர் விஸ்வநாதர் தர்மலிங்கத்தின் இருபத்தெட்டாவது சிராத்த தினம் இன்றாகும்.

தமிழையும் சைவத்தையும் இறுக்கமாகக் கடைப்பிடித்த வள மான குடும்பத்தில் 1918 ஆம் ஆண்டு மாசி மாதம் 5 ஆம் திகதி பிறந்தவர்தான் தர்மலிங்கம். குடும்பத்தின் ஏகவாரிசான இவரை உறவினர், நண்பர்கள் மற்றும் மக்கள் "இலங்கையர்" என்றும் "தர்மர்" என்றும் அழைப்பதுண்டு. இவரது தந்தையார் விஸ்வ நாதர் அமெரிக்கா சென்று முதுமாணிப் பட்டம் பெற்ற கல்விமான் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவரது சிறுவயதிலேயே இவரது பெற்றோர் இறந்தமையால் பெரிய தந்தையான டாக்டர் சி.சுப்பிரமணியம் தாய் போலவும் தந்தை



போன்றும் இருந்து இவரை வளர்த்தெடுத்தார். அந்தக் காலத்தில் தலைசிறந்த கல்லூரியாக விளங்கிய சென்.பற்றிக்ஸ் கல்லூரியில் கல்வி புகட்டி வளர்த்தெடுத்தார்.

"தர்மர்" சிறுவயது தொடக்கம் சமூகசேவையில் தன்னை அர்ப்பணித்து பின்பு உடுவில் கிராம சபையின் உறுப்பினராகவும் அதன் தலைவராகவும் சிறப்பாகக் கடமையாற்றினார். 1952 ஆம் ஆண்டு இலங்கைத் தமிழரசுக் கட்சி முதன் முதலாக தேர்தல் களத்தில் இறங்கிய போது தந்தை செல்வா காங்கேசன்துறைத் தொகுதியில் போட்டியிட்டார். அவரை ஆதரித்து தனது தலைமையின் கீழ் மாபெரும் கூட்டமொன்றை நடத்தி இவர் தமிழரசுக் கட்சி மீது உள்ள தமது பற்றை வெளிப்படுத்தினார்.

1960 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 'உடுவில்' என்ற பெயரில் புதிய நாடாளுமன்றத் தொகுதி உருவாக்கப்பட்டது. அங்கு இடம்பெற்ற முதலாவது நாடாளுமன்றத் தேர்தலில் தர்மர் பல்லாயிரக் கணக்கான மேலதிக வாக்குகளால் வெற்றிவாகை சூடினார். அன்று தொடக்கம் நாடாளுமன்ற உறுப்பினராகத் தொடர்ந்து இருபத்திமூன்று ஆண்டுகள் மக்களுக்குச் சேவையாற்றினார். பின்னர் 1983 ஆம் ஆண்டு அரசியல் அமைப்பு திருத்தச் சட்ட மூலத்துக்கு அமைவாக சத்தியப்பிரமாணம் செய்ய மறுத்து தனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியைத் துறந்தார்.

> **1960 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 'உடுவில்' என்ற பெயரில் புதிய நாடாளுமன்றத் தொகுதி உருவாக்கப்பட்டது. அங்கு இடம்பெற்ற முதலாவது நாடாளுமன்றத் தேர்தலில் தர்மர் பல்லாயிரக்கணக்கான மேலதிக வாக்குகளால் வெற்றிவாகை சூடினார். அன்று தொடக்கம் நாடாளுமன்ற உறுப்பினராகத் தொடர்ந்து இருபத்திமூன்று ஆண்டுகள் மக்களுக்குச் சேவையாற்றினார்.**

இன்றைய காலகட்டத்தில் அரைப்பரப்பு காணிக்காக கோடேறி வழக்காடுகிறார்கள். ஆனால் தர்மரின் மகனாகிய சித்தார்த்தன் தமிழ் மாணவர்களின் நன்மை கருதி கோப்பாய் கிராமத்தில் உள்ள தமது குடும்பச் சொத்தாகிய 200 பரப்பு நிலத்தை கல்வி யியற் கல்லூரி அமைப்பதற்கென இலவசமாக வழங்கினார்.

இந்தக் கல்லூரி முகப்பில் தர்மரின் உருவச் சிலையும் அவர் நினைவாக மண்டபம் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளமை வரவேற்கத்தக்கதாகும். இத்தகைய பெருமைமிக்க இந்தப் பெரியார் 1985 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 2 ஆம் திகதி படுகொலை செய்யப்பட்டதை எவராலுமே நியாயப்படுத்த முடியாது.

அரசியலிலும், சரி தனிப்பட்ட வாழ்க்கையிலும் சரி எதிரிகள் எவருமே இல்லாத தர்மலிங்கம் அவர்களின் உடலை அழித்தாலும் மக்களின் இதயங்களிலிருந்து அவரை என்றுமே அழிக்க முடியாது.

# மூடிய கண்கள் யாவும் தூங்குவதுமில்லை திறந்த கண்கள் யாவும் பார்ப்பதுமில்லை

## கட்புலன் இழந்த நிலையிலும் இம்முறை ஜி.சீ.ஈ. பரீட்சை எழுதிய சந்திரராசா விக்னேஸ்வரனுடன் நேர்காணல்

தென்னவன்

மாற்றுவலுவுள்ளோரை அரசு மதிப்பளித்து உதவிகள் வழங்குகின்ற போதிலும் சமூகம் இன்னமும் எம் மீது நம்பிக்கை வைக்க மறுத்து புறக்கணிக்கும் நிலை தொடர்ந்தும் உள்ளது. சமூக மத்தியில் எமக்கு சம உரிமை வேலைவாய்ப்பு போன்றவை வழங்குவதில் தயக்கம் காட்டுகிறது.

"மூடிய கண்கள் யாவும் தூங்குவதுமில்லை திறந்த கண்கள் யாவும் பார்ப்பதுமில்லை ஏற்றிய கொடிகள் யாவும் பறப்பதுமிலலை ஒதுக்கிய உள்ளங்களை நாங்கள் ஒதுக்கவுமில்லை" இந்தக் கூற்றும் கவிதையும் கண்களை இழந்த நிலையில் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை எழுதிய மாணவனின் ஆதங்கமாகும்.

கண்களை இழந்த மாணவன் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை எழுதுவதாக அறிந்து பரீட்சை முடிவு தினமான சனிக்கிழமை அவரை நேரில் சந்தித்து பேட்டி எடுத்த போது இந்த ஆதங்கத்தை வெளியிட்டார்.

யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த பெருந்தகைகளின் ஊக்குவிப்பினால் கண் பார்வை இல்லாத நிலையில் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்ற முடிந்தது. நிச்சயம் இந்த பரீட்சையில் சித்தி பெறுவேன் என நம்பிக்கையுள்ள போதிலும் எனது உயர் கல்விக்கும் உதவிகளை எதிர்நோக்குகின்றேன்.

*"கல்லும் கட்டையும்*
*சிலையும் சிற்பமும் ஆகிறதே*
*உளிகளுக்கு வலிகளைக்*
*கொடுக்கும்போது*
*உருவங்கள் உயிர்பெறுகின்றன..!*
*மனிதா இதோ இவை அவை*
*காட்டிலும் மேட்டிலும் கல்லும்*
*கட்டையுமாக கிடந்ததே"*

என கவி வரியில் கூறினார்.

பேட்டியின் விவரம் வருமாறு:

வவுனியா மாவட்டத்தின் நெடுங்கேணி பெண்கள் விவசாயத் திட்டத்தில் ஏழ்மையான குடும்பத்தில் பிறந்த எனக்கு மூன்று அக்காவும் போலியோ நோயினால் பாதிக்கப்பட்ட அண்ணாவும் தம்பியுமாக மகிழ்ச்சியாக வாழ்ந்தோம்.

வறிய குடும்பத்தில் மகிழ்ச்சியிருப்பினும் வறுமையின் கொடுமையைத் தாங்க முடியாத நிலையில் பாடசாலைக் கல்வியை ஜி.சீ.ஈ. சாதாரண தரத்துடன் நிறுத்தி வீட்டுப் பொறுப்பினை அப்பாவுடன் இணைந்து ஏற்றிருந்தேன்.

2008 ஆம் ஆண்டு வன்னிப் பகுதியில் இடம்பெற்ற போரின்போது ஏற்பட்ட இடப் பெயர்வில் வெடித்த ஷெல்லினால் எனது பார்வையினையும் உழைப்பாளியான அப்பாவையும் இழந்தேன். கண் பார்வை இழந்த எனக்கு அம்மா கூறும் ஆறுதல் வார்த்தை நீ உயர்ந்த நிலைக்கு வந்தால் உலகம் உன்னை மதிக்கும் அந்த நிலையை நீ அடைய கைவிட்ட கல்வியை மீண்டும் தொடர வேண்டும்.

இதனை வேத வாக்காகக் கொண்டு நலன்புரி நிலையத்துக்கு வருகை தரும் கிறிஸ்தவ மதகுருவின் உதவியுடன் நவீல்ட் பாடசாலையில் ஜி.சீ.ஈ. சாதாரண தர வகுப்பில் எனது இருபதாவது வயதில் இணைந்து கொண்டேன்.

அந்தப் பரீட்சையில் சித்தி பெற்று நவீல்ட் பாடசாலை மாணவர்கள் ஆறு பேரில் அதிகளவு பெறுபேறுகளைப் பெற்று ஜி.சீ.ஈ. உயர்தர வகுப்பினை கைதடி முத்துக்குமாரசாமி மகா வித்தியாலயத்தில் கற்றேன். நவீல்ட் பாடசாலையில் தங்கியுள்ள எனக்கு தென்மராட்சி கல்வி வலயத்தில் பிரதிக் கல்விப் பணிப்பாளராக கடமையாற்றிய ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தியும் யாழ். உயர்கல்விக் கல்லூரி நிறுவுநர் திருமதி அருள்நங்கையும் எனது உணவுத் தேவைக்கான நிதியினை வழங்கி வருகின்றனர். அத்துடன் எனது கல்வித் தேவைக்கான ஒலிப் பதிவு சாதனங்கள், ஐ.சி.றெக்கோடர் மற்றும் கற்றல் உபகரணங்களை பலர் வழங்கி எனக்கு பெரும் ஊக்குவிப்பினை தந்தனர்.

கண்பார்வை இழந்த எனக்கு பரீட்சையில் தோற்ற தனியான அறையில் மூன்று பேர் கடமையாற்றினார்கள். ஒருவர் வினாவைச் சொல்ல அதற்கான விடையினை நான் தெரிவிக்க ஒருவர் விடை எழுதவும் ஒருவர் அதனை ஒலிப்பதிவும் செய்ய வேண்டும். இதில் சிரமங்கள் இருந்த போதிலும் என்னுடன் ஒத்துழைத்த பரீட்சை நிலைய மேற்பார்வையாளர்கள் மற்றும் பணியாளர்களுக்கு நன்றியுடையவனாக உள்ளேன். அத்துடன் கைதடி நவீல்ட் பாடசாலையில் தங்கியுள்ள என்னை சாவகச்சேரியில் உள்ள பரீட்சை நிலையத்துக்கு பரீட்சைக்கு வந்து செல்வதற்கு கைதடி-நுணாவில் அ.த.க.பாடசாலை அதிபர் ஆ.தங்கவேலு தனது சொந்தச் செலவில் ஒட்டோவினை ஒழுங்கு செய்திருந்தார்.

மேலும் நான் தேர்ந்தெடுத்துப் படித்த பாடங்களுக்கு பாடசாலையில் ஆசிரியர்கள் இல்லாத நிலையில் சில ஆசிரியர்களை ஒழுங்கு செய்த நவீல்ட் பாடசாலை அதிபர் மகேந்திரன்



அவர்களுக்கும் சிரமம் பாராது எனக்கு பிரத்தியேக வகுப்புகளை நடத்தி ஊக்குவித்த ஆசிரியர்களுக்கும் நான் என்றும் நன்றிக்கடன் பட்டவனாக இருப்பேன். ஏனெனில் நான் தேர்ந் தெடுத்த அரசியல் பாடத்துக்கு பாட சாலையில் ஆசிரியர் இல்லாததாலும் இந்து நாகரிகம் கற்பித்த ஆசிரியை பிரசவ விடுமுறையில் நின்றதாலும் பாடங்களைக் கற்பதற்குப் பெரும் சிரமங்களை எதிர்நோக்கினேன். பரீட்சை எழுதிய பின்னர் சிறந்த பெறுபேறுகளை பெறுவேன் என்ற நம்பிக்கை என்னிடம் ஏற்பட்டுள்ளது. பரீட்சையில் சித்தி பெற்றதும் சட்டத் துறையை விரும்பிக் கற்கவுள்ளேன். அதற்கும் உதவிகள் தேவை. கணினி அறிவு தொடர்பான பல விடயங்களைக் கற்றுள்ளேன். கண் தெரியாத நிலையிலும் இணைய தளங்களில் வெளியாகும் செய்திகள் கவிதைகள் போன்றவற்றை பதிவிறக் கம் செய்து என்னிடம் உள்ள கருவிகள் மூலம் அறிந்து கொள்கிறேன். எனக்கு சிறுவயது முதல் கவிதைகள் எழுதுவதில் நிறைய ஆர்வம் உண்டு. இன்று கூட எனது பேட்டிக்கு உதவுமென சில கவிதை கள் சொல்லியுள்ளேன். எனக்கு யாரும் உதவுவார்களாயின் என்னால் ஆக்கப்படும் கவிதைகளை நூல் வடிவில் வெளியிடச் செய்யலாம்.

*"விழிகளை இழந்த பின்னும்*
*விடியலை நாடும்*
*விதைகள் சில வினைதிறன் இன்றி*
*சிதைந்து போகிறது.*
*உதவியை நாடும் எம் உள்ளங்களுக்கு*
*உணர்வுகள் கொண்ட உள்ளங்களே*
*உதவிக்கரம் கொடுத்து உயர்த்துங்கள்."*

அம்மாவும் எனது சகோதரங்களும் சொந்த இடத்துக்குத் திரும்பிய போதிலும் மாற்றுவலுவுள்ள அண்ணாவும் கல்வி கற்கின்ற தம்பியும் காணாமற் போன கணவனை தேடித் திரியும் ஒரு அக்காவும் திருமணத்தை எதிர் பார்க்கும் அக்காவும் அம்மாவின் உழைப்பில் தங்கியுள்ளனர்.

எனது குடும்பத்தின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த எனது கல்வித் தரத்தை உயர்த்த ஒன்றிணைந்த உதவியைக் கோரி நிற்கின்றேன்.

அம்மாவின் கனவினை அவர் உயிருடன் இருக்கும் போதே நிறைவேற்ற வேண்டுமென்ற தனது நோக்கத்தை அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென வேண்டுகோள் விடுத்தார் சந்திரராசா விக்னேஸ்வரன் என்னும்பரீட்சார்த்தி.

# எதையும் சாதிக்கத் துணிந்தவர்கள்

■ பிருந்தா தாஸ்



பெண்களிடம் சகல திறமைகளும் இருக்கின்றன. இதை எமது பண்பாடு, கலாசாரம் என்ற போர்வைக்குள் அடக்கி, தம்மைத் தாமே வளர்க்கத் தவறி விட்டார்கள் என்பதுதான் உண்மை. பெண்களுக்கான சுதந்திரம் எதிர்க்கப்பட்டதும் அதை மறுத்துப் போராட அன்றைய பெண்கள் முன்வரவில்லை. ஆனால், அவற்றையெல்லாம் தாண்டி இன்று பெண் முன்னேறி யிருக்கின்றாள் என்றால் அதனை மறுப்பதற்கில்லை.

பெண்களைப் பற்றி ஆராய்ந்தவர்கள் இப்படிக் கூறுகின்றார்கள். ஆண்களை விட பெண்கள் நம்பிக்கைக்குரியவர்கள், கடின உழைப்பாளிகள் என்று.

எல்லா மனிதர்களும் தம் வாழ்வில் மகிழ்வுடன், மன நிறைவுடன் இருக்கவே விரும்புகிறார்கள். முன்னைய காலத்தில் ஓர் ஆணைப் பார்த்து, என்ன வேலை செய்கிறீர்கள்? என்று கேட்பார்கள். மாறாக, ஒரு பெண்ணை யாரும் என்ன வேலை செய்கிறீர்கள்? எனக் கேட்பதில்லை. காரணம் பெண்ணின் வாழ்க்கை முன்னரெல்லாம் குடும்பம், குழந்தைகள், கணவன், வீடு என்ற குறுகிய வட்டத்துக்குள்ளேயே அமைந்திருந்தது. அவையே பெரிய வேலைகள்தான் என்று எண்ணினார்கள். அதுவே அவர்களுக்கு (பெண்களின்) நிறைவைத் தருகின்றன என்ற மனப்பான்மையாகவும் இருந்தது. ஆனால் இன்று அவ்வாறில்லை. பெண்ணையும் பார்த்து என்ன செய்கிறீர்கள்? எனக் கேட்கின்றனர். அந்த அளவுக்கு இன்றைய பெண் சகல துறைகளிலும் ஈடுபடுகிறாள், உழைக்கின்றாள். சில பெண்கள், ஆண்களை விடக் கூடுதலாகவும் வருமானம் பெறுகின்றனர். பெண் என்ற வகையில் மனதில் ஏற்படும் பெருமை, நம்மால் எதையும் சாதிக்க முடியும் என்ற நம்பிக்கை, நமக்குள் ஏற்படும் மன நிறைவு இவைதான் வாழ்வை அர்த்தமுள்ளதாக்குகின்றன. மேலும் சாதனைகள் செய்யத் தூண்டுகின்றன. இப்படிப்பட்ட எண்ணங்கள் பெண்ணின் மனதில் அதிகம் எழுகின்றன என்றாலும், அந்த வாய்ப்பு, குறிப்பாக கிராமங்களில் வாழும் பெண்களுக்கு அதிகம் கிடைப்பதில்லை என்பது கவலைக்குரிய விடயம். அவர்களும் சாதிக்கின்றனர். நாளுக்கு நாள் ஏதோ ஒரு கூலித் தொழிலைத் தேடி, தன் குடும்பத்தைக் காக்கும் பெண்களும் உள்ளனர். என்னைப் பொறுத்த வரையில் அதுவும் ஒரு சாதனைதான். உதாரணத்துக்கு ஒரு பெண் கூலித் தொழிலாளியாக இருந்து தன் பிள்ளைகளைப் படிக்க வைத்து சமுதாயத்தில் ஒரு நல்ல பிரஜையாக்குகின்றாள். அவர்களுக்கு ஓர் அந்தஸ்தைக் கொடுக்கின்றாள். எனவே அவளும் சாதனைப் பெண்ணே! இருந்தாலும் கூட, ஆணுக்குக் கொடுக்கக்கூடிய வாய்ப்புகளை நாம் ஏன் ஒரு பெண்ணுக்குக் கொடுப்பதில்லை?

ஒரு பெண் எதற்குப் படிக்க வேண்டும்? கல்யாணம் செய்து கொண்டு கணவன் வீட்டுக்குப் போகிறவள் தானே என்று அவளைத் திருமணத்துக்காகவே வளர்க்கின்றனர். ஒரு பெண் கல்வி கற்றால் குடும்பமே கற்றதற்குச் சமம் என்ற சிந்தனையை மறந்து விடுகின்றனர். பெண்களின் இன்றைய முன்னேற்றத்துக்கு அவள் பெற்ற கல்வியும் ஒரு காரணமாயிருக்கிறது. இன்று படிப்பிலும் சாதனை படைக்கின்றாள். படிக்காதமக்கள் கூட இன்று தம் பெண் பிள்ளைகளை நகர்ப்புறத்தில் படிக்க வைக்கின்றனர். காரணம் எல்லா முன்னேற்றங்களும் கற்றலில் தான் உள்ளன. படிப்பு இருந்தால் தான் ஊர் உலகம் தெரியும். படிப்பு இருந்தால்தான் நல்ல வேலைக்குப் போக முடியும். நல்ல வேலைக்குப் போனால்தான் நிறையச் சம்பாதித்து தன்னையும் தன் குடும்பத்தையும் காப்பாற்ற முடியும். கல்வியின் மூலம் தான் எம் வாழ்வை எவ்வாறாவது மாற்றிக் கொள்ளலாம் என்ற எண்ணம் பெண்ணுக்கு உருவாகிவிட்டது.

பெண்களின் கல்வி என்பது பெண்கள் கல்வி பெறுவதற்கான உரிமை, அதன் நிலைமை, தடைகள், எதிர்காலம் போன்ற பல விடயங்களைக் குறிக்கும். வரலாற்றின் பெரும் பகுதியில், அநேக சமூகங்களில் பெண்கள் ஆண்களுக்குச் சமமாக கல்வி பெறும் வாய்ப்பு கிடைக்கவில்லை. 19 ஆம், 20 ஆம் நூற்றாண்டுகளில் வளர்ச்சி பெற்ற பெண்ணிய இயக்கங்கள், அனைவருக்கும் கல்வி என்ற கோட்பாடு போன்றவை, பெண்களுக்கான சமகல்வி வாய்ப்புகளை ஓரளவு ஏற்படுத்தித் தந்தன. இன்று சில மேலை நாடுகளில் இந்த வாய்ப்புகளைப் பயன்படுத்தி பெண்கள் ஆண்களை விட கூடுதலான அதி உயர் கல்வியைப் பெறுகிறார்கள். ஆனால் இன்னமும் பல நாடுகளில் பெண்களின் கல்வி ஆண்களை விடப் பின்தங்கியதாகவே உள்ளது. இருந்தும் பாமரப் பெண்கள் தமது உழைப்பால் முக்கியத்துவம் பெறுகின்றார்கள் என்றால் அது மிகையில்லை. உதாரணமாக பெருந்தோட்டப் பெண்களைச் சொல்லலாம்.

இன்று பல்வேறு துறைகளில் பெண்கள் உயர் நிலையை அடைய வேண்டியிருக்கிறது. அது கல்வித் துறையில் மட்டுமன்றி, ஊடகம், மருத்துவம் மற்றும் சட்டத்துறைகளில் உயர் நிலையை அடைந்த பெண்களின்பால் எமது சமூகம் அதிக மதிப்பு வழங்கவேண்டி இருக்கின்றது.

ஒரு பெண் தன் காலில் நிற்கும்போது - தன்னால் சம்பாதித்து தன்னைக் காப்பாற்றிக்கொள்ள முடியும் என்ற நம்பிக்கை வரும்போது தான் அவர்களுக்கு சுதந்திமும் சமூகத்தில் மதிப்பும் கௌரவமும் கிடைக்கின்றன. சம்பாதிக்கின்ற மருமகளை அவளது மாமியாரால் அதிகம் கட்டுப்படுத்த முடிவதில்லை. அதிகாரம் செய்வதில்லை. மாறாக மதிப்பும் மரியாதையும் கிடைக்கின்றது.

# பெண்ணியம்

## எனது பார்வையில்

■ பி.விபிஷனா



ஒரு பெண் என்பவள் யார்?அன்பும்,அரவணைப்பும்,சகிப்புத் தன்மையும் கொண்டவள் தானே.அவள் பெண்ணியம் என்ற பெயரில் தனது சுயத்தை இழக்கலாமா?

பெண்ணியம் என்பது சுயத்தை இழக்காமல், அதாவது பெண்களுக்குரிய தனித்தன்மைகளை இழக்காமல் எல்லா உரிமைகளும் பெற்று ஆண்களோடு சரி நிகர் சமானமாக வாழ்வதே ஆகும்.

இதில் அவனை விட உயர்ந்து என்று நான் குறிப்பிடவில்லை.யாரும் யாரையும் விட உயர்த்தி இல்லை.எல்லோரும் சமம். பெண்ணியம் என்ற பெயரில் திருமணம் செய்யாமல் வாழும் பெண்களும்,குழந்தைகளைப் பெற்றுக் கொள்ளாத பெண்களும் இந்த சமூகத்திற்கு அநீதி இழைக்கின்றனர்.

ஒரு ஆணுடன் இணைந்து பெண் வாழ்வது தான் இயற்கையின் நியதி.தாய்மை ஒரு பெண்ணுக்கே உரிய ஒரு உன்னதமான அனுபவம்,அவைகளை விட்டு விலகி ஒரு பெண் தனித்து வாழ்வது இயற்கைக்கு மாறனதொன்றாகும்.

பெண்ணியம் பேசும் சகோதரிகளே.இவ்வுலகில் வெறும் பெண்கள் மட்டுமே இருக்க முடியுமா?ஆணும் பெண்ணும் இணைந்திருப்பது தானே உலகம்.சக்தியின்றி சிவன் இல்லை.அர்த்த நாரீஸ்வரரில் இல்லாத சித்தாந்தமா?

சிமோன் தி பூவா' என்ற பிரெஞ்சு பெண் சிந்தனையாளர், தி செகண்ட் செக்ஸ்' என்ற நூலில் முதல் தடவையாகப் பெண்ணியம் பற்றிக் கூறியதென்ன தெரியுமா?ஒரு பெண் பிறப்பதில்லை; உருவாக்கப் படுகிறாளென்று. அவளை இந்தச் சமூகம் தான் மாற்றுகின்றது. அதனால் முதலில் சமூகத்தில் தான் மாற்றத்தைக் கொண்டு வர வேண்டும்.அதனைப் பெண் ஒரு ஆணுடன் இணைந்து தான் கொண்டு வர முடியும்.

என்னைப் பொறுத்த வரை ஆண்களோடு உடல் வலுவில் பெண்கள் போட்டியிட முடியாது. ஏனெனில் அவளது உடல் மென்மையானது.மாறி முயற்சித்தால் அவளது பெண்மையே மாறி கொஞ்சம் கரடு முரடாகி விடுகின்றது.அது போலவே பெண்ணுக்கென்று இருக்கும் சகிப்புத் தன்மை, பொறுமை, அன்பு,அனுசரிப்பு போன்ற நற்குணங்களில் ஆண்களும் போட்டியிடவே முடியாது.அதுதான் இயற்கையின் கோட்பாடு. எனவே மாற்றம் வேண்டும்,ஆனால் அது எது வரை என்ற ஒரு விதி முறை வேண்டும்.மேலும் தற்காலத்தில் பெண்ணியம் பற்றிப் பேசுவோரெல்லாம் மதத்தையும் அதனுடன் ஒன்றுபடுத்தி ஏதோ அவரவர் மதக் கோட்பாடுகளால் தான் காலங்காலமாய் பெண்கள் அடிமைப்படுத்தப்பட்டுள்ளதாகக் கூட சொல்லுவர்.

அவர்களுக்கெல்லாம் ஒரு வேண்டுகோள். ஒரு பெண் உடலை மூடி புர்கா அணிவதனாலோ, புடைவையோ,மடிசாரோ உடுத்துவதனால் அவளை சுதந்திரமற்றவளாகக் கருதுவதைத் தயவு செய்து நிறுத்துங்கள்.பெண்ணியம் என்பது உடையில் அல்ல, கருத்தில்தான்.

ஒரு பெண் ஆணுக்கு நிகராக உடுத்தி விட்டால் அவள் சிறந்த பெண்ணியவாதியாக முடியாது. எப்பொழுது ஒரு பெண் சுயமாக முடிவெடுக்கிறாளோ,தான் முழுமையாக ஒரு பெண் என்பதனை உணர்ந்து செயல்படுகின்றாளோ அப்போது தான்பெண்ணியம் என்பதன்+ உண்மையான அர்த்தம் வெளிப்படுத்தப்படுகிறது.

## வங்கிக் கிளை திறந்து வைப்பு

கிளிநொச்சி, செப்.2
கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேசத்திலுள்ள முரசுமோட்டைப் பகுதியில் சிக்கன கடனுதவிக் கூட்டுறவு சங்கத்தின் வங்கிக் கிளை ஒன்று திறந்து வைக்கப்படவுள்ளது.
கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட முரசுமோட்டையில் இயங்கி வரும் அம்பாள் சிக்கன கடனுதவிக் கூட்டுறவுச் சங்கத்திற்குரிய வங்கியின் திறப்பு விழா நிகழ்வு இன்று முற்பகல் 11 மணிக்கு நடைபெறவுள்ளதாக அம்பாள் சிக்கன கடனுதவிக் கூட்டுறவுச் சங்கம் தெரிவித்துள்ளது. (க-6)

## மன்னார் வீடொன்றில் ஆயுதங்கள் மீட்பு

யாழ்ப்பாணம், செப்.2
மன்னார் பெரியபண்டிவிரிச்சான் பகுதியிலுள்ள வீடு ஒன்றிலிருந்து ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.
60 மில்லிமீற்றர் மோட்டார் குண்டுகள், 21 ஆர்.பி.ஜி. குண்டு ஒன்று, கைக்குண்டுகள் 3 உள்ளிட்ட ஆயுதங்களே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளன.
பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின்படி சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் கடந்த ஞாயிற்றுக் கிழமை இவற்றை மீட்டுள்ளனர். இவை விடுதலைப்புலிகளின் ஆயுதங்களாக இருக்கலாம் என்று சந்தேகிப்பதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (த-4)

### முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவில்

# மருதமடுக்குளத்தின் புனரமைப்புப் பணிகள் பூர்த்தியாகாததால் காலபோகம் பாதிப்பு

முல்லைத்தீவு, செப்.2
முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட மருதமடுக்குளத்தின் புனரமைப்புப் பணிகள் பூர்த்தி செய்யப்படாமையால் காலபோக செய்கையை மேற்கொள்ள முடியாது போகும் அபாய நிலை ஏற்படுமென இந்தப் பகுதி விவசாயிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.
முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவிலுள்ள முத்துஐயன்கட்டு நீர்ப்பாசனப் பொறியியலாளரின் கீழுள்ள மருதமடுக்குளம் கடந்த போர் காரணமாகச் சேதமடைந்தது. இந்த நிலையில் கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதம் முரண்பாடுகளால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை அபிவிருத்தி செய்யும் திட்டத்தின் கீழ் சுமார் 89 மில்லியன் ரூபா செலவில் புனரமைப்புக்கெனத் தெரிவு செய்யப்பட்டு புனரமைப்பு பணிகளும் ஆரம்பிக்கப்பட்டன.



குறித்த புனரமைப்பு பணிகள், இந்த மாதம் 15 ஆம் திகதியுடன் நிறைவு பெற வேண்டிய போதிலும் தற்போது இருப்பது வீதமான புனரமைப்பு பணிகள் கூட நிறைவு பெறவில்லையெனத் தெரிய வருகின்றது. இதனால் இந்தக் குளத்தின் கீழ் உள்ள வயல் நிலங்களில் இவ்வாண்டு காலபோக செய்கையை மேற்கொள்ள முடியாத நிலை உருவாகியுள்ளது.
இதனால் இங்கு மீள்குடியமர்ந்த விவசாயிகள் பாதிக்கப்படக்கூடிய நிலையும் உருவாகியுள்ளது.
இது தொடர்பாக இந்தக் குளத்தின் கீழ் உள்ள கமக்கார அமைப்புக்களுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது; குறித்த குளத்தை நம்பி இங்கு ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் உள்ளன. உரிய காலத்தில் இந்தக் குளத்தின் புனரமைப்புப் பணிகள் பூர்த்தியடையாத பட்சத்தில் இந்தக் குடும்பங்கள் யாவும் பாதிக்கப்படக்கூடிய நிலை உருவாகும் எனத் தெரிவிக்கப்பட்டது.
இந்தக் குளத்தின் புனரமைப்பு பணிகள் தாமதமடைந்துள்ளமை தொடர்பாகவும் விவசாயிகளின் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாகவும் முத்துஐயன்கட்டு நீர்ப்பாசனப் பொறியியலாளரிடம் தொடர்பு கொண்ட போது; குறித்த குளத்தின் கீழ் 340 ஏக்கர் நிலப்பரப்பு உள்ளது. இந்தக் குளம் 1955 ஆம் ஆண்டு காலப் பகுதியில் கட்டப்பட்டதாகும். 1968 மற்றும் 1970 ஆம் ஆண்டுகளில் இதில் உடைப்புக்கள் ஏற்பட்டதால் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.
இதன் பின்னர் 2003 ஆம் ஆண்டும் புனரமைப்புப் பணிகள் இடம்பெற்றன. மீண்டும் இந்தக் குளம் கடந்த 2008 ஆம் ஆண்டு உடைப்பெடுத்த நிலையில் புனரமைப்புக்கென 89 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு கடந்த ஆண்டு ஒக்டோ[ப]ர் மாதம் கம்பஹா மாவட்டத்தை சேர்ந்த ஒப்பந்தகாரர் ஒருவருட[ன்] ஒப்பந்தம் செய்யப்பட்டது. ஒன்ப[து] மாதகால ஒப்பந்தம் இந்த மாதம் [1]... ஆம் திகதியுடன் நிறைவடைகின்[ற] போதும் இதுவரை அதன் பணிக[ள்] இன்னமும் நிறைவடையவில்லை. இது தொடர்பாக உரிய அதிகாரிகளுக்[குத்] தெரியப்படுத்தப்பட்டுள்ளது - என்றா[ர்]. மேலும் இந்தக் குளத்தின் நீர்கொ[ள்]ளளவை அதிகரித்து சுமார் ஆயிர[ம்] ஏக்கருக்கு நீர்ப்பாசனம் செய்ய[க்] கூடிய வகையில் புனரமைப்[புப்] பணிகள் இடம்பெற்று வருவதாகவு[ம்] அவர் தெரிவித்தார். (க-[6])

### உரிமைகள் தொடர்பான கருத்தமர்வு



கிளிநொச்சி, செப். 2
கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த மதத் தலைவர்கள், வர்த்தகர்கள், தொழிலாளர்களுக்கென இலங்கை மனித் உரிமைகள் ஆணைக்குழுவினால் உரிமைகள் தொடர்பான முக்கிய கருத்தமர்வு நடத்தப்பட்டது.
மேற்படி கருத்தமர்வானது கிளிநொச்சி மாவட்ட வர்த்தகர்கள் மத அமைப்பினர்களுக்கு கடந்த வெள்ளிக் கிழமை முற்பகல் 10 மணி முதல் பிற்பகல் 4 மணிவரை இடம்பெற்றது. மேலும் நேற்றுமுன்தினம் சனிக் கிழமை காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரையும் நடைபெற்றது.
இந்த இரு கருத்தமர்வுகளும் கிளிநொச்சி எஸ்.கே. விருந்தகத்தில் நடைபெற்றது.
இந்த நிகழ்வில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜ், கொழும்பு பல்கலைக்கழக சட்டத்துறை விரிவுரையாளர் சர்வேஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டு மனித உரிமைகள் ,தொழிலாளர் உரிமைகள், மத உரிமைகள் தொடர்பான கருத்துக்களை வழங்கியிருந்தார்கள். (க-426-18)



ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவிப்பிள்ளையின் வருகையை ஒட்டி இறுதிப் போரின்போது முள்ளிவாய்க்காலில் கைவிடப்பட்ட வாகனங்கள் அவை குவிக்கப்பட்டிருந்த இடத்திலிருந்து அவசர அவசரமாக அகற்றப்பட்ட நிலையில் அந்தப் பகுதி சூனியப் பிரதேசமாகக் காணப்படுகின்றது. (க-6)

## பொலிஸ் நிலையத்தில் மோசடிகள் தொடர்பான முறைப்பாடுகள்

கிளிநொச்சி, செப். 2
கிளிநொச்சியில் சட்டவிரோத சீட்டு மற்றும் காசோலை மோசடிச் சம்பவங்கள் அதிகளவில் காணப்படுவதுட[ன்] பொலிஸ் நிலையங்களில் இவை தொடர்பா[ன] அதிகளவான முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன.
கிளிநொச்சியின் பல்வேறு பகுதிகளிலும் அனுமதிக[ள்] இல்லாத வகையில் சட்டவிரோதமான முறையிலா[ன] சீட்டுக்கள் இடம்பெற்று வருகின்றன. இவ்வாறா[ன] சீட்டுக்களுக்குப் பொறுப்பானவர்கள் மற்றும் சீட்[டு] பணத்தை பெற்றுக் கொண்டவர்கள் தலைமறை[வா]வாகும் சம்பவங்களும் அதிகளவில் காணப்படுகின்றன. இதனால் சீட்டுக்களுக்குப் பணம் கட்டியவர்கள் தம[து] பணத்தை இழந்த நிலையில் அலைந்து திரிவதை[க்] காண முடிகின்றது.
இவை தொடர்பாக அதிகளவான முறைப்பாடுக[ள்] கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் பதியப்பட[்டு] விசாரணைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதனை விட வெற்றுக் காசோலைகளை வழங்[கி] மோசடி செய்யும் சம்பவங்களும் இங்கு அதிகளவி[ல்] இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-[6])

## வேகமாகப் பயணிக்கும் வாகனங்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுகோள்

கிளிநொச்சி நகரினூடாக அதிக வேகத்தில் பயணிக்கும் வாகனங்கள் மீது பொலிஸார் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.
கிளிநொச்சி மருத்துவமனையிலிருந்து கரடிப் போக்குச் சந்திவரை மக்கள் மஞ்சள் கோட்டைக் கடப்பதற்குக் கூட அவகாசம் வழங்காது வாகனங்கள் அதிவேகத்தில் செல்வதைக் காண முடிகின்றது. இதனால் மஞ்சள் கோட்டைக் கடப்பதற்கு மக்கள் அச்சப்படும் நிலையும் காணப்படுகின்றது.
இதனால் போக்குவரத்து விதிமுறைகளை மீறுகின்ற சாரதிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என மக்கள் தெரிவிக்கின்றனர். குறிப்பாக மஞ்சள் கோட்டின் வழியாகத் திசைமாறிச் செல்லும் மோட்டார் சைக்கிள்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும், மற்றும் டிப்பர் வாகனங்கள் சுமைகளுடன் வேகமாகப் பயணிப்பதைத் தவிர்க்க வேண்டும் எனவும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-18)

## போக்குவரத்து சிரமங்களில் பாரதிபுரம், மலையாளபுரம் மக்கள்

கிளிநொச்சி, செப்.2
கிளிநொச்சி பாரதிபுரம், மலையாளபுரம் ஆகி[ய] கிராமங்களுக்குச் செல்லும் பிரதான வீதியின் மயி[ல]மரச் சந்திக்கு அண்மித்த பள்ளமான பகுதியில் போக்[கு]வரத்தை மேற்கொள்ளும் ஆயிரத்துக்கும் மேற்ப[ட்]டோர் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.
கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவுக்[கு] உட்பட்ட பாரதிபுரம், மலையாளபுரம், விவேகானந்[த] நகர் ஆகிய கிராமங்களுக்குச் செல்லும் பிரதா[ன] வீதியாக காணப்படும் அம்பாள்குளம் வீதியி[ல்] பாரதிபுரத்தின் மயிலமரச் சந்திக்கு அண்மித்த பகு[தி]யில் காணப் படும் பள்ளமான பகுதியில் இன்று வ[ரை] பாலம் எதுவும் அமைக்கப்படாத நிலை தொடர்கின்றது.
இதனால் இந்த வீதியூடாகப் பயணிக் கும் பாடசாலை மாணவர்கள் பொது மக்கள் எனப் பலரும் சிரம[ங்]களை எதிர்கொண்டு வருகின்றனர்.
குறிப்பாக பருவமழை காலங்களில் குறித்த பள்[ள]மான பகுதியில் வெள்ள நீர் அதிகளவில் பாய்ந்[து] செல்லும் போது பயணிக்க முடியாத நிலை காணப்ப[டு]வது வழமை. இதனால் பருவ மழை காலங்களி[ல்] போது இந்த வீதியூடாகப் பயணிக்கும் பலரு[ம்] சிரமங்களை எதிர்கொண்டு வருவதனால் இந்த[ப்] பகுதியில் பாலம் ஒன்றை அமைத்துத் தருமா[று] கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (க-[6])

## சிறுவர் பாதுகாப்புக் குழுவினால் பல்வேறு செயற்பாடு

கிளிநொச்சி, செப்.2
கிளிநொச்சி மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழுவினால் பல்வேறு செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வரு கின்றன.
இந்தக் குழுவினால் பாடசாலைகளிலிருந்து இடைவிலகிய மாணவர்களின் விவரங்கள் சேகரிக்கப்பட்டு அவர்களை பாடசாலைகளில் மீண்டும் இணைக்கும் முயற்சிகள் இடம் பெற்று வருகின்றன.
இவ்வாறு கடந்த நான்கு மாதங்களாகச் சுமார் 84 மாணவர்கள் பாடசாலைகளில் மீண்டும் இணைக்கப்பட்டுள்ளனர். மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள சிறுவர் துஷ்பிரயோகத்துக்கு உள்ளான சிறுவர்களுக்கு இக்குழுவினர் அத்தியாவசிய பொதிகளையும் வழங்கினர்.

**கடந்த நான்கு மாதங்களாகச் சுமார் 84 மாணவர்கள் பாடசாலைகளில் மீண்டும் இணைக்கப்பட்டுள்ளனர்.**

அத்துடன் சிறுவர் பாதுகாப்புத் தொடர்பாக அடையாளம் காணப்பட்ட மூன்று குடும்பங்களுக்கு அடிப்படை உதவிகள் வழங்கப்பட்டன.
இதைவிட சிறுவர்களுக்கான சுய பாதுகாப்பு வழிமுறை தொடர்பான விழிப்புணர்வுச் சுவரொட்டிகளும் வழங்கப்பட்டன. சிறுவர்களை வேலைக்கு அமர்த்துதல் தொடர்பான விழிப்புணர்வுச் செயற்பாடுகளும் இந்தக் குழுவால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-18)

தருவது வித்தியா

# இன்றைய நாள்

## உங்களுக்கு எப்படி?

**மேடம்:** திறமைகளை வெளிப்படுத்த நல்ல சந்தர்ப்பங்கள் அமையும். புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். பயணங்கள் திருப்திகரமாக அமையும். பால்ய நண்பர்களைச் சந்திப்பீர்கள். ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும்.

**இடபம்:** மன நிறைவுடன் சில காரியங்களை செய்து முடிப்பீர்கள். உறவுகளின் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி கிட்டும். உடன் பிறந்தவர்களின் ஆதரவு கிடைக்கும். முன் கோபம் விலகும். அரசுப்பணிகள் சுமுகமாக முடியும்.

**மிதுனம்:** கடந்த காலத்தை நினைத்து அவ்வப்போது பதற்றமடைவீர்கள். நல்ல வாய்ப்புகளையெல்லாம் பயன்படுத்தாமல் விட்டுவிட்டோமே என்றெல்லாம் வருத்தப் படுவீர்கள். உத்தியோகத்தில் விமர்சனங்களை ஏற்றுக் கொள்வது நல்லது.

**கடகம்:** யாருக்கும் பணம், நகை வாங்கி கொடுப்பதில் ஈடுபட வேண்டாம். உத்தியோகத்தில் பொறுப்புகள் அதிகரிக்கும். எதிலும் எச்சரிக்கையுடன் செயற்படுங்கள்.

**சிங்கம்:** வியாபாரத்தில் அதிரடி முடிவுகளை எடுத்து போட்டியாளர்களை அதிரச் செய்வீர்கள். நட்பு வட்டாரம் விரிவடையும். வெளியூரிலிருந்து நற்செய்திகள் வந்து சேரும். உத்தியோகத்தில் உங்களின் திறமையை மேலதிகாரி புரிந்து கொள்வார்கள்.

**கன்னி:** பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். அரசியல்வாதிகளின் சந்திப்பு நிகழும். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். புண்ணிய தலங்களுக்குச் சென்று வருவீர்கள். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.

**நாளை**

ஆவணி-18 செவ்வாய்க்கிழமை 03.09.2013
திதி: திரயோதசி பி.ப.03.54 வரை
நட்சத்திரம்: ஆயிலியம் முழுவதும்
சுபநேரம்: 10.35 - 02.05 வரை
இராகுகாலம்: 03.05 - 04.35 வரை

**துலாம்:** தன்னம்பிக்கை பிறக்கும். விடாப்பிடியாகச் செயற்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். உத்தியோகத்தில் மகிழ்ச்சி தங்கும். வியாபாரத்தில் மிகுதிகளைப் பெறுவீர்கள். பயணங்களால் ஆதாயம் உண்டு.

**விருச்சிகம்:** எந்தக் காரியத்தைத் தொட்டாலும் இரண்டு, மூன்று முறை முயன்று முடிக்க வேண்டி சூழ்நிலை உருவாகும். மற்றவர்களுடன் உங்களை ஒப்பிட்டுக் கொண்டிருக்க வேண்டாம். உத்தியோகத்தில் சில சூட்சுமங்களைக் கற்றுக் கொள்வீர்கள்.

**தனுசு:** புதியவரின் நட்பால் ஆதாயமடைவீர்கள். கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும். பணவரவு திருப்தி தரும். வியாபாரத்தில் எதிர்பாராத தனலாபம் உண்டு. எதிலும் நிதானித்துச் செயற்பட வேண்டிய நாள்.

**மகரம்:** சொன்ன சொல்லைக் காப்பாற்ற பரபரப்புடன் செயற்படுவீர்கள். மனதுக்குப்பிடித்தவர்களுக்காக அதிகம் செலவு செய்வீர்கள். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள். முன்கோபத்தைத் தவிர்ப்பீர்கள்.

**கும்பம்:** நட்பு வட்டாரம் விரிவடையும். பணவரவு திருப்தி தரும். வியாபாரத்தில் மறைமுக எதிர்ப்புகளைச் சமாளிப்பீர்கள். பிரபலங்களைச் சந்திப்பீர்கள். உத்தியோகத்தில் மகிழ்ச்சியுண்டு.

**மீனம்:** சில தினங்களாக தடைப்பட்டுவந்த காரியங்களெல்லாம் இன்று சுமுகமாக முடியும். உறவுகளுக்கு மத்தியில் மதிக்கப்படுவீர்கள். உத்தியோகத்தில் உங்களின் திறமைகள் வெளிப்படும். சக ஊழியர்களின் ஆதரவு உண்டு.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 3 | | | 9 | 7 | | |
| 7 | 6 | | 2 | 5 | | | 3 | |
| | | | | 7 | | | 2 | 6 |
| 4 | 9 | | 6 | 2 | | 8 | | |
| | | 5 | 8 | | 7 | 2 | | |
| | | 2 | | 3 | 1 | | 9 | 7 |
| 5 | 2 | | | | | | | |
| | 7 | | | 8 | 2 | | 4 | 1 |
| | | 8 | 7 | | | 3 | | |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 1 | 8 | 9 | 4 | 3 | 6 | 5 | 2 |
| 5 | 2 | 9 | 7 | 1 | 6 | 8 | 3 | 4 |
| 4 | 6 | 3 | 2 | 5 | 8 | 9 | 1 | 7 |
| 6 | 3 | 2 | 1 | 7 | 5 | 4 | 9 | 8 |
| 8 | 9 | 5 | 6 | 2 | 4 | 1 | 7 | 3 |
| 1 | 7 | 4 | 3 | 8 | 9 | 2 | 6 | 5 |
| 2 | 5 | 6 | 8 | 3 | 1 | 7 | 4 | 9 |
| 3 | 8 | 1 | 4 | 9 | 7 | 5 | 2 | 6 |
| 9 | 4 | 7 | 5 | 6 | 2 | 3 | 8 | 1 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள் ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என் பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவ லாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

உங்களின்
உயர்கல்விக்
கனவுகளை
நனவாக்கிக்கொள்ளுங்கள்

CIMA
CLASSES
@
SPECTRA SKILLS

சிறந்த தொழிலதிபர்களையும்
தலைவர்களையும்
உருவாக்குகிறோம்.

வளமான எதிர்காலத்திற்கு
நம்பிக்கையான முதலீடு

No, 19, Stanley Road, Jaffna.

எமது விரிவுரையாளர்கள்


Dr. S. Vijayakumar
- B.A(Hons), MA.Econ, MPhil., PhD
- Senior Lecturer,
- Department of Economics University of Jaffna


K. Sivagar
- BSc (Hons) in Accountancy & Business Finance - Special - Wayamba University of Sri Lanka
- CIMA Passed Finalist


M. Jude Dinesh
- LLM (Reading), Attorney-at-law,
- Dip in International Relations,
- Practicing lawyer at the Supreme Court


R. Manivannan
- CIMA - Final
- Business Consultant
- Lecturer CIMA 2yrs Experirence
- General Manager

வருகைதரு விரிவுரையாளர்கள்


D. Sam
- 25 yrs Experience in Accountancy Field
- Chairman - DMI


Rajaram purusothamakuru
- Lecturer for CIMA in Colombo with two years experience
- Undergraduate University of Sri Jayewardenepura Department of Accounting [ B.sc accounting ]
- District first 2010 A LEVEL in commerce stream

Experience
Responsibility
Flexibility
Job Opportunity
Growth
Free Leadership Training

DISCOUNT RATES UP TO 100%

தொடர்புகளுக்கு
021 222 1422
021 222 1423

STARTS ON
14.09.2013
அனுமதிக்கு முந்துங்கள்
(C/ 11706) (45.6.3)

# நல்லூர் ஆலயச் சூழலில் இன்று




யாழ்ப்பாணம், செப்.2
நல்லூர் கந்தன் ஆலய இருபத்திரண்டாம் திருவிழாவான இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நாவலர் மணி மண்டபத்தில் சமயச் சொற்பொழிவும், கலை நிகழ்வுகளும் இடம்பெற வுள்ளன.
நிகழ்வில் "வரதா முருகா மயில் வர்கனனே" என்ற பொருளில் திருமதி சறோஜினிதேவி சிவஞானமும் "உதித்ததன் உலகம் உய்ய" என்னும் தலைப்பில் சைவப் புலவர் கைலைநாதனின் சிறப்புச் சொற்பொழிவுகளும், சுழிபுரம் கார்த்திகேசு ஞாபகார்த்த அறநெறிப் பாடசாலை, கோப்பாய் சித்திரவேலாயுதர் கோயில் அறநெறிப் பாடசாலை, கரணவாய் உச்சில் புவனேஸ்வரி அம்பாள் அறநெறிப் பாடசாலை மாணவர்களது கலை நிகழ்வுகளும் இடம்பெறும். விசேட நிகழ்வாக செல்வன் தவராசா கவாஸ்கரனின் இன்னிசைக் கச்சேரியும் இடம்பெறும்.

★ ★ ★

நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் இன்று மாலை 6.45 மணிக்கு தெய்வீக இசையரங்கம் நடைபெறவுள்ளது.
இசை அரங்கில் பாடல்களை திருமதி குணபூஷணம் வழங்க, அணி இசைக் கலைஞர்களாக வயலின்- ஏ.ஜெயராமன், மிருதங்கம்- எம்.சிதம்பரநாதன், முகர்சிங்- என்.சதீஸ்குமார் ஆகியோர் கலந்துகொள்வர்.

★ ★ ★

நல்லூர் கந்தனின் பெருந்திருவிழாவை முன்னிட்டு சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம் நல்லை ஆதீனத்தில் நடத்தும் தெய்வீக இசை அரங்கில் இன்றுமாலை 6.30 மணிக்கு பிரம்மஸ்ரீ சுவாமிநாதர் சர்மா குழுவினரின் மிருதங்க இசைக் கச்சேரி இடம்பெறும்.

★ ★ ★

நல்லூர் ஸ்சவ மகா சபையின் ஏற்பாட்டில் நல்லை ஆதீன குருமூர்த்த ஆலய மண்டபத்தில் நடைபெறும் மகாபாரத தெய்வீகத் தொடர் இசைப் பேருரை இன்று மாலை 6.30 மணிக்கு ஆரம்பாகும். பிரம்மஸ்ரீ சிவ. வை. நித்தியானந்த சர்மா 'பீஷ்மர் யுத்தம்' பற்றி இசைப் பேருரை நிகழ்த்துவார்.

★ ★ ★

நல்லூர் மகேஸ்வரன் மணி மண்டபத்தில் இன்று இரவு 7.15 மணிக்கு சின்மயா மிஷன் ஆச்சிரம வதிவிட ஆச்சாரியார் பிரம்மச்சாரி ஜாக் கிரத சைதன்யா சுவாமிகள் 'இதிகாசபுராணங்கள்' என்னும் தலைப்பில் சொற்பொழிவு ஆற்றுவார்.

★ ★ ★

நல்லூர் நடராஜா பரமேஸ்வரி மணி மண்டபத்தில் சைவத் தமிழ் பண்பாட்டு கழகத்தினர் நடத்தி வரும் தெய்வீக பேருரையில் இன்று மாலை 6.30 மணிக்கு "தமிழும் முருகனும்" என்னும் தலைப்பில் பரா ரதீஸின் சொற்பொழிவு இடம்பெறும்.
(ந-86-7-14)

# தூக்கில் தொங்கிய நிலையில் குடும்பஸ்தர் சாவு

குடும்பத்தினரைப் பிரிந்து வாழ்ந்த குடும்பஸ்தர் மரத்தில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டார். இந்தச் சம்பவம் சனிக்கிழமை மந்துவில் மேற்கில் இடம்பெற்றது.
இது தொடர்பாக கொடிகாமம் பொலிஸார் நீதிவான் முன்னிலையில் அறிக்கை தாக்கல் செய்தனர். நீதிவானின் பணிப்பின் பேரில் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி சீ.சீ.இளங்கீரன் விசாரணைகளை மேற்கொண்டார்.
சடலத்தை சாவகச்சேரி வைத்தியசாலைக்கு கொண்டு சென்று வைத்தியசாலை பொறுப்பதிகாரி மூலம் உடற்கூற்றுப் பரிசோதனை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறும் உடற்கூற்றுப் பரிசோதனை யின் பின்னர் சடலத்தை உறவினரிடம் ஒப் படைக்குமாறும் பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.
சனிக்கிழமை இரவு சடலம் வைத்தியசாலைக்கு கொண்டுவரப்பட்டது. மந்துவில் மேற்கைச் சேர்ந்த செல்லப்பா நாகேந்திரன் (வயது-50) என்னும் குடும்பஸ்தரே சாவடைந்தவராவார். (ந-9)


## நெஞ்சம் மறவாத 11 ஆம் ஆண்டு நினைவஞ்சலி




தோற்றம் 27.07.1944
மறைவு 03.09.2002

அமரர் கிருஷ்ணபிள்ளை கணேசமூர்த்தி
(ஓடிகணேஸ்)
(திதி: 02.09.2013)

அன்பான அப்பாவே!
எங்களை விட்டுப் பிரிந்து
பல ஆண்டுகள் சென்றாலும்
பரிதவிக்கின்றது எங்கள் மனம்
எங்களிடம் இருந்து உங்களை
பிரித்ததும் இல்லாமல்
உங்கள் நினைவுகளோடு
எங்களை ஊரில் அலைய
விட்ட கொடுமையை மறவோம்
எண்ணும் பொழுதெல்லாம்
ஏங்கித் தவிக்கும்
உங்கள் மனைவி, பிள்ளைகளுக்கு
மீண்டும் ஒரு பிறப்பெடுத்து
வருவீர்களோ அப்பா...
ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்
வைரவர் கோயிலடி,
பத்தமேனி, அச்சுவேலி.
(39325)(11.6.3)


# எங்கடை வாகனம்; எப்படியும் ஓடுவம்...!



ஆனைக்கோட்டையில் வெள்ளிக்கிழமை மாலை வேளை இரு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதியதில் சைக்கிளோட்டிகள் இருவரும் பாய்ந்து தப்பித்துக் கொண்டனர். மோட்டார் சைக்கிள்கள் வீதியில் புரண்டு கிடக்கின்றன. (ஓ-100)

## சாட்டி மாதா திருவிழாவை முன்னிட்டு அடிப்படை வசதிகளுக்கு ஏற்பாடு

யாழ்ப்பாணம், செப். 2
வேலணை சாட்டி புனித சிந்தாத்திரை மாதா தேவாலய உற்சவம் எதிர்வரும் 5 ஆம் திகதி வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தினமும் பிற்பகல் 4 மணிக்கு நவநாள் வழிபாடுகள் இடம்பெறும்.
எதிர்வரும் 14 ஆம் திகதி யாழ்.ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் தலைமையில் திருப்பலிப் பூசைகள் ஒப்புக் கொடுக்கப்படும்.
திருவிழாவை முன்னிட்டு குடிதண்ணீர் போக்குவரத்து சுகாதார சேவைகள் மின்சாரம் தொடர்பான மக்களின் அத்தியாவசிய தேவைகளை செயற்படுத்துவது தொடர்பாக வேலணை பிரதேச செயலர் திருமதி மஞ்சுளாதேவி சதீஷன் தலைமையில் ஒன்றுகூடல் நடைபெற்றது. இதன்போது சம்பந்தப்பட்ட திணைக்கள அதிகாரிகள் கலந்து கொண்டனர்.
சாட்டி கடற்கரை சுற்றுலாப் பகுதியில் ஏற்கனவே மலசலகூட வசதிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதனால் புதிதாக அவற்றை அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படமாட்டா எனவும் தெரிவிக்கப்பட்டது. இறுதி இரு தினங்களுக்கும் நீர் வடிகாலமைப்புச் சபை குடிதண்ணீர்த் தேவை களில் பிரதேச சபைக்கு உதவியளிக்கும்.
திருவிழாக் காலத்தில் வாகனத் தரிப்பிட ஏற்பாட்டை பிரதேச சபை மேற்கொள்ளும். திருவிழா இறுதி நாளில் இ.போ.ச. யாழ்.சாலை மேலதிகமாக பஸ் சேவைகளை நடத்தவுள்ளது. போக்குவரத்து வசதி கருதி மண்கும்பான் சாட்டி வீதியும் புனரமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-7)

## பழந்தமிழர் இயக்க மாநாட்டுக்கு கட்டுரை அனுப்பலாம்

பழந்தமிழர் இயக்கத்தின் இரண்டாவது வருடாந்த மாநாடு எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ளது.
மாநாட்டில் 'பழந்தமிழர்' பற்றிய ஆய்வுக் கட்டுரைகளை சமர்ப்பிக்க விரும்புபவர்கள் கட்டுரையின் சாராம்சத்தையோ, அல்லது ஆய்வுக் கட்டுரையையோ எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பலாம்.
கட்டுரை சமர்ப்பிக்க விரும்புபவர்கள் ம.வித்தியானந்தநேசன், நிறுவுநர் பழந்தமிழர் இயக்கம், இல-7, கலைமகள் வீதி, அரியாலை எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கலாம். (ந)

## திருவிழாக் காலத்தில்3 வேளை உணவு தங்கியிருக்கும் வயோதிபர்களுக்கு

வடமராட்சி, செப்.2
வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ் வார் ஆலயப்பெருந் திரு விழாக் காலத்தில், கோயில் சுற்றாடலில் தங்கியிருக்கும் வயோதிபர்களுக்கு தினமும் மூன்று வேளை உணவு வழங்க ஆதி மூல லக்சுமி நாராயண அமுத சுரபி மடம் ஏற்பாடு களைச்செய்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இந்த ஆலயத்தில் வருடாந்தப் பெருந்திருவிழா எதிர்வரும் 4 ஆம் திகதி புதன்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 17 தினங்கள் நடைபெறவுள்ளன. (ந-8)

## சமய சந்நிதிகளில்

காரைநகர், செப். 2
காரைநகர் களபூமி கருப்பிட்டியற்தனை ஸ்ரீ கற்பகப் பிள்ளையார் ஆலய அலங்காரத் திருவிழா கடந்த வியாழக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 12 தினங்கள் நடைபெற்று வருகின்றன.
திருவிழாக்களில் எதிர்வரும் 9 ஆம் திகதி திங்கட்கிழமை விநாயக சதுர்த்தி விரதமும், மறுநாள் 10 ஆம் திகதி பூங்காவனத் திருவிழாவும் இடம்பெறும். (ந-250)

★ ★ ★

காரைநகர், செப். 2
காரைநகர் தங்கோடை நாகபூஷணி அம்பாள் ஆலய அலங்காரத் திருவிழா 30 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெற்று வருகின்றன.
அலங்காரத் திருவிழாவின் இறுதிநாளான எதிர்வரும் 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை 1008 சங்காபிஷேகமும் , மணவாளக் கோல உற்சவமும் இடம்பெறும்.
அன்றைய தினம் காலை 7 மணிக்கு காரைநகர் மணற்காடு முத்துமாரி அம்மன் ஆலயத்திலிருந்து மங்கையர்களின் பாற்குட பவனி இடம்பெறும். (ந-250)

## தொழிற் பூங்காவுக்கு நிதி



கைதடி, செப்.2
யாழ். விழிப்புலனற்றோர் சங்கத்தின் கீழ் இயங் கும் கைதடி தொழிற்பூங்காவுக்கு நிதியுதவி வழங்கப்பட்டது.
இந்தப் பூங்காவுக்கு புறுணை நாட்டில் வசிக்கும் கைதடி மேற்கைச் சேர்ந்த செல்வி.அருள் ஞானப்பிரகாசம் மாதினி ஒரு தொகை நிதியை அண்மையில் வழங்கினார். (ச-288)

## பெரும் போகத்துக்கு தயார்படுத்தல்

பெரும்போக நெற் செய்கைக் காக வடமராட்சிப் பிரதேசத்தில் வயல் நிலங்கள் உழுது பண்படுத்தப்பட்டு வருகின்றன.
இப் பிரதேசத்தில் வல்லை, துன்னாலை, கரவெட்டி கிழக்கு, க்ப்பூதூ, கெருடாவில் ஆகிய இடங்களில் உள்ள வயல் நிலங்களே பண்படுத்தப்படுகின்றன. அடுத்துவரும் மழையை அடுத்து நெல் விதைப்பு ஆரம்ப மாகும் என விவசாயிகள் தெரிவித்தனர். (ஒ-8)


## கண்ணீர் அஞ்சலி

எமது வித்தியாலயத்தின் ஆசிரியர்
வி. நிறஞ்சன் அவர்களின் அன்புத் தாயார்
திருமதி கமலநாயகி விவேகானந்தா
அவர்கள் 31.08.2013 சனிக்கிழமை இறைபதம் அடைந்த செய்தி கேட்டு எமது வித்தியாலய கல்விச்சமூகம் துயரடைவதோடு, அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.
ஆசிரியர் நலன்புரி கழகம்
யா/ கனகரத்தினம் ம.ம.வி. யாழ்ப்பாணம்.

மகாஜன அன்னைக்கு சேவை வழங்கி

இன்று (02.09.2013) மணிவிழாக் காணும்

உபஅதிபர் செல்வி இரஞ்சிதமலர் சம்பந்தர் அவர்களின்

# சேவைநலன் பாராட்டு



கலைப்பட்டதாரி,
பட்டப்பின் கல்வி டிப்ளோமா
உபஅதிபர் - ஆசிரியர் தரம் I
யா/மகாஜனக் கல்லூரி,
தெல்லிப்பழை




*கல்வி கற்ற பாடசாலை விபரம்:*

| | |
|---|---|
| ஆரம்பக்கல்வி | - யா/சீனன்கலட்டி ஞானோதயா வித்தியாசாலை |
| இடைநிலைக்கல்வி | - யா/அருணோதயாக்கல்லூரி |
| க.பொ.த (உ.த) | - யா/ஸ்கந்தவரோதயாக்கல்லூரி |

*ஆசிரியர் சேவை:*

| | |
|---|---|
| கிளி/இயக்கச்சி அ.த.க பாடசாலை | - 21-04-1982 - 31-03-1989 |
| யா/மகாஜனக் கல்லூரி | - 01-04-1989 - 24-05-1998 |
| திரு/ஆலங்கேணி மகாவித்தியாலயம் | - 25-05-1998 - 31-12-2002 |
| யா/மகாஜனக் கல்லூரி | - 01-01-2003 - இன்றுவரை |

(தற்காலிகமாக - 01-07-1996 - 24-05-1998 வரை
திரு/விபுலானந்தாக் கல்லூரியில் கல்வி கற்பித்தார்)

(C/11710) (7.6.3)

மகாஜனாவின் சேவைக்காலத்தில் சமூகக்கல்வி, அரசியல் விஞ்ஞானம், தமிழ்மொழி போன்ற பாடங்களை கற்பித்ததுடன் சங்கீதம், நாடகம் போன்ற வற்றில் ஈடுபாடு கொண்ட ஆசிரியராகவும் இருந்து நாடகங்களை மேடையேற்றிய ஆசிரியராவார். மேலும் வலைப்பந்தாட்டம், உடற்பயிற்சி அணிகளின் பொறுப்பாசிரியராகவும், மாணவர்களின் ஒழுக்காற்றுக்குழுப் பொறுப்பாசிரியராகவும் நூற்றாண்டு மலர்க்குழுவின் ஆலோசகராகவும், ஆசிரியர் கழக தலைவராகவும் செயற்பட்டு ஆசிரியப் பணியில் உன்னதமான பணியாற்றியதோடு அர்ப்பணிப்புடனும் விடாமுயற்சியுடனும் தொடர்ச்சியாகக் கடுமையாக உழைத்து மாணவர்களின் ஒழுக்கத்தை மேம்படுத்தினார்.

நவமகாஜன சிற்பி அமரர். அதிபர்.தெ.து.ஜயரத்தினம் அவர்களின் நூறாவது பிறந்த தின விழாச் சபையின் இணைச்செயலாளராக உயிர்த்துடிப்புடன் செயற்பட்டு வருகின்றார்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள், நலன் விரும்பிகள் அனைவரினதும் நன்மதிப்பைப்பெற்ற எமது உபஅதிபர் அவர்கள் 02-09-2013 இல் ஓய்வு பெறுகின்றார். இவர் ஓய்வுக்காலத்தில் சீரும் சிறப்பும் பெற்று நலமுடன் வாழ மகாஜனக்கல்லூரி சமூகம் சார்பில் வாழ்த்துகின்றோம்.

கல்லூரிச் சமூகம்,
யா/மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை.



## கன்ரர்விற்பனைக்கு

40 Sri-xxxx ISUZU 350 கன்ரர் வாகனம் விற்பனைக்குண்டு.
தொடர்பு 077 370 6528 (39387) (4.6.3)



## கார் விற்பனைக்கு

தனிப் பாவனையிலிருந்த
Toyata Corolla 121Car
விற்பனைக்குண்டு.
(39345) (3.4.6) தொடர்பு: 077 717 3414



## மணமகள் தேவை

யாழ்ப்பாணம் - R.C- மதத்தைச் சேர்ந்த 34 வயதுடைய அரச தொழில் புரியும் பட்டதாரி மணமகனுக்குத் தகுந்த மணமகள் தேவை.
தொடர்பு: 077 210 5286



கொழும்பு -சென்னை
Rs. 7,430/-

கொழும்பு -சென்னை-கொழும்பு
திங்கள், புதன், வெள்ளி, சனி, ஞாயிறு தினங்களில்
Rs. 13,500/- upwards

## குறைந்த விலையில் சொகுசான பயணம்



- ✓ Baggage allowance 37 kgs.
- ✓ Complementary Meals provided
- ✓ Groups fares offer only over 10 passengers.

AIR-INDIA express (c/11832) (3.6)

Contact for further information: www.airindiaexpress.in
World of Hayleys
47, Stanley road, Jaffna. Ph: 021 2221878, 0777730818


# இரு நூல்கள் வெளியீடு

யாழ். பல்கலைக்கழக பொருளியல்துறை முன்னாள் தலைவர் நல்லதம்பி பேரின்பநாதனின் 'இலங்கைப் பொருளாதார வரலாறு 1800-1948 விவசாயத்துறை', 'இலங்கைப் பொருளாதார வரலாறு கட்டுரைத் தொகுப்பு' ஆகிய இரு நூல்களின் வெளியீட்டு விழா யாழ். பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது.

நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணமும், சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக்கழக கலைப் பீடாதிபதி பேராசிரியர் வி.பி.சிவநாதனும் கலந்து கொள்வர்.


## காணி விற்பனைக்கு

நீர்வேலி மாசுவன் சந்தியிலிருந்து நிலாவரை பக்கமாக 200m தூரத்திலுள்ள றோட்டுடன் 12 பரப்புக் காணிவிற்பனைக்குண்டு.
தொடர்பு 071 902 2311 (39386) (4.6.3)



## A/L வரலாறு - 2015/2014

மாவட்ட, தேசிய மட்டங்களில் உயர் பெறுபேறுகளைப் பெற்றிட வழிகாட்டும் உங்கள் ஆசான்

**M. பத்மன்** B.A (Hons) History
M.A. (History)

- * அளவான பாடக்குறிப்பு, சிறந்த விளக்கத்துடன் கற்பிக்கப்படுகின்றன.
- * புதிய அனுமதிகள் வழங்கப்படு கின்றன.
- * தனிப் பாட அனுமதி வழங்கப்படும்.

கற்பிக்கும் இடங்கள்: (39341) (45.6.3)

D.M.I யாழ்ப்பாணம் | புகழ் மானிப்பாய் | உயர்கலைக் கல்லூரி நுணாவிட்டி



## அகில இலங்கை பரஸ்பர சகாய நிதிச்சங்கம் வ-து வட்டுக்கோட்டை

அங்கத்தவர்கள் கவனத்திற்கு:

எமது முந்திய விளம்பரங்களின் படி இதுவரை அங்கத்தவர்களுக்கான மேலதிக பணங்களைப் பெறாதவர்களும், அங்கத்துவப்புத்தகங்கள் வைத்திருந்து இதுவரை முன்பு பணங்களைப் பெறாதவர்களும், அடகு நகைகளை மீளப் பெறாத வன்னிப்பகுதி அங்கத்தவர்களும், 03.09.2013, 04.09.2013, 05.09.2013 ஆகிய திகதிகளில் நேரில் வந்து பணங்களைப் பெற்றுக் கொள்ளலாம். அடகு நகைகளையும் மீளப் பெறலாம்.

அதற்கான சான்றாதாரங்களுடன் வரவேண்டிய இடம்:
டாக்டர் வி.சுந்தரமூர்த்தி அவர்களின்
"அரவிந்கிளினிக்" தபாற்கந்தோர் முன்புறம், விசுவமடு.

இ.ஆனந்தராசா
நிர்வாகச் செயலாளர்.

தொ.பே.இல - 077 149 5631 (39316) (4.6.3)



இப்போது

# சாவகச்சேரியிலும் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை

# ANGEL INTERNATIONAL SCHOOL

ANGEL INTERNATIONAL SCHOOL MANIPAY
In God we trust
a school with a difference
humedica

Now in
**Chavakachcheri**

பஸ் நிலையத்திற்கு அருகாமையில் கச்சாய் வீதியில்
Near to Bus stand at Kachchai Road

3-6 வயது மாணவர்களுக்கான அனுமதிகள் செப்ரெம்பர் 4ம் திகதி முதல் காலை 08.30 மணிக்கு



AISM Manipay
Phone : 021 225 5628

AISM Jaffna Extenstion
Phone : 021 222 4118

(C/11709)

தொடர்புகளுக்கு: 0776470307, 0777238300

(c/11709)(3.6)



## Professional and Job oriented courses in Jaffna

### *Business, IT and Hotel Management courses*

CTH CONFEDERATION OF TOURISM & HOSPITALITY

Diploma /HND in Business Management

International Diploma in computer studies (IDCS)

Diploma in Tourism and Hospitality

Diploma in Hotel Management

### *English courses*

Basic English with spoken
English for work
English Teacher Training

### *Specialized IT courses*

* Diploma in Information Technology-University of Colombo
* Graphics and multimedia

IELTS CAMBRIDGE ENGLISH Language Assessment

CIW A+

Web Designer    IT support technician



100 மாணவர்களுக்கு
விசேட புலமைப்பரிசில்
திட்டம்

- சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்கள்.
- இலங்கையில் உள்ள நிறுவனங்களில் பயிற்சித் திட்டம்/ வேலைவாய்ப்பு.
- உயர்கல்வி கற்பதற்குரிய இலகு வங்கிக்கடன் வசதிகள்.
- வெளிநாடுகளில் உயர்கல்வி வாய்ப்புக்கள்

## LONDON BUSINESS COLLEGE

Hot line 0775301299

36, Palaly Road, Kantharmadam, Jaffna
Vathiri Road, Uduppiddy Junction, Uduppiddy
(Near the American mission College)
168, A9 Road, Ananthapuram Kilinochchi
(in front of NAITA)
T.P: 021 221 7105

(11718)(3.6)

# நல்லூர் உற்சவத்தையொட்டி தினமும் இரத்ததான முகாம்

யாழ்ப்பாணம், செப்.2
நல்லூர் லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் இரத்ததான முகாம், நல்லூர் ஆலய மேற்கு வீதியிலே சமூக மேம்பாட்டு மையக் கட்டடத்தில் வியாழக்கிழமை தொடக்கம் நடைபெற்று வருகின்றது என்று நல்லூர் லயன்ஸ் கழகத் தலைவர் ந.இராசநாயகம் தெரிவித்தார்.



நல்லூர் கந்தசாமி ஆலய வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு தினமும் மாலை 4 மணி தொடக்கம் இரவு 9 மணி வரை நடைபெற்று வரும் இரத்ததான முகாமில். பலர் கலந்து கொண்டு இரத்த தானம் வழங்கி வருகின்றனர்.
இந்த நிகழ்வு எதிர்வரும் 6 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.
இதேவேளை இந்த இரத்ததான முகாம் தேர் மற்றும் தீர்த்தத் திருவிழா காலங்களில் விசேடமாக காலை 7 மணி தொடக்கம் இரவு 9 மணி வரை நடைபெறும் என்று லயன்ஸ் கழகத் தலைவர் தெரிவித்தார். (ச-288)


# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்
03★04★1934

மறைவு
03★08★2013

அமரர் நாகலிங்கம் சுப்பிரமணியம்

(நவாலி ஆனைக்கோட்டை)

பப்பா உங்கள் நினைவு எங்கள் உள்ளங்களில் என்றும்
பசுமையாய், இனிமையாய், சுகமும் வலியும்
கலந்த கலவையாய் –உங்கள்
பேச்சும் மூச்சும் நின்று மாதம் ஒன்று கடந்தாலும்
நாம் என்றும் உங்கள் நினைவுடனே.....

அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும், மதிய போசனமும் இன்று (02.09.2013) காலை கொழும்பு 13 இல் உள்ள கமலா மோடி மண்டபத்தில் நடைபெற உள்ளதால், இதில் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

ஈர நினைவுகளுடன்
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

கொழும்பு-13. (39382)(3.6.11)


# தெல்லிப்பழை அம்மனுக்கு வியாழனன்று கொடி

தெல்லிப்பழை, செப் 2
தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயக் கொடியேற்றம் எதிர்வரும் 5 ஆம் திகதி வியாழன் முற்பகல் 11 மணிக்கு நடைபெறவுள்ளது. தொடர்ந்து 12 தினங்கள் திருவிழா நடைபெறும்.
திருவிழாவில் மஞ்சத் திருவிழா எதிர்வரும் 10 ஆம் திகதி செவ்வாய்க்கிழமையும், வேட்டைத்திருவிழா 13 ஆம் திகதி வெள்ளிக்கிழமையும், சப்பறத் திருவிழா 14 ஆம் திகதி சனிக்கிழமையும் தேர்த்திருவிழா 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் தீர்த்தத் திருவிழா 16 ஆம் திகதி திங்கட்கிழமையும் இடம்பெறும். (ந)

# நிதி ஒதுக்கீடு

வலி. வடக்கு, செப் 2
நல்லூர் பிரதேச சபைக்கு உட்பட்ட கோண்டாவில் மேற்கு ஞானவீரர் சனசமூக நிலைய சிறுவர் பூங்காவுக்கான உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்கு பன்முகப்படுத்திய வரவு செலவுத் திட்டத்தின் (75, 000) கீழ் எழுபத்தையாயிரம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா தனது பன்முகப்படுத்திய நிதியில் இருந்து இந்த ஒதுக்கீட்டைச் செய்துள்ளார்.
சிறுவர்களுக்கான பூங்கா இந்தப் பகுதியில் இல்லாத நிலையில் இத்தகைய பூங்கா அமைக்கப்படுவதன் மூலம் அதிக சிறுவர்கள் பயன்பாட்டைப் பெற வாய்ப்பேற்பட்டுள்ளமை மக்களிடையே வரவேற்பைப் பெற்றுள்ளது. (ந-86)

# நெஞ்சக் கதவை கொஞ்சம்........

செல்வ வேலாயுதம்

## வரட்டும் வடக்கு மாகாணசபை

அந்தப் பால்மா சளி வைக்கும்; இந்தப் பால்மா ஒரு மணம்; உந்தப் பால்மாதான் திறம் எனக் குறை நிறை சொன்னதை விட்டு பால்மாவைக் கண்டாலே மிரண்டோடும் ஸ்ரீமான் பொதுசனத்தை மேலும் மிரட்டுவதாக, இலங்கையர்களை எலிகளாகப் பரிசோதனைக்கு அனுமதிக்க மாட்டோம்- சர்ச்சைக்குரிய பால்மா வகைகளைப் பதுக்கினால் நடவடிக்கை- நேரடியாக பசுவிலிருந்து கறக்கப்பட்ட பாலையே குடியுங்கள் என்ற உச்ச மட்டத்தினரின் கருத்துக்கு மேலாக குறிப்பிட்ட பால்மா வகைகளில் டி.சி.டி இரசாயன நச்சுப் பொருள் இல்லை என்ற சுகாதார அமைச்சின் தகவல் வயிற்றில் பாலை வார்த்துள்ளது.
நகரங்களில்தான் பால் சாலைகளில் சனக் கூட்டம் என்ற நிலைமாறி கிராமத்து பால்சாலைகளிலும் கூட அதிகாலையிலே சனக் கூட்டம். வீட்டுக்கு வீடு பசு மாடு வைத்திருந்தவர்கள் பராமரிக்க நேரமில்லை, தீவனத் தட்டுப்பாடு என்றதனாலேயே இந்தநிலை.
அண்மையில் ஒரு கிராமத்து வீட்டில் 31 ஆம் நாள் வீட்டுக்கிருத்தியத்தின் போது ஆன்மாவுக்கு படைத்தவற்றை பசு மாட்டுக்கு வைப்பதற்காக மாடு தேடித் திரியும் நிலைமை இன்று. இது நாளைக்கு சமய சம்பிரதாயத்தையே மாற்றிவிடலாம் கண்டியளே.....
கால்நடை வளர்ப்போரை, ஆர்வம் உள்ளோரைத் தூண்டுவோம். பெரும் பண்ணைகளை அமைப்போம். தீவனங்களுக்காக ஊடு பயிர்களையும் வளர்ப்போம். பாலைப் பதப்படுத்தி பைகளில் பொதிந்து வீட்டுக்கு வீடு ஆவின் பாலென காலையில் விநியோகிப்போம். அந்தநாள் வெகு தூரத்தில் இல்லை. வரட்டுமே எமது வடக்கு மாகாண சபை.


# ஆண்டு ஒன்பதில் பிரார்த்திக்கின்றோம்

அமரர் மனோரஞ்சிதம் சிவசுப்பிரமணியம்



திதி: ஆவணி -அபரபக்க துவாதசி
(02.09.2013)

இயற்கையில்
11.08.1930

இறையுள்
11.09.2004

மண்ணினிற் பிறந்தார் பெறும் பயன் மதிசூடும்
அண்ணலார் அடியார்தமை அமுது செய்வித்தல்- என
இல்வாழ்வில் விருந்தோம்பி யாவர்க்கும் இன்னுரை பகர்ந்து
ஈன்று புரந்து எம்மை வளர்த்து உவந்த அம்மா- நீங்கள்
சீருந் திருவும் பொலியச் சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
மாறிலா மகிழ்ச்சியில் என்றும் மலர
மன்றுளாடுவான் மலர்ப்பாதம் பணிந்து போற்றி
நெஞ்சக்கலகல் நெகிழ்ந்து பிரார்த்திக்கின்றோம்.

"எப நேசர்"
செம்மணி வீதி,
நல்லூர். (39364) (4.6.3)

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.


# நல்லூர் தேரன்று இந்து விடுதியிலும் அன்னதானம்

யாழ்ப்பாணம், செப்.2
நல்லூர் கந்தசுவாமி கோயில் தேர்த் திருவிழாவையொட்டி யாழ். மாநகர சபையின் நீர் விநியோகப் பகுதியினர் தேர்த் திருவிழாவான நாளை மறுதினம் புதன்கிழமை அடியார்களுக்கு அன்னதானம் வழங்கவுள்ளனர்.
யாழ். மாநகர சபை இந்து விடுதியில் அன்றையதினம் காலை 9 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை அன்னதானம் வழங்கப்படவுள்ளது. (ஒ-7)

# புதிய கட்டட திறப்பு விழா இன்று

கைதடி, செப்.2
சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் கைதடி வடக்கு 190 ஆம் இலக்கக் கிளையின் புதிய கட்டடத் திறப்பு விழா இன்று திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு சங்கத்தின் தலைவர் கி.பூபாலசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.
நீண்ட காலமாக வாடகைக் கட்டடத்தில் இயங்கி வந்த இந்தக் கிளைக்கு தற்போது காணி வாங்கப்பட்டு புதிதாக அமைக்கப்பட்ட கட்டடத்தில் இயங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-288)


# 31 ஆம் நாள் நினைவலைகள்



பிறப்பு
12.06.1939

இறப்பு
03.08.2013

அமரர் சிதம்பரப்பிள்ளை சிவஞானம்

இலக்கம்: 29, புத்துவெட்டுவான்

அன்னாரின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (02.09.2013) திங்கட்கிழமை புத்துவெட்டுவானில் அமைந்துள்ள அவரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இல. 29, புத்துவெட்டுவான்,
துணுக்காய்.

குடும்பத்தினர்.


# காரைநகர் கடையில் பொருள்கள் திருட்டு

காரைநகர், செப்.2
காரைநகர் பழைய கண்டியில் உள்ள வர்த்தக நிலையத்தின் ஓடுகள் பிரிக்கப்பட்டு பல ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் சூறையாடப்பட்டுள்ளன.
இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.
இந்த வர்த்தக நிலையத்துக்குள் ஓடுகளைப் பிரித்து உள் இறங்கிய திருடர்கள் அங்கிருந்த சிகரெட் பண்டல்கள், சோடா, பிஸ்கட், பால்மா பைக்கற்றுக்கள் உட்பட பல ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்களைத் திருடிச் சென்றுள்ளனர்.
இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸில் வர்த்தக நிலைய உரிமையாளர் முறைப்பாடு செய்துள்ளார். (ச-250)


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் ஆறுமுகம் சிவநாயகம்

மண்ணில் 17.05.1936

விண்ணில் 13.09.2012

திதி: அபரபக்க துவாதசி



ஆண்டு ஒன்று ஆனபோதிலும்
ஆறவில்லை அப்பா! எம்துயர்
காலமெல்லாம் எம்மோடு
கலந்திருப்பீர்கள் என்றிருக்க
தனிமையில் எம்மையெல்லாம்
தத்தளிக்க விட்டுவிட்டு
காலனை சென்றுவிட்ட – உங்களை
காணாது தவிக்கின்றோம் நாமெல்லாம்
ஆண்டுகள் பல ஆனாலும் – உங்கள்
நினைவுகள் நெஞ்சில் நிறைந்திருக்க
வேண்டும் அப்பா.........
உங்கள் ஆத்மசாந்திக்காக எல்லாம்
வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இன்று (02.09.2013) திங்கட்கிழமை வளலாயில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஓராண்டு ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
சந்தை ஒழுங்கை, வளலாய் அச்சுவேலி.

A/L முடிந்துவிட்டது என்ன செய்யலாம்?
கவலையை விடுங்கள்! எம்முடன் இணையுங்கள்
தொழில் வாய்ப்பினைப் பெற்றிடுங்கள்
0710920920
www.nationjobbank.com

தேவை
யாழ்ப்பாணம், கொழும்பு பார்சல் சேவைக்கு கொழும்பில் வேலை செய்வதற்கு அனுபவம் உள்ளவர் தேவை.
(39400) 0771807672

வாழ்வில் உன்னதமான தருணங்களில் சிறந்த நிறுவனத்தை தெரிவு செய்வதன் மூலம் உங்கள் உயர்ந்த இலக்கை அடையுங்கள்.
After A/L... IT, English, Engineering
75% அனைவருக்கும் நேரடிக் கட்டணக் கழிவு
IT Diplomas
Information Technology
Hardware & Networking
Web Designing & Development
Video Production & Editing
Graphics Designing & Multmedia
Computerized Accounting
TAlly Accounting | AutoCAD
DMI COMPUTER EDUCATION

யாழில் முதற்தர ஆங்கில பயிற்சி மையத்தில் இருந்து
English Diploma
ஆங்கிலம் பேச, எழுத, வாசிக்க யாழில் பெருமளவு மாணவர்கள் தெரிவு செய்யும்
ஓரே ஒரு முழுமையான ஆங்கிலக்கற்கைநெறி.
வேலை வாய்ப்பு உத்தரவாதத்துடனான கற்கைநெறிகள்
புதிய பிரிவுகள் ஆரம்பம்
Batch i - 2/9/2013
Batch ii - 6/9/2013
Batch iii - 7/9/2013
Time 9.30 am.
முதலில் இணையும் 100 மாணவர்களுக்கு Pen drive அல்லது T-Shirt இனை இலவசமாக பெற்றுக்கொள்ளமுடியும்.
சர்வதேசத்தாலும், இலங்கை மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற் கல்வி ஆணைக்குழு (TVEC) ஆலும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம்
DMI COMPUTER EDUCATION
யாழ்ப்பாணம் No.113, கன்னாதிட்டி வீதி, (சயன்ஸ் ஹோல் அருகாமை) Tel.: 021-222 4403
நெல்லியடி M.M.V. வீதி, (மத்திய மகாவித்தியாலயம் முன்பாக) Tel. : 021-226 2470
சாவகச்சேரி No.174, கண்டி வீதி, (HNB வங்கி அருகில்) Tel. : 021-227 0775
சுன்னாகம் No.130, K.K.S. வீதி, (NSB வங்கி அருகில்) Tel. : 021-224 1970

# புராதன சின்னங்களாக 83 இடங்கள் பிரகடனம்

## வெளியாகியது வர்த்தமானி அறிவித்தல்

கொழும்பு, செப்.2


வடக்கு மாகாணத்திலுள்ள 83 இடங்கள் புராதன சின்னங்களாக அரசால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன.

இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் கடந்தவாரம் வெளியிடப்பட்டது.

சுமார் 170 புராதன சின்னங்கள் இந்த வர்த்தமானி அறி வித்தல் மூலம் தொல்பொருள் ஆய்வுக்குரிய இடங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன.

இவற்றில் 3 சின்னங்கள் வடக்கு மாகாணத்திலுள்ள மன் னார், முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா மாவட்டங்களில் அமைந்துள்ளன.

தாது கோபுரங்கள், தூண்கள், செங்கற் சுவர்கள், அடிக்கற்கள், கல்வெட்டுக்கள் மற்றும் பட வீடுகள் என்பன அமைந் துள்ள இடங்களே இவ்வாறு அறிவிக்கப்பட்டுள்ளன.



கிளிநொச்சி மற்றும் வவுனியா மாவட்டங்களில் தொல் பொருள் சின்னங்களை கண் டறிய மேலும் பல இடங்களில் ஆய்வுகள் செய்யப்பட வேண்டும் என்று தொல்பொருள் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் சேனாரத் திசநாயக்க தெரிவித்தார். (ச-400)

## சொத்துக்களை வெளியிடாவிட்டால்
# வாக்கெடுப்பு நிலையங்களுக்கு வேட்பாளர் செல்ல முடியாது

குருநாகல், செப். 2

மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் தங்கள் சொத்து விவரங்களை வெளியிடாவிட்டால் அவர்களுக்கு அபேட்சகர் அறிமுக அட்டை வழங்கப் படாததுடன், வாக்குகள் எண்ணப்படும் நிலையங்களுக்குச் செல்லவும் அனுமதி வழங்கப்படாது என்று தேர்தல்கள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தங்கள் சொத்து விவரங்களை வெளிப்படுத்தாத பல அபேட் சகர்கள் தேர்தல் பிரசார நடவடிக்கையால் தினமும் ஐந்து லட்சம் ரூபா வரை செல விட்டு வருகின்றனர்.

இந்தப் பணம்பதாதைகள், சுவரொட்டிகள், பத்திரிகை விளம்பரங்கள், இசைக்கச் சேரிகள், எரிபொருள், ஆதரவாளர்களுக்கான கொடுப் பனவு என செலவு செய்யப்பட்டு வருகிறது.

இவ்வாறு கோடிக்கணக்கான பணத்தைச் செலவு செய்து மாகாணசபை உறுப்பினராக வெற்றி பெற்றாலும் இவர்க ளுக்கு மாதாந்தம் கிடைப்பது 65,000 ரூபாய் மட்டுமே ஆகும்.

இதில் அலுவலர்களுக்கான சம்பளம், தொலைபேசிக் கட்டணம், எரிபொருள் செலவு என்பனவும் உள்ளடங்கும் என்று தேர்தல் செய்லகம் குறிப்பிட்டுள்ளது.

பிரதான கட்சிகளின் வேட்பா ளர்களும் தங்கள் சொத்து விவரங்களை வெளியிடா மைக்குக் காரணம் தாங்கள் பாவிக்கும் சொகுசு வாகனங்கள், ஆதரவாளர்களுக்கான செலவு போன்ற விடயங்கள் வெளிவரும் என்ற ரீதியிலே ஆகும் என்று கூறப்படுகிறது. (ச-200)

## டிசெ.10 ஜி.சீ.ஈ சாதாரணதர பரீட்சை

ஜி.சீ.ஈ சாதாரண தரப் பரீட்சை எதிர்வரும் டிசெம்பர் மாதம் 10 ஆம் திகதி முதல் 30ஆம் திகதி வரை நடைபெறும் என்று பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

எதிர்வரும் டிசெம்பர் மாதம் நடைபெறவுள்ள ஜி.சீ.ஈ சாதாரணதரப் பரீட்சைக்கு 5,80,110 பரீட்சார்த்திகள் தோற்றவுள்ளனர் என்று பரீட் சைகள் திணைக்களம் குறிப் பிட்டுள்ளது.

இவர்களுள் 3,84010 பரீட்சார்த்திகள் பாடசாலைகளிலிருந்து தோற்றுகின்றனர். நாடு முழு வதும் 4312 பரீட்சை நிலையங்களில் ஜி.சீ.ஈ சாதாரண தரப் பரீட்சை நடைபெறும். (ச)

# கேள்வி அறிவித்தல்

## குப்பிளான் விக்னேஸ்வரா சனசமூக நிலையம்
### ஒப்பந்த இல: ku/vcc/01 -
### குப்பிளான் இரு மாடிகள் கொண்ட சனசமூக நிலையம் அமைத்தல்- கட்டம் 1 (கீழ்த்தளம்)

01. தலைவர்- விக்னேஸ்வரா சனசமூக நிலையம்- அவர்கள் தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து கேள்வி பத்திரங்கள் கீழ் காட்டப்பட்டுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்ட கட்டட நிர்மாண வேலைகளுக்கு கோருகின்றார்.
02. தேசிய போட்டி கேள்விக்கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.
03. கேள்வி பெற தகுதியுடையவராவதற்கு தகுதிபெறும் கேள்விதாரர்கள் கறுப்புப் பட்டியலில் (Black list) சேர்த்துக்கொள்ளப்படாதவராகவும் அட்டவணையிற் காட்டியபடி பொருத்தமான தரத்தில் கட்டடம் அமைப்புக்கான இக்ராட் (ICTAD) பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.
04. தேவையான தகைமைகள் கேள்வி ஆவணம் பகுதி -04 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (schedule) பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.
05. 01.09.2013 இலிருந்து 20.09.2013 வரை குப்பிளான் வடக்கு கிராம அபிவிருத்தி சங்க மண்டபத்தில் வைத்து திங்கள் செவ்வாய் மற்றும் வியாழன் ஆகிய வேலைநாள்களில் மு.ப. 9.30 மணியிலிருந்து நண்பகல் 12.00 மணிவரை மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 2000.00 செலுத்தி கேள்விப்பபத்திரங்களை தகுதியான கேள்விதாரர் சனசமூக நிலைய செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். (Te.No - 0778002045)
06. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து தலைவர் விக்னேஸ்வரா சனசமூக நிலையம், குப்பிளான் எனும் முகவரிக்கு 20.09.2013 ஆம் திகதி மாலை 16.00 மணிக்கு முன்பதாக கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்படவேண்டும்.பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர்கள் அல்லது அவர்களது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
07. கேள்வியானது கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித்திகதியிலிருந்து 77 (எழுபத்தேழு) நாள்கள் 06.12.2013 வரையும் செல்லுபடியாகும்.
08. கேள்விப் பிணை வைப்புத்தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| ஒப்பந்த இலக்கம் | வேலை விவரம் | ஒப்பந்த காலம் | வேண்டப் படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|
| | | | | பிணை வைப்பு (ரூபா) | செல்லுபடி யாகும் காலம் |
| Ku/ VCC/01 | குப்பிளானில் இரு மாடிகள் கொண்ட சனசமூக நிலையம் அமைத்தல் கட்டம் - I, கீழ்த்தளம் | 04 மாதங்கள் | C7 அல்லது அதற்கு மேல் | 100,000.00 | 06.01.2014 |

09. கேள்விகள் திறப்பதற்கான முன்னோடிக்கூட்டம் கிராம அபிவிருத்தி சங்க மண்டபத்தில் 14.09.2013 ஆம் திகதி பி.ப16.00 மணிக்கு நடைபெறும். இக் கூட்டத்தில் ஆர்வமுள்ள ஒப்பந்தகாரர்கள் கலந்து கொள்ளமுடியும்.

தலைவர்,
விக்னேஸ்வரா சனசமூக நிலையம்,
குப்பிளான்.

(39396)

மணிவிழாக் காணும் நாயகியை வாழ்த்துகின்றோம்

Best Wishes
திருமதி
மரியஜெயமலர் அலோசியஸ்
B.A, P.G.D.E
(SLTS-I பகுதித்தலைவர்,தமிழ் பாட இணைப்பாளர்)
சேவைக்கால விவரம்
யா/ஏழாலை மத்திய மகா வித்தியாலயம் 03.06.1977 - 31.12.1979
யா/கோப்பாய் அரசினர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை 01.01.1980 - 15.07.1981
இ/கஹவத்த தமிழ் வித்தியாலயம் 16.07.1981 - 30.06.1989
யா/வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம் 01.07.1989 - 01.12.1993
யா/ஸ்ரீ முருகன் வித்தியாலயம் 02.12.1993 - 31.12.1994
யா/இணுவில் இந்துக் கல்லூரி 01.01.1995 - 31.12.2002
யா/வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம் 01.01.2003 - 02.09.2013
36 வருட ஆசிரிய சேவையை செவ்வனே செய்து இன்றுடன் ஓய்வுபெறும் எமது ஆசிரியையை சீரும் சிறப்புமாக நீடுழி காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்.
பாடசாலைச் சமூகம்
யா/ வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம், வயாவிளான்.
(39397)(10,14)

# வடக்கில் சமுர்த்தி விழிப்புணர்வுக்காக தென்னிலங்கை வளவாளர்கள்

வலி.வடக்கு, செப். 2

சமுர்த்தி தொடர்பான விழிப்புணர்வை வட மாகாணத்தில் உள்ள 5 மாவட்டங்களான வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாணத்தில் ஏற்படுத்தும் வகையில் சமுர்த்தி அதிகார சபையின் அறிவுறுத்தலுக்கு அமைவாக இம் மாவட்டங்களுக்கு குறிப்பிட்ட வளவாளர்கள் தனித் தனியாக தென்னிலங்கையில் இருந்து அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

ஏற்கனவே சமுர்த்தி செயற்றிட்டம் தென்னிலங்கையை விட நல்லமுறையில், யாழ். மாவட்டம் உட்பட வவுனியாவில் நடைபெற்று வருவதுடன் ஏனைய மாவட்டங்களான கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் மன்னாரில் கடந்த நான்கு மாதங்களுக்குள் தான் சமுர்த்தி செயற்றிட்டமே மேற் கொள்வதற்கான சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் நியமனம் செய்யப்பட்டு கடமைகளை ஆரம்பித்தும் உள்ளனர்.

வட மாகாண சபைத்தேர்தல் நடைபெற இன்னும் 20 தினங்கள் இருக்கும் நிலையில் தேர்தல் நடைபெறும் மாவட்டங்களில் தென்னிலங்கையில் இருந்து கொண்டு வரப்பட்டவர்களைக் கொண்டு இங்கு எத்தகைய பிரசார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன என பலரும் சந்தேகம் தொவித்துள்ளனர். (வ-86)

## முதலாம் பக்கத் தொடர்ச்சி

### சர்வதேச போர்க்குற்ற விசாரணை இலங்கை சந்தித்தேயாக வேண்டும்

காணாமறபோனோரின் விவரங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இது கோத்தாவுக்கும் தெரியும். இந்நிலையில், காணாமற்போனோர் தொடர்பான விவரங்கள் இருந்தால் அதனைத் தம்மிடம் தருமாறு நவநீதம்பிள்ளைக்கு கோத்தபாய சவால் விடுத்துள்ளார்.

இந்தச் சவாலால் இலங்கை அரசுக்கு எந்தவிதப் பயனும் ஏற்படப்போவதில்லை. உண்மை நிலைவரம் நவநீதம்பிள்ளைக்கு மட்டுமல்ல, சர்வதேச சமூகத்துக்கே தெரியும்.

கோத்தா மறதிக்குணம் உடையவர். அவர் ஒரு பைத்தியக்காரர். இதனால் தான் அவர் நவநீதம்பிள்ளையிடம் இவ்வாறு கேட்டுள்ளார். ஐ.நா. மனித உரிமை ஆணையாளரை இலங்கைக்கு அழைத்த அரசு, அவரை அநாகரிகமான முறையில் நடத்தியுள்ளது. அவர் வந்த நாளன்றே ஜனாதிபதி மஹிந்த வெளிநாட்டுக்கு ஓடியுள்ளார்.

அதேவேளை, நவநீதம்பிள்ளையை கடுமையாக விமர்சித்த அமைச்சரான மேர்வின் சில்வா அவரைத் திருமணம் செய்ய விரும்புவதாகவும் நையாண்டி பண்ணியுள்ளார். இதனால், சிங்கள மக்களுக்கு மட்டுமல்ல, நாட்டுக்கே பெரும் அவமானம் ஏற்பட்டுள்ளது. அமைச்சர் மேர்வினின் கருத்துக்கு தனது கடும் கண்டனத்தை அரசிடம் நேரடியாகத் தெரிவித்துள்ளார் நவநீதம்பிள்ளை.

போர்க்குற்றங்கள் தொடர்பில் சர்வதேச விசாரணையை இறுதியில் இலங்கை அரசு எதிர்கொண்டே தீரும். இந்த நம்பிக்கையை நவநீதம்பிள்ளையின் வருகை அதிகப்படுத்தியுள்ளது. உள்ளூர் விசாரணைகளில் எமக்கு நம்பிக்கை இல்லை என்று நவநீதம்பிள்ளையை நாம் கொழும்பில் சந்தித்தபோதே தெரிவித்துவிட்டோம்" - என்றார். (ங-சி)

### வடக்கில் இந்திய புலனாய்வாளர்கள்

யைக் கடந்து வடக்கு நோக்கிப் பயணிக்கின்றனர்.

இவ்வாறு நாட்டுக்குள் உட்பிர வேசிக்கும் வெளிநாட்டுக் குழு வினர் மற்றும் வெளிநாட்டு ஊடகவியலாளர்கள், இலங்கை அரசுக்கும் இலங்கைக்கும் எதிராக சில நடவடிக்கைகளை முன்னெடுக்க நேரம் கணித்துக்கொண்டிருக்கின்றனர்.

இதற்கு மேலதிகமாக வர்த்தக நோக்கத்துடன் வடக்குக்குவரும் இந்தியர்கள், சுற்றுலா விசா வில் வருகின்றனர்.

இவர்களது வர்த்தகம் லாப நோக்கம் அற்றது. இவர்கள் இந்திய புலனாய்வு அதிகாரி கள். வடக்கில் நிலவரத்தைக் கண்டறிவதற்காக வர்த்தகர்கள் என்ற போர்வையில் வந்து செல்கின்றனர்.

அதனால், இவ்வாறானவர்கள் ஓமந்தை சோதனைச் சாவடி யைக் கடந்து செல்லும் போது மிகக் கவனமாக சோதனையிடப்பட வேண்டும்-என்று குறிப்பிட்டுள்ளார். (ஐ)

### இராணுவத்தை அகற்ற நவிக்கு என்ன அதிகாரம்?

அந்த அமைப்பைச் சேர்ந்த வசந்த பண்டார கருத்து வெளியிடும் போது,

"நவநீதம்பிள்ளை கட்டாயம் சர்வதேச போர்க் குற்ற விசாரணையை வலியுறுத்தியே வருவார். அதற்கமையவே அவரது நிகழ்ச்சி நிரல் அமைந்துள்ளது. தற்போதே அவரின் திட்டங்கள் அம்பலமாகியுள்ளன. எனவே அரசு நவநீதம்பிள்ளை குறித்து மிகவும் அவதானமாக செயற்படவேண்டும்" - என்றார். (ங-சி)

### சூடு பிடிக்கும் தேர்தல் களம் வடக்கில் பிரசாரம் தீவிரம்

தேசியக் கூட்டமைப்பும் மூன் றில் இரண்டு பெரும்பான்மையோடு வெல்வதற்கான நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

இந்த நிலையில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேர்தல் பிரச்சார நடவடிக்கையில் வடக்குக்கு ஜனாதிபதி வரவுள்ளார். அவர் தலைமையில் அரச தரப்பு வேட்பாளர்களுக்கான பிரசாரக் கூட்டங்கள் 9ஆம் திகதி வவுனி யாவில் நடைபெறுள்ளது. தொடர்ந்து அதக் கட்சி யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார் ஆகிய மாவட்டங்களிலும் ஜனாதிபதியின் பங்களிப்புடன் பிரதான பரப்புரைக் கூட்டங்களை நடத்தவுள்ளது. பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி எதிர்வரும் 10ஆம் திகதி முதல் வடக்கில் பிரசாரக் கூட்டங்களை நடத்த ஏற்பாடு செய்துள்ளது. இக் கூட்டங்களுக்கு கட்சித்தலைவர் ரணில் விக்கிரம சிங்க தலைமைவகிப்பார். இதே வேளை வடக்கின் பல பாகங்க ளிலும் கூட்டமைப்பினரும்பிரமாண்டமான பிரசாரக் கூட்டங்களை ஒழுங்கு செய்துள்ளனர் என்று தெரியவருகிறது. (ங-சி)

# சர்வதேச விசாரணை 2014 இல் நிச்சயம்

## ஐ.தே.க. கட்டியம்

கொழும்பு, செப். 2

இறுதிப்போர் குறித்து சுயாதீனமான உள்ளக விசாரணை இன்றேல் சர்வதேச விசாரணைக் கோரிக்கை தொடரும் என ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் தெரிவித்துள்ள நிலையில், சர்வதேச விசாரணையே இதற்கு ஒரே தீர்வு என பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்தது.

இந்தச் சர்வதேச சுயாதீன விசாரணை எதிர்வரும் மார்ச் மாதத்தின் பின்னர் நடத்தப்படுவது உறுதி. அதில் மாற்றமேயில்லை என அக்கட்சியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப் பினரும் முன்னாள் வெளிவிவகாரப் பிரதி அமைச்சருமான லக்ஷ்மன் கிரியெல்ல 'உதயனி'டம் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐக்கிய நாடுகள் சபையிடம் உள்நாட்டு விவகாரங்களை முறையிட்ட முதல் அரசியல்வாதி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷதான். 1988, 89ஆம் ஆண்டுகளில் இவர் ஐ.நா சென்றது நல்லது. ஆனால் தற்போது மற்றவர்கள் இலங்கை தொடர்பில் ஐ.நாவிடம் முறையிடுவது தவறு, ஐ.நா. பக்கச்சார்பாகச் செயற்படுகிறது என்றெல்லாம் கூறுகிறார் ஜனாதிபதி. இதை எம்மால் ஏற்றுக் கொள்ளமுடியாது.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை கூறியதற்கு அமைய செயற்பட வேண்டியது அரசின் பொறுப்பு. ஐ.நாவுடன் பேச்சு நடத்தி பிரச்சினைக்குத் தீர்வுகாண அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும். ஆனால் அரசு அதைச் செய்யாது. அதற்கு அந்த நோக்கமும் கிடையாது.

இறுதி போர் தொடர்பில் அரசு மேற்கொள்ளும் உள்ளக விசாரணை சர்வதேச தரத்திற்கு ஏற்றதாக அமையாது. உண்மைத் தன்மையும் இருக்காது. எனவே, சர்வதேச நாடுகள் இதை ஏற்காது. அதனால் அடுத்த மார்ச் மாதத்தின் பின்னர் இலங்கை தொடர்பில் சர்வதேச விசாரணை நடத்தப்படுவது உறுதியாகும்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட அரசு தமக்கு அளித்த உறுதிமொழிகளை நிறைவேற்ற வேண்டும் என்றே ஐ.நா.சபை கூறுகின்றது. புதிதாக அது வேறொன்றும் கூறவில்லை. ஐ.நா.சபையுடன் அரசு இணங்கிச் செயற்படாவிட்டால் நாட்டுக்கு ஆபத்து ஏற்படும் என்பதே எமது கவலையாகும். அதனால்தான் ஐ.நாவுடன் இணங்கிச் செயற்படுமாறு அரசிடம் வலியுறுத்துகிறோம் - என்றார் கிரியெல்ல எம்.பி.


## மரண அறிவித்தல்

### சங்கரப்பிள்ளை நாகராஜா (தம்பி அண்ணை)



சாவகச்சேரி தபால்நிலைய வீதியைச் சேர்ந்த பிரபல மரக்காலை உரிமையாளர் சங்கரப்பிள்ளை நாகராஜா (தம்பி அண்ணை ) நேற்று (01.09. 2013) ,ஞாயிற்றுக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை- பாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான நாராயணச்சாமி-ஈஸ்வரியம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், செல்வத்தின் அன்புக் கணவரும், கஜன்(ஆசிரியர், அரியாலை பாரதி மகா வித்தியாலயம்), நிசாந்தன் (ஸ்ரார் ரெஸ்ரோரன்ட், பரந்தன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.09.2013) செவ்வாய்க்கிழமை மு.ப. 11.00மணிக்கு சாவகச்சேரி தபால் நிலைய வீதியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தபால் நிலைய வீதி,
சாவகச்சேரி.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்

### கயிலாயபிள்ளை சிவலிங்கம்



அச்சுவேலி கதிரிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கயிலாயபிள்ளை சிவலிங்கம் நேற்று (01.09.2013) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கயிலாயபிள்ளை -அன்னம்மா தம்பதியரின் அன்பு மக னும், காலஞ்சென்ற ஐயம்பிள்ளை - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், தேவகுஞ்சரத்தின் அன்புக் கணவரும், மதுரைநாயகி, ஸ்ரீரங்கம், திருப்பதி, காலஞ்சென்ற திருச்செல்வம் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்வும்.

கதிரிப்பாய், அச்சுவேலி.
021 320 9442, 077 5880162

தகவல்: குடும்பத்தினர்.
(சி. தேவகுஞ்சரம் - மனைவி)

## மரண அறிவித்தல்

"கிறிஸ்து எனக்கு ஜீவன் சாவு எனக்கு ஆதாயம்" (பிலிப் : 1-21)

### சின்னத்துரை இலட்சுமி (மரியாள்)



சுதுமலை தெற்கு மானிப்பாயைச் சேர்ந்த சின்னத்துரை இலட்சுமி நேற்று (01.09.2013 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (02.09.2013) திங்கட்கிழமை மு.ப. 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தாவடி கிறிஸ்தவ மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஐங்கரன் வீதி,
சுதுமலை தெற்கு,
மானிப்பாய்.

தகவல்:
சந்திரன் குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### ஐயம்பிள்ளைகுருக்கள்-சிவப்பிரகாசம் ஐயர்



கீரிமலையைப் பிறப்பிடமாகவும், கோண்டாவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட ஐயம்பிள்ளை குருக்கள் சிவப்பிரகாசம் ஐயர் நேற்று (01.09.2013) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் ஐயம்பிள்ளைக் குருக்கள்- மனோன்மணி தம்பதியரின் மகனும், சுப்பையா-நல்லம்மா தம்பதியரின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் சமாதிக்கிரியைகள் இன்று (02.09.2013) திங்கட்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரின் இல் லத்தில் நடைபெற்று, பூதவுடல் நல்லடக்கத்துக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கார்த்திக் பந்தல்,
கே.கே.எஸ் வீதி, கோண்டாவில் மேற்கு.

தகவல்:
குடும்பத்தினர்.
(39399) (10,16,14)

## மரண அறிவித்தல்

### கணவதிப்பிள்ளை ஸ்ரீநிவாசன்



தையிட்டி மூர்த்தி வீதியைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில் நெட்டிலிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப் பிள்ளை ஸ்ரீநிவாசன் நேற்றுமுன்தினம் (31.08.2013) சனிக்கிழமை அகாலமரண மடைந்தார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.09.2013) திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில்அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனத்துக்காக காரைக் கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செலலப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தபால் நிலைய வீதி,
சாவகச்சேரி.

தகவல்: பொ. பவானந்தன்
(தபால் ஊழியர்)

உதயன்
02/09/2013

## இன்றைய ஆட்டங்கள்

கைதடி, செப்.2
யாழ்.மாவட்ட தாச்சிச் சங்கத்தின் அனுமதியுடன் நாவற்குழி சரஸ்வதி விளையாட்டுக் கழகம் யாழ்.மாவட்ட ரீதியிலும் தென்மராட்சி ரீதியிலும் மின்னொளியில் நடத்தி வரும் தாச்சிச் சுற்றுப் போட்டியிலே இன்று திங்கட்கிழமை மோதவுள்ள கழகங்கள்:

தென்மராட்சி
ஸ்கதடி வளர்மதி வி.க. எதிர் மறவன்புலோ வெண்ணிலா வி.க.

யாழ்.மாவட்டம்
உடுவில்வைகரை வி.க. எதிர்மயிலிட்டி கலைமகள் வி.க. (ற-288)

---

யாழ்ப்பாணம்,செப்.2
பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் கம்பர் மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று திங்கட்கிழமை இடம்பெறவுள்ள ஆட்டத்தில் மோதவுள்ள அணிகளின் விவரம்.

பி.ப. 3 மணி
ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகம் எதிர் திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகம். (ற-23-422)

---

யாழ்ப்பாணம்,செப்.2
யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரில் இன்று திங்கட்கிழமை உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறும் ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரம்:

பி.ப. 3.45 மணி
சக்கோட்டை சென்.சேவியர் விளையாட்டுக் கழகம் எதிர் அராலி திருமகள் விளையாட்டுக் கழகம்.

பி.ப. 4.45 மணி
ஆனைக்கோட்டை கலைஒளி விளையாட்டுக் கழகம் எதிர் கரவெட்டி நவசக்தி விளையாட்டுக் கழகம். (ற-23)

---

யாழ்ப்பாணம், செப்.2
பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் அனுமதியுடன் நவசக்தி விளையாட்டுக் கழகம் 50 ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரில் இன்று திங்கட்கிழமை இடம்பெறவுள்ள ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரம்

பி.ப.4 மணி
கொலின்ஸ் வி.க. 'ஏ' அணி எதிர் சிறிஅம்பாள் வி.க. அணி

பி.ப. 4.45
நியூட்டன் வி.க. 'பி' அணி எதிர் விண்மீன் 'ஏ' மணி. (ற-422)

---

யாழ்ப்பாணம், செப்.2
யாழ் உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக் கழகம் நடத்தும் 7பேர் பங்கு கொள்ளும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச்சுற்றுத் தொடரில் இன்று திங்கட் கிழமை கழக மைதானத்தில் இடம் பெறவுள்ள ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரம்.

பி.ப 3.45 மணி அரியாலை ஐக்கியம் விளையாட்டுக் கழகம் எதிர் அராலி திருக்குமரன் விளையாட்டுக் கழகம்.

பி.ப 4.45 மணி
பொற்பதி விளையாட்டுக் கழகம் எதிர் மைக்கல் விளையாட்டுக் கழகம். (ற-23)

# ஜொனியன்ஸிடம் வீழ்ந்தது ஜொலிஸ்ரார்

யாழ்ப்பாணம்,செப்.2
யாழ்.மாவட்ட கிரிக்கெட் சங்கம் நடத்தி வரும் ஸ்ரீலங்கா கிரிக்கெட் பிரிவு III க்கான யாழ்.மாவட்ட அணியைத் தெரிவு செய்யும் கிரிக்கெட் சுற்றுத் தொடரில் நேற்று முன்தினம் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் இடம் பெற்ற காலிறுதியாட்டத்தில் ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழக அணி 8 இலக்குகளால் வெற்றி பெற்றது.

ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழக அணிக்கும் ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழக அணியினர் 30.3 பந் துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 123 ஓட்டங்களைப் பெற்றது.

அதில் பிரசன்னா 27 ஓட்டங்களையும், பகீரதன் 28 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழக அணி சார்பில் சிறிதரன் 8.3 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 31 ஓட்டங்களுக்கு 4 இலக்குகளையும், காண்டீபன் 9 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 27 ஓட்டங்களுக்கு ஓர் இலக்கினையும், துவாரகசீலன் 7 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 22 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும் வீழத்தினர்.

124 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் துடுப்பெடுத்தாடிய ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழக அணியினர் 14.5 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 2 இலக்குகளை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

அன்புஜன் 27 ஓட்டங்களையும், கிரிஷாந் 33 ஓட்டங்களையும், காணாமிர்தன் ஆட்டம் இழக்காமல் 21 ஓட்டங்களையும், துவாரகசீலன் ஆட்டம் இழக்காமல் 20 ஓட்டங்களையும் தமது அணிசார்பாக பெற்றனர்.

பந்துவீச்சில் ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழக அணி சார்பில் சாரங்கன் 3 பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி 12 ஓட்டங்களுக்கு ஓர் இலக்கை வீழ்த்தினார். (ற-23)

## இறுதியில் மோதுகின்றன றோயல், மைக்கல்



யாழ்ப்பாணம், செப்.2
யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் நவாலி சென். பீற்றர்ஸ் விளையாட்டுக் கழகம், நேசராஜா ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் அரையிறுதியாட்டங்களில் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகம் சென்.மைக்கல் விளையாட்டுக் கழகம் ஆகியவை வெற்றி பெற்று இறுதியாட்டத்திற்கு தகுதி பெற்றுள்ளது.

நேற்று இடம்பெற்ற முதலாவது அரையிறுதியாட்டத்தில் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழக அணிக்கும் அண்ணா ஸ்ரார் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழக அணி 4:0 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டத்திற்கு தகுதி பெற்றுள்ளது.

இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் சென்.மைக்கல் விளையாட்டுக்கழக அணிக்கும் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் சென்.மைக்கல் விளையாட்டுக் கழக அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டத்திற்கு தகுதி பெற்றது. (ற-23)

# சம்பியனானது யங்ஸ்ரார்

யாழ்ப்பாணம், செப். 2
வவுனியா மாவட்ட கிரிக்கெட் சங்கம் தனது அங்கத்துவக் கழகங்களுக்கு இடையே பிரிவு III இற்காக நடத்திய கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட் டத்தில் யங்ஸ்ரார் விளையாட் டுக் கழக அணி வெற்றி பெற்று சம்பியன் ஆனது.

நேற்றுமுன்தினம் சனிக்கிழமை வவுனியா நகரசபை மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் யுனிபைட் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யுனிபைட் விளையாட்டுக் கழக அணியினர் 34.5 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 135 ஓட்டங்களைப் பெற்றது.

டினேஸ் 27 ஓட்டங்களையும், கஜன் 22 ஓட்டங்களையும், நிதர்சன் 22 ஓட்டங்களையும், மிதுலன் 14 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.



பந்துவீச்சில் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி சார்பில் தீபன் 10 பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி 45 ஓட்டங்களுக்கு 4 இலக்குகளையும், ஜனார்த்தனன் 8.5 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 24 ஓட்டங்களுக்கு 4 இலக்குகளையும் கிரிதரன் 8 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 35 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.

136 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி 29.5 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 7 இலக்குகளை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

இதில் மயூரன் 44 ஓட்டங்களையும், சொரூபன் 19 ஓட்டங்களையும், தசசீதரன் 11 ஓட்டங்களையும் தமது அணி சார் பாக பெற்றனர்.

பந்துவீச்சில் யுனிபைட் விளையாட்டுக் கழக அணி சார்பில் சக்தி 6 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 22 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும், கோகில ராஜ் 10 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 32 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும் வீழ்த்தி னர்.

ஆட்டநாயகன் விருதை யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக வீரன் மயூரன் பெற்றுக் கொண்டார். தொடர் ஆட்டநாயகன் விருதை யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக வீரன் தசசீதரன் பெற்றுக்கொண்டார்.

சிறந்த துடுப்பாட்டத்துக்கான விருதை உஷாந்தனும், சிறந்த பந்து வீச்சாளருக்கான விருதை ஜனார்த்தனனும் பெற்றுக் கொண்டனர். (ற-23)

# வாகை சூடியது வள்ளுவர்

யாழ்ப்பாணம், செப்.2
யாழ்.மாவட்ட தாச்சிச் சங்கத்தின் அனுமதியுடன் இணுவில் அறிஞர் விளையாட்டுக் கழகம் யாழ்.மாவட்ட ரீதியில் நடத்திய தாச்சிச் சுற்றுப் போட்டியிலே ஆலடி சிந்து விளையாட்டுக் கழகத்தை வீழ்த்தி மயிலிட்டி வள்ளுவர் விளையாட்டுக்கழகம் வெற்றிக் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது.

தொடரின் இறுதிச் சுற்றில் ஆலடி சிந்து விளையாட்டுக் கழகமும் மயிலிட்டி வள்ளுவர் விளையாட்டுக்கழகமும்மோதின. போட்டியின் தொடக்கம் முதல் இடைவேளை வரை இரு கழகங்களும் சம பலத்துடன் மிக ஆக்ரோசமாக மோதிக் கொண்டன. இடைவேளைக்காக ஆட்டம் நிறுத்தப்படும்போது இரு கழகங்களும் தலா மூன்று புள்ளிகளை எடுத்தன.

இடைவேளையின் பின் போட்டி மீண்டும் ஆரம்பமானதும் இரு கழகங்களும் ஒவ்வொரு புள்ளியையும் பெற மீண்டும் சம நிலையாகின. ஆனாலும் வள்ளுவர் விளையாட்டுக்கழகம் நேரம் முடிவுறும் தறுவாயிலும் தொடர்ந்து மூன்று புள்ளிகளை மிக வேகமாக எடுத்து ஆலடி சிந்து விளையாட்டுக்கழகத்தை7:4 என்ற புள்ளிகள் அடிப்படையில் வென்று வெற்றிக் கிண்ணத்தைதனதாக்கிக்கொண்டது. இந்த ஆட்டத்தில்முதலிடத்தை வள்ளுவர் விளையாட்டுக் கழகமும் இரண்டாம் இடத்தை சிந்து விளையாட்டுக்கழகமும்பெற்றது.

இறுதிச் சுற்றின் சிறப்பு நாயகனாக 'மயிலிட்டி வள்ளுவர் விளையாட்டுக்கழகத்தை சேர்ந்த மோ.விவேக் தெரிவு செய்யப்பட்டார்.

இறுதிப் போட்டிக்கு நடுவர்களாக யாழ்.மாவட்ட தாச்சி விளையாட்டு நடுவர் சங்கத்தை சேர்ந்த வை.ஆனந்த கேஸ்கரனும், க.ஜினதாசும் கடமை புரிந்தார்கள். (ற-288)

# உதைபந்தாட்ட போட்டி முடிவுகள்

மாங்குளம், செப்.2
பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் நவசக்தி விளையாட்டுக் கழகம் தமது 50ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தி வரும் உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரில் நேற்று இடம்பெற்ற ஆட்டங்களில் திக்கம் இளைஞர் அணி, நியூட்டன் 'ஏ' அணி என்பன வெற்றிபெற்றன.

வதிரி பொமர்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்துகொற்றாவத்தைறேஞ்சர்ஸ் அணி களமிறங்கியது.

ஆட்டம் தொடங்கியதிலிருந்து ஆதிக்கம் செலுத்திய திக்கம் இளைஞர் அணி 8:2என்ற கோல் வித்தியாசத்தில் மிக இலகுவாக வெற்றியீட்டியது.

மற்றைய ஆட்டத்தில் உடுப்பிட்டி யுத் அணியை எதிர்த்து நியூட்டன் 'ஏ' அணி மோதியது. இடைவேளைக்கு முன்னர் ஆதிக்கம் செலுத்திய நியூட்டன் 'ஏ' அணி 2:0 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தது. இடைவேளையின் பின்னர் ஆட்ட வியூகத்தை மாற்றிய உடுப்பிட்டி யுத் இரு கோல்களைப் போட ஆட்டநேர முடிவில் இரு அணிகளும் 2 கோல்களைப் பெற்றதால் சமநிலை தவிர்ப்பு உதைப்பின் மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது. அதில் நியூட்டன் ஏ அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு தகுதி பெற்றது. (ற-422)

---

யாழ்ப்பாணம்,செப்.2
மட்டுவில் ஐங்கரன் விளையாட்டுக் கழகம் யாழ்.மாவட்ட ரீதியாக மின்னொளியில் நடத்தும் கரப்பந்தாட்டச் சுற்றுத் தொடரில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற ஆட்டம் ஒன்றில் மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றது.

மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக் கழக அணிக்கும் நாயன்மார்கட்டு பாரதி விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக் கழக அணி 2:1 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றது. (ற-23)

---

யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரில் நேற்று முன்தினம் சனிக்கிழமை [illegible] உரும்பிராய் இந்துக் க[illegible] மைதானத்தில் இ[illegible] ஆட்டத்தில் விண்மின்[illegible]ட்டுக் கழக அணி வெற்றி பெற்றது.

விண்மின் விளையாட்டுக் கழக அணிக்கும் அராலி மாவத்தை விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் விண்மின் விளையாட்டுக் கழக அணி 7:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ற-23)

# அரையிறுதிக்கு தெரிவானது சென்றலைட்ஸ்

யாழ்ப்பாணம், செப்.2
யாழ்.மாவட்ட கிரிக்கெட் சங்கம் நடத்தும், ஸ்ரீலங்கா கிரிக்கெட் பிரிவு III இற்கான யாழ். மாவட்ட அணித்தெரிவு கிரிக்கெட் சுற்றுத் தொடரில் கடந்த வாரம் இடம்பெற்ற காலிறுதியாட்டம் ஒன்றில் சென்றலைட்ஸ் விளை[illegible]க்கழக அணி 3 இலக்கு[illegible] வெற்றி [illegible].

கடந்த வாரம் வ[illegible]க்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற காலிறுதியாட்டத்தில் சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து யூனியன் விளையாட்டுக்கழக அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யூனியன் விளையாட்டுக் கழக அணி 42.1 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 9 இலக்குகளை இழந்து239ஓட்டங்களைபெற்றது.


இதில் ஜோன்சன் 32 ஓட்டங்களையும், விஜிதாகரன் 21 ஓட்டங்களையும், ஆகீசன் 79 ஓட்டங்களையும், ரகுபதி 23 ஓட்டங்களையும் தமது அணி சார்பாக பெற்றனர்.

பந்து வீச்சில் சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழக அணி சார்பாக மயூரன், அலன்ராஜ் ஆகியோர் தலா 2 இலக்குகளையும், செல்ரன் 4 இலக்குகளையும், கோகுலன் ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

240 ஓட்டங்களை பெற்றால் வெற்றி என்ற நிலையில் பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழக அணி 39.2 பந்து பரிமாற்றங்கள் நிறைவில் 7 இலக்குகளை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

ஸ்ரீபன் 32 ஓட்டங்களையும், டினேயன் 17 ஓட்டங்களையும், அலன்ராஜ் 4[illegible]ட்டங்களையும், கனிஸ்[illegible]ட்டங்களை[illegible] மயூர[illegible]ட்டங்களையும், செல்ரன் [illegible] ஓட்டங்களையும்தமது அணிசார்பாகபெற்றனர்.

பந்து வீச்சில் யூனியன் விளையாட்டுக்கழக அணிசார்பாக தனு, கபில்ராஜ் சதீஸ், ஆகீசன், பிரசாந் ஆகியோர் தலா ஓர் இலக்கினையும் பிரசன்னா 2 இலக்கினையும் வீழ்த்தினர். (ற-23)




# சாய்னாவின் அணி சம்பியன்

இந்தியன் பூப்பந்து லீக் தொடரில் சாய்னாவின் ஐதராபாத் ஹொட் ஷொட்ஸ் அணி, சிந்துவின் அவாத் வோரியர்ஸ் (லக்னோ) அணியை வீழ்த்தி சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றியது.
இந்தியன் பிறிமியர் லீக் (ஐ.பி.எல்), இந்தியன் ஹொக்கி லீக்கைத் (ஐ.ஹெச்.எல்) தொடர்ந்து இந்தியாவின் முக்கிய நகரங்களில் முதலாவது இந்தியன் பூப்பந்து லீக் (ஐ.பி.எல்..) தொடர் நடைபெற்றது.
மும்பையில் நேற்று நடந்த இறுதிச் சுற்றில் சாய்னா நெஹ்வாலின் ஐதராபாத் ஹொட் ஷொட்ஸ் அணி, சிந்து வழிநடத்தும் அவாத் வோரியர்ஸ் அணியை எதிர்கொண்டது.
ஆடவர் பிரிவில் முதல் ஒற்றையர் ஆட்டத்தில் அவாத் வோரியர்ஸ் அணியின் ஸ்ரீகாந்த் 21:12, 21:20 என்ற நேர் செற் கணக்கில் ஐதராபாத்தின் டனாங்சக்கை வீழ்த்தினார்.
மகளிர் ஒற்றையரில் ஐதராபாத் அணியின் சாய்னா நெஹ்வால் 21:15, 21:7 என்ற நேர் செற் கணக்கில் அவாத் வோரியர்ஸ் அணியின் சிந்துவை தோற்கடித்தார். இதனையடுத்து போட்டி 1:1 என சமநிலை அடைந்தது.
அடுத்து நடந்த ஆடவர் இரட்டையரில் ஐதராபாத் அணி, அவாத் வோரியர்ஸ் அணியை வீழ்த்தி 2:1 என்று முன்னிலை வகித்தது.
அதன் பின்னர் நடந்த விறுவிறுப்பான ஆடவர் ஒற்றையர் இரண்டாவது ஆட்டத்தில் ஐதராபாத் அணியின் அஜய் ஜெயராம், அவாத் அணியின் குருசாய்தத்தை 10:21, 21:17, 11:7 என்ற செற் கணக்கில் வீழ்த்தினார்.
அதன் மூலம் ஐதராபாத் அணி 3:1 என புள்ளிகள் அடிப்படையில் அவாத் அணியை வீழ்த்திக் கிண்ணத்தைக் கைப்பற்றியது. (ற)


# நிச்சயம் தேவை சகீர் கான்

தென்னாபிரிக்க சுற்றுப்பயணத்தின் போது சகீர் கானை நிச்சயம் தெரிவு செய்ய வேண்டும் என்று முன்னாள் வேகப்பந்து வீரரான பலவீந்தர் சிங் சாந்து வலியுறுத்தி உள்ளார்.
உடல் தகுதியின்மை மற்றும் மோசமான பந்துவீச்சு காரணமாக அண்மைக் காலமாக இந்திய அணியில் இருந்து ஓரங்கட்டப்பட்டுள்ளார் முன்னணி வேகப்பந்து வீரர்களில் ஒருவரான சகீர் கான்.
இந்நிலையில் தென்னாபிரிக்க சுற்றுப்பயணத்தின் போது சகீர் கானை தெரிவு செய்ய வேண்டும் என முன்னாள் வேகப்பந்து வீரரும், மும்பை பயிற்சியாளருமான பலவீந்தர்சிங் சாந்து வலியுறுத்தி உள்ளார்.
இதுகுறித்து அவர் கூறுகையில்,
"நல்ல ஆட்டத்திறனுடன் உள்ள இளம் வீரர்களுக்கு வாய்ப்பு கொடுக்க வேண்டும். சகீர் கான் அனுபவம் வாய்ந்த பந்துவீச்சாளர். புத்திசாலித்தனமாக பந்துவீசக் கூடிய அவர் தென்னாபிரிக்க சுற்றுப்பயணத்துக்கு கண்டிப்பாக தேவை. அதன் மூலம் அவரது திறமையை வெளிப்படுத்த முடியும்" என்று தெரிவித்துள்ளார்.
1983ஆம் ஆண்டு இந்திய அணி உலக கிண்ணத்தை வென்ற போது பலவீந்தர் சிங் சாந்து அணியில் இடம்பெற்று இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ற)




# பயிற்சிகளில் இறங்கினார் சச்சின் டெண்டுல்கள்

சம்பியன்ஸ் லீக் '20/20' தொடரில் மும்பை இந்தியன்ஸ் அணிக்காக சச்சின் டெண்டுல்கர் விளையாட உள்ளார். அதையடுத்து அதற்கான பயிற்சிகளை ஆரம்பித்துள்ளார் டெண்டுல்கார்.
சம்பியன்ஸ் லீக் '20/20' தொடரில், ஐ.பி.எல் .அணிகளான மும்பை இந்தியன்ஸ், சென்னை சூப்பர் கிங்ஸ், ராஜஸ்தான் றோயல்ஸ் அணிகள் உட்பட 10 அணிகள் பங்கேற்கின்றன. இதில் மும்பை அணிக்காக சச்சின் விளையாட உள்ளார்.
ஐ.பி.எல். தொடரில் விளையாடியபோது கையில் காயம் அடைந்த சச்சின், அதற்கு அறுவை சிகிச்சை செய்துகொண்டு ஓய்வெடுத்து வந்தார். இந்த நிலையில் சம்பியன்ஸ் லீக் ஆட்டங்களுக்காக நேற்றிலிருந்து தீவிர பயிற்சி மேற்கொண்டுள்ளார்.
ஐ.பி.எல். தொடரில் இருந்து ஓய்வு பெறுவதாக ஏற்கனவே அறிவித்துவிட்ட நிலையில், இதுவே அவர் விளையாடும் கடைசி '20/20' தொடராக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.(ற)



# சிதறியது சிம்பாப்வே தொடர் பாக். வசம்



சிம்பாப்வேக்கு எதிரான 3ஆவது மற்றும் இறுதி ஒருநாள் கிரிக்கெட் ஆட்டத்தில் 108 ஓட்ட வித்தியாசத்தில் பாகிஸ்தான் வெற்றி கண்டது. அதன்மூலம் 3 ஆட்டங்கள் கொண்ட ஒருநாள் தொடரை 2-1 என்ற கணக்கில் பாகிஸ்தான் கைப்பற்றியது.
சிம்பாப்வேயின் ஹராரே நகரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் முதலில் துடுப் பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 50 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 6 இலக்குளை இழந்து 260 ஓட்டங்களை குவித்தது.
அந்த அணியில் அதிகபட்சமாக அணித் தலைவர் மிஸ்பா உல் ஹக் 67 ஓட்டங்களையும், அஹமது ஷெஸாத் 54 ஓட்டங்களையும், நஸீர் ஜம்ஷெட் 38 ஓட்டங்களையும், உமர் அமின் 33 ஓட்டங்களையும் எடுத்தனர்.
சிம்பாப்வே தரப்பில் சதாரா 3 இலக்குகளை வீழ்த்தினார்.
அதன்பிறகு 261 ஓட்டங்கள் என்ற இலக்குடன் களமிறங்கிய சிம்பாப்வே அணி, பாகிஸ்தானின் பந்துவீச்சைத் தாக்குப் பிடிக்க முடியாமல் 40 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 152 ஓட்டங்களுக்குள் சுருண்டது.
அந்த அணியில் அதிகபட்சமாக வோலர் 48 ஓட்டங்களையும், அணித் தலைவர் ரெய்லர் 26 ஓட்டங்களையும் எடுத்தனர்.
பாகிஸ்தான் சார்பில் முகமது ஹபீஸ், அப்துர் ரெஹ்மான், சயீத் அஜ்மல் ஆகியோர் தலா 2 இலக்குகளை வீழ்த்தினர். (ற)

## ALLIANCE FRANÇAISE DE JAFFNA

*Learn French The French Way*

*பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்*

France, Canada வுக்கு திருமணம் முடித்து செல்வோர், மாணவர்கள் மற்றும் French கற்கவிரும்பும் யாவரும் (கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியாவைச் சேர்ந்தவர்களும்) படிக்கிறார்கள். France இல் தொடர்ந்து French கற்பதற்கும் Embassy விடயங்களுக்கும் எமது *Certificate* அவசியமாகும். ஏனெனில் உலகில் French கற்பிப்பதற்கு France அரசாங்கம் அங்கிகரிக்கும் ஒரே நிறுவனம் "AF" மட்டுமே.

புதிய வகுப்பு விரைவில்... உடன் பதிவு செய்யவும்...

61, Kachchery-Nallur Road, Jaffna T.P. 021 222 8093

(கச்சேரியை அடுத்து வரும் சந்தியில் அமைந்துள்ள வெள்ளை மாடிக்கட்டடம்)

## விற்பனையாகிறது

### தொண்டமனாறு தனு வெளியீட்டகத்தின்

G.C.E O/L, G.C.E A/L மாதிரி வினாத்தாள்களின் தொகுப்பு விடைகளுடன் ஒவ்வொரு பாடத்திற்கும் தனித்தனியாகத் தொகுப்பு நூல்கள் விற்பனையாகிறது.

★ குறிப்பிட்ட அளவு பிரதிகளே கையிருப்பில் உள்ளதால் பிரதிகளுக்கு முந்துங்கள்.

விற்பனையாளர்கள்

**ஸ்ரீ லங்கா புத்தகசாலை**

இல.234, கே.கே.எஸ் றோட், யாழ்ப்பாணம். 021 222 2573

(C/11698) (7.6.3)

## தேசிய சேமிப்பு வங்கி

(N.S.B)

ஆட்சேர்ப்புப் போட்டிப் பரீட்சைக்கான கருத்தரங்கு இன்று ஆரம்பம் திங்கள் முதல் வியாழக்கிழமை வரை மாலை 2.00 – 5.00 மணி வரை

யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு

(பழை. ஆஸ்பத்திரி வீதி, கொமர்ஷல் வங்கி அருகில்) T.P-0754164564

## இருப்பகற்றலுக்கான புத்தகங்கள்

விசேட விலைக் கழிவான 50% உடன் பெற்றுக் கொள்ளலாம்.

- தரம் 1-5 வரையான எல்லா பாடப் புத்தகங்கள் (சந்திரகுமார்)
- O/L, A/L Past Papers & Dictionary.
- கதைகள் (இந்தியன், இலங்கை), கவிதைகள், சமய நூல்கள், கொமன் புத்தகங்கள் என்பன கிடைக்கும்.

**ஸ்ரீ லங்கா புத்தகசாலை**

இல.234, கே.கே.எஸ் றோட், யாழ்ப்பாணம். 021 222 2573

(C/11697) (7.6.3)

## கிளி/வடிசன் கல்லூரி கிளிநொச்சி

S.L.E.A.S

கருத்தரங்கு

03.09.2013 செவ்வாய் பி.ப.4.00

பிரபல ஆசிரியர்

By - தவசேகர்

G.A.Q, B.A புதிய பிரிவுகள் ஆரம்பம்

சனி -07/09/2013

நேரம்- 11.00

தொடர்பு- 0775483470

## விசிற் விசா மறுக்கப்பட்ட விசா Sponsor

எல்லா நாடுகளுக்கும் பல வெற்றிகளைத் தேடித்தந்த விசா விற்பன்னர்களின் சட்ட ஆலோசனை

**திசைகாட்டி (பிறை) லிமிற்**

175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்

021 221 9016, 021 5689090

(39294)

## திசைகாட்டி காலை 8.30- மாலை 6.30 வரை

எல்லா நாள்களும் (சனி, ஞாயிறு உட்பட) மேற்படி நேர அட்டவணையின் பிரகாரம் திசைகாட்டி இயங்கும்.

**திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்**

175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

021 221 9016, 021 568 9090

## ரிக்கெற் இலவசம், இருப்பிடம் இலவசம் மாதம் 65000/= சம்பாதிக்கலாம்

வெறும் 3 இலட்சம் மட்டும் செலுத்தி மலேசியாவில் படிக்க உழைக்க அரிய வாய்ப்பு

(எல்லா நாள்களும் காலை 8.30 - மாலை 6.30 வரை)

**திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்**

175, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

தொ.பே: 021 221 9016, 021 568 9090

## ஆங்கிலப் பரீட்சை IELTS தேவையில்லை பகுதிநேரமாக இலட்ச ரூபாய் சம்பாதிக்கலாம்

ஐரோப்பிய நாடான சைப்பிரஸில் படிக்க, உழைக்க O/L மட்டும் இருந்தால் 21 வயது ஏனையோருக்கு A/L சித்தி முக்கியம்

(எல்லா நாள்களும் காலை 8.30- மாலை 6.30 வரை)

**திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்**

175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

தொ.பே: 021 221 9016, 021 568 9090

## துணைமுகவர்கள் தேவை

Teesside University UK பல்கலைக்கழகத்திற்கு மேற்படிப்பை தொடர இருக்கும் மாணவர்களை சேர்க்கும் பொருட்டு துணை முகவர்கள் தேவை. விபரங்களுக்கு

**APSS International**

**0773867695**

## BRITISH COLLEGE OF HIGHER STUDIES

BCHS

சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய நவீன தொழில் நுட்பத்துடன் வழங்கும் புதிய கற்கை நெறிகள்

### Spoken English With Grammar - Quick Learning Course (1 ½ Months)

ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்க விரும்புவர்களுக்காகவே நடாத்தப்படுகிறது. தொழில் புரிபவர்களுக்கு பிற்பகல், சனி மற்றும் ஞாயிறு வகுப்புக்கள் உண்டு.

A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு இது மிகவும் சிறந்தது.

வகுப்புக்கள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைவாகவும் (Video & Audio Visuals) கூடுதலான பயிற்சிகளுடன் நடாத்தப்படுகிறது.

### Diploma In English (2 Months)

ஒரு தொழில் தேடுவதாயினும் சரி உயர் கல்வியினைத் தொடருவதாயினும் சரி ஆங்கிலத்தின் தற்காலத்தேவையும் அதிலே உங்களின் புலமை என்பதும் இன்றியமையாதது. இத்தேவைகேற்ப எமது பாடத்திட்டங்களும் வகுப்புக்களும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. தொழில் புரிவோர் மாணவர்களுக்கென வகுப்புக்கள் உண்டு.

### IELTS

Toping centre for registering more IELTS candidates in Jaffna & Approved centre for IELTS online Registration system for Exam

< We gurantee minimum 6.0 band and above >

Duration: 2 ½ Months

### BI Exam - Student Visa மூலம் UK செல்பவர்களுக்கானது

City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கிலப் பரீட்சைகளை விட மிகவும் இலகுவானதுடன் இது G.C.E. (O/L) English இற்கு ஒப்பானது. இது British High Commission னால் முற்றிலும் அங்கீகரிக்கப்பட்டதுடன் எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கும் தோற்றமுடியும்.

### A1 Exm - Sponsor / Settlement Visa மூலம் UK செல்பவர்களுக்கான பரீட்சை

- U.K. அரசாங்கத்தினால் சிபார்சு செய்யப்பட்டது
- நம்பிக்கைக்குரிய சர்வதேச பரீட்சை
- எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கு தோற்ற முடியும் சான்றிதழின் வலிது கால எல்லை அற்றது.
- ஏனைய பரீட்சைகளை விட மிகவும் இலகுவானது

### Young Learners for English (YLE) (வயதெல்லை : 7 - 12)

இது ஒரு சர்வதேசப் பரீட்சை என்பதுடன் University of Cambridge வழங்கும் சான்றிதழ்

| Batch - 1 | Batch - 2 | Batch - 3 | Batch - 4 |
|---|---|---|---|
| 02.09.2013 | 07.09.2013 | 09.09.2013 | 14.09.2013 |

மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

Jaffna Branch: No. 15, Sirambiyady Lane, off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550

Vavuniya Branch: No. 3, 6th Lane, Vairavarkovil Veethy, Vairavarpulliyamkulam, Vavuniya. Tel: 024 324 5287

Hot Lines : 0777222422 0777585913, 0714299935, 0777730074

## Sky Computers (Pvt) Ltd

A/L பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களிற்கான புதிய கணினி வகுப்புக்கள் ஆரம்பம்

Ms office, Mobile Repairing, DTP, Web Design, Hardware, Video Mixing, Internet & E-mail, Graphic Design, Computer Type Setting, Kids Programs

TP-0212221417

சிங்களம்: புதிய பிரிவுகள் ஆரம்பம் (By:A.K.Moorthy)

பிரிவு 1 – திங், புதன் – 9:00 am பிரிவு 2 – செவ், வியா – 3.00 pm

89, கண்டி றோட், யாழ்ப்பாணம். (கச்சேரிக்கு அருகாமையில்)

## IIS வழங்கும்

கணனி, முகாமைத்துவ, ஆங்கில கற்கை நெறிகளுக்கான விஷேட சலுகைகள்

சந்தர்ப்பத்தை தவற விடாதீர்கள்

**2013 A/L** பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களே!!

உங்களுக்காகவே கணனி, முகாமைத்துவ, ஆங்கில கற்கை நெறிகளுக்கான விஷேட பிரிவுகள் ஆரம்பமாக உள்ளது. இப்பிரிவுகளில் தங்களை இணைத்துக் கொள்ளும் மாணவர்கள் Flash Memory ஒன்றினை இலவசமாக பெற்றுக்கொள்ள முடியும்.




ஒரு கற்கை நெறிக்கான கட்டணத்துடன் இரு கற்கை நெறிகளை பயின்று கொள்ளுங்கள்....

புதிய பிரிவுகள் ஆரம்பம்

07.09.2013, 09.09.2013, 12.09.2013 – காலை 10.00 மணி

மேலதிக விபரங்களுக்கு : 021 4 922 741

**INSTITUTE OF INFORMATICS STUDIES**

100 CLOCK TOWER ROAD, JAFFNA

T.P : 021 222 2831/021 492 2741 FAX : 021 222 6933

WEB : iis.edu.lk E-Mail : iis@iis.edu.lk

## நல்லூர் திருவிழாவை முன்னிட்டு மாபெரும் ரமி இசைத்தட்டு மலிவு விற்பனை

RAMIY® RECORDS — SWISS MADE

ரமி இசைத் தட்டு சுவிஸிலிருந்து நேரடியாக யாழ் மண்ணில். நல்லூர் கந்தன் வளாகத்தில் முகாமிட்டு ரமி இசைப்பிரியர்களுக்கு நம்பமுடியாத விலைக்கழிவில் ACD, DVD, MP3 போன்றவைகளை மொத்தமாகவும், சில்லறையாகவும் வழங்கிக் கொண்டிருக்கின்றார்கள்.

அனைவரும் வருகை தந்து இசைகேட்டு இன்புறுங்கள்! அனைத்துத் திருவிழாக்களும் முடியும்வரை, வல்லிபுரம் கிருஷ்ணர் கோயிலில் 7ஆம் திருவிழாவில் இருந்து உற்சவம் முடியும் வரையும்.

குறிப்பு: வடபகுதி மொத்த வியாபாரிகள் எம்மிடம் அனைத்து இசைவெளியீடுகளையும் பெற்றுக் கொள்ளலாம்

272, கோயில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். ரமி இசைத்தட்டு சுவிஸ் தொடர்புகளுக்கு: 077 904 9492

Gasomtenstr27, 8005 Zurich, Swiss. T.P: 004143 818 23 30, 0041 79 837 99 86 அன்புடன் காந்தன். C

(C/11663)(10.6.3)


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 02.09.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# எதிர்கால நம்பிக்கையுடன் தேர்தலில் வாக்களியுங்கள்

## கூட்டமைப்பு வேட்பாளர் சர்வேஸ்வரன்



> இம்மண்ணில் தனித்துவ மிக்க இனமாக எம்மை நாமே ஆள்வதற்கு வழி வகுக்கும் என்ற நம்பிக்கை யோடு எதிர்வரும் தேர்தலை இளைஞர்களும் எமது உறவுகளும் எதிர்கொள்ள வேண்டும்

தன்னம்பிக்கையுடனும் எமக்குள் ஒற்றுமையுடனும் தொடர்ந்து செயற்படுவோமாயின் இந்த மண்ணில் உரிமைகளுடன் கூடிய பாதுகாப்பான எதிர்காலத்தை நாம் மீட்டெடுக்க முடியும். எனவே, எதிர்காலத்தின் மீதான நம்பிக்கையுடன் தேர்தலை எதிர்கொள்ள வேண்டும். இவ்வாறு கேட்டுள்ளார் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் சார்பாக வட மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடும் கந்தையா சர்வேஸ்வரன்.

கடந்த வெள்ளிக்கிழமை கைதடியில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் உரையாற்றுகையிலேயே அவர் இந்த கோரிக்கையை முன்வைத்தார். அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்;

அரச தரப்பினரின் அச்சுறுத்தல்கள், ஜனநாயக அரசியல் நடவடிக்கைகளின் மீதான நம்பிக்கையீனம், போராட்டத்தினால் ஏற்பட்ட இழப்புகள் என்பவற்றின் காரணமாக தேர்தல்கள் உட்பட, ஜனநாயக அரசியல் நடவடிக்கைகளில் கடந்த காலங்களில் இளைஞர்களின் பங்களிப்பு ஏறத்தாழ இல்லை என்ற நிலையிலிருந்து. இன்று அதில் மாற்றம் ஏற்பட்டுள்ளது.

முள்ளிவாய்க்கால் முடிவுகளைத் தொடர்ந்து தேர்தல்களில் போட்டியிடவோ, தேர்தல் நடவடிக்கைகளில் பங்குபற்றவோ குறைந்தபட்சம் வாக்களிக்கச் செல்லவோ கூட மக்கள் பயந்திருந்தனர். அந்த நிலை இன்று இல்லை.

தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மிகப் பெரும் வெற்றியைப் பெறவேண்டும் என்று சர்வதேச சமூகம் எதிர்பார்ப்பதுடன், அத்தகைய வெற்றியைத்தொடர்ந்து எமது வடமாகாண அரசுடன் தாம் கைகோர்த்துச் செயற்பட எதிர்பார்த்துள்ளதாகவும் தெரிவித்துள்ளனர். வடக்கு மாகாண சபையானது அபிவிருத்தி விடயங்களை மட்டுமன்றி இனப் பிரச்சினை தீர்வு தொடர்பான விடயங்களையும் முன்னெடுத்துச் செல்லும் வகையில் அமையவேண்டும்.

இம்மண்ணில் தனித்துவ மிக்க இனமாக எம்மை நாமே ஆள்வதற்கு வழி வகுக்கும் என்ற நம்பிக்கையோடு எதிர்வரும் தேர்தலை இளைஞர்களும் எமது உறவுகளும் எதிர்கொள்ள வேண்டும்- என்றார். (ஐ)

# வேட்பாளர்களுக்கு விசேட பாதுகாப்பு வழங்க முடியாது

வேட்பாளர்கள் எவருக்கும் விசேட பாதுகாப்பு வழங்கப்பட மாட்டாது என சட்டம் ஒழுங்கு அமைச்சின் செயலாளர் நந்த மல்லவராச்சி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அமைச்சின் செயலாளர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

வட மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் ஒருவருக்கு விசேட பொலிஸ் பாதுகாப்பு வழங்குமாறு, ஆளும் கட்சி அமைச்சர் ஒருவர் கோரியுள்ளார்.

எனினும், இவ்வாறு வேட்பாளர்களுக்கு விசேட சலுகைகளை வழங்க முடியாது.

ஒரு வேட்பாளருக்கு மட்டும் அவ்வாறு விசேட பாதுகாப்பு வழங்கப்பட முடியாது. அவ்வாறு செய்தால் ஏனையவர்களுக்கும் விசேட பொலிஸ் பாதுகாப்பு வழங்க நேரிடும். எனவே இந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொள்ள முடியாது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ)

# விடுதலைப் புலிகள் பயங்கரவாதிகள் அல்லர்

## சி.வி.விக்னேஸ்வரன் கருத்து

தமிழீழ விடுதலைப் புலிகள் பயங்கரவாதிகள் என்று கருத முடியாது அவர்கள் ஓர் இனத்தின் விடுதலைக் காகப்போராடிய போராளிகள். இவ்வாறு தெரிவித்துள்ளார் வடமாகாணத்துக்கான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முதன்மை வேட்பாளர் சி.வி.விக்னேஸ்வரன்.

கொழும்பிலுள்ள வானொலி ஒன்றுக்கு வழங்கிய தொலைபேசி உரையாடலின் போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்;

சட்ட ரீதியாக தமிழீழ விடுதலைப் புலிகளை பயங்கரவாதிகள் என்று கூறமுடியாது. தமிழ் மக்களுக்கு எதிரான அடக்கு முறைகளுக்கு எதிராக ஆயுதமேந்தி போராட்டம் நடத்திய விடுதலைப் போராளிகளாகவே அவர்களை நான் பார்க்கிறேன். இதற்கிடையில் தமிழர்களின் பிரச்சினையை அறிந்த ஒரே கட்சி தமிழ் தேசியக் கூட்டமைப்பு எனவும், இதன் காரணமாகவே தமிழர்களுக்காக செயற்பட தமிழ் தேசியக் கூட்டமைப்பை தான் தெரிவு செய்ததாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ஐ)









உதயன்
02/09/2013

# வடமாகாண சபை

## யாழ் மாவட்ட தமிழரசுக்





திருமதி அனந்தி சசிதரன்
(எழிலன்)




பொ.ஐங்கரநேசன்




அரியகுட்டி பரஞ்சோதி




கலாநிதி
கந்தையா சர்வேஸ்வரன்




இம்மானுவல்
ஆனல்ட்




இரத்தினலிங்கம்
ஜெயசேகரன்





மு. தம்பிராசா




சி.வி.கே. சிவஞானம்




எம்.கே சிவாஜிலிங்கம்



முதன்மை வேட்ப

**க.வி. விக்னே**

(ஓய்வுபெற்ற உயர் நீதிம

**10**

X


**வடமாகாண சபைத் தேர்**


**தமிழரசுக் கட்சி வேட்**
**வாக்குகளை வழங்கி**

# தமிழ்த் தேசியக்

# பைத் தேர்தல் 2013

## ரசுக் கட்சி வேட்பாளர்கள்






க. தர்மலிங்கம்





கே.என். விந்தன்
கனகரத்தினம்




கே.சஜந்தன்




ச.சுகிர்தன்




தர்மலிங்கம் சித்தார்த்தன்




ந.வி. சுப்பிரமணியம்

ன்மை வேட்பாளர்

**விக்னேஸ்வரன்**

(ற உயர் நீதிமன்ற நீதியரசர்)

10




பா. கஜதீபன்




வே.சிவயோகன்




ச. குகதாஸ்

த் தேர்தலில் சின்னத்தில் போட்டியிடும்
வேட்பாளர்களுக்கு தங்கள் பொன்னான
ழங்கி அமோக வெற்றி பெறச் செய்யுங்கள்

(C/11235)

## பக் கூட்டமைப்பு

# ஆளும் தரப்பு அரசியல்வாதிகளும் கூட பெண்களின் இடர் குறித்து பேசுவதில்லை

## அரச தரப்பு வேட்பாளர் கீதாஞ்சலி கூறுகிறார்

கிளிநொச்சி, செப். 2

பெண்களுக்கு எதிராக நடைபெறும் வன்முறைகளை தட்டிக் கேட்பதற்கு இன்று எவரும் முன்வரவில்லை. ஆளும் தரப்பு அரசியல்வாதிகள் கூட தமது இலாபத்துக்காக அபிவிருத்தியை மட்டும் பேசுகிறார்களே தவிர பெண்களின் இடர்கள் தொடர்பில் கவனம் செலுத்துவதே இல்லை.

- இவ்வாறு தெரிவித்தார் வடமாகாண சபைத் தேர்தலில் போட்டியிடும் அரச தரப்பு வேட்பாளர் கீதாஞ்சலி நகுலேஸ்வரன்.




சிவில் பாதுகாப்புப் பிரிவு (சி.எஸ்.டி.) பெண்களுக்கு நானே வேலை பெற்றுக் கொடுத்தேன். அதன் காரணமாக அந்தப் பெண்கள் எனக்குப் பின்னால் அணி திரண்டுள்ளனர் என்றும் கீதாஞ்சலி குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நந்தி போல அபிவிருத்திப் பணிகளுக்கு இடையூறு செய்கிறது.

எமது சந்ததியான இளைய தலைமுறையினர், பாதிக்கப்பட்ட பெண்கள் என அனைவரும் நிம்மதியாக வாழ வேண்டுமெனில் நாம் அரசுடன் இணைந்து நிற்க வேண்டும். இது காலத்தின் கட்டாயம். அதனை மக்களுக்கு உணர்த்த வேண்டிய பொறுப்பு மாவட்ட அமைப்பாளர், ஜனாதிபதியின் வடமாகாண இணைப்பாளர்- என்ற வகையில் எனது கடமையாக உள்ளது.

இன்று கிளிநொச்சியில் வீதிகள் திருத்தப்பட்டுவிட்டன, மின்சாரம் வழங்கப்பட்டு, வீடுகள் அமைக்கப்பட்டு முன்னேற்றம் கண்டுள்ளதை அவதானிக்கலாம்.

மக்களது தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு நான் முன்னின்று செயலாற்றி வருகின்றேன்.

வடமாகாணத்தில் 60 விழுக்காடு பெண்களாக உள்ளனர். இவர்களில் 70 ஆயிரம் பேர் கணவனை இழந்தவர்கள். இவர்களின் பாதுகாப்பு உறுதி செய்யப்பட வேண்டும்.

நெடுங்கேணியில் 6 வயதுச் சிறுமி, நெடுந் தீவில் 15 வயதுச் சிறுமி, நல்லூரில் 13 வயதுச் சிறுமி, வட் டக்கச்சியில் 24 வயது இளம்பெண், கிருஷ்ண புரத்தில் 23 வயது இளம் பெண் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாகியிருக்கின்ற னர்.

கடந்த மாதத்தில் ஒரு முன்பள்ளி சிறுமி, பூநகரி யில் 48 வயதுப் பெண் பாலியல் துன்புறுத்த லுக்கு உள்ளாகியிருந்தனர். இவையெல்லாம் நிகழ்ந்தும் அரசியல்வாதிகள்மௌனமாக இருக்கிறார்கள்.

எனவேபெண்களின் பாது காப்பை உறுதி செய்ய ஆளும்தரப்பில் அதிகாரம் மிக்க பெண் தலைமைத் துவம்உருவாகவேண்டும். இதற்காகவே நான் அரசியலில் இறங்கியுள்ளேன்- என்றார். (ஜ-18)

# தொழிலாளர்களது உரிமையை பாதுகாக்கவே போட்டியிடுகிறோம்

## சோசலிச சமத்துவக் கட்சி

காரைநகர், செப். 2

பிரிவினை வாதத்தால் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது. தொழிலாளர்களின் உரிமைகளை வென்றெடுப்பதன் மூலமே பிரச்சினைக்குத் தீர்வுகாணலாம். வடமாகாணத்தில் தொழிலாளர் உரிமையை வலியுறுத்தி எமது கட்சி மாத்திரமே போட்டியிடுகிறது.

இவ்வாறு தெரிவித்துள்ளார் சோசலிச சமத்துவக் கட்சியின் முதன்மை வேட்பாளர் ப.திருஞானசம்பந்தர்.

சோசலிச சமத்துவக் கட்சியின் முதலாது தேர்தல் பிரசாரக் கூட்டம்காரைநகரில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அங்குஅவர்தொடர்ந்து உரையாற்றுகையில்:

முதலாளித்துவ கட்சிகள் எமது மக்களை அடக்கி ஒடுக்குகின்றன. அதற்காகவே அவை தேர்தலில் போட்டியிடு கின்றன.

உலக தொழிலாளர் வர்க்கத்தின் ஆதரவுடன் நாம் போட்டியிடுகின்றோம்.

நாட்டில் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் காரணமாக அமைவது முதலாளித்துவ அரசியல் கட்சிகளே.

புலிகள் ஏகாதிபத்திய நாடுகளாலேயே தோற்கடிக்கப்பட்டார்கள். சர்வதேச சமூகம் எனக் கூறும் அமெரிக்கா, இந்தியா, ஜப்பான் போன்ற முதலாளித்துவ நாடுகளே இதற்கு காரணம்.

தொழிலாளர் வர்க்கத்துக்கு சரியான அரசியல் தலைமை தேவை. அவ்வாறு இல்லாவிட்டால் மீண்டும் மீண்டும் போர் வெடிக்கும். இவ்வாறான பிரச்சினைகளை இல்லாதொழிக்கவே எமது கட்சி தேர்தலில் போட்டியிடுகின்றது.- என்றார். (ஜ-60)







